# பாரதீயம்

சிற்றிலக்கண நூல்

## இரண்டாம் பாகம்

பண்டிதமணி,
க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார்
செய்தது

பதிப்புரிமை
எஸ் எஸ். சண்முகநாதன் அன்ட் சன்ஸ்
யாழ்ப்பாணம்

1956

# பாரதீயம்

[சிற்றிலக்கண நூல்]

## இரண்டாம் பாகம்

பண்டிதமணி,
க. சு. நவநீத கிருஷ்ண பாரதியார்
செய்தது.

பிரசுர கர்த்தர் :
எஸ். எஸ். சண்முகநாதன் அண்ட் சன்ஸ்,
யாழ்ப்பாணம்
1956

PRINTED AT
THE PREMIER ART PRESS
PURASAWALKAM, MADRAS—7.

## முகவுரை

பாரதீயம் முதலாம் பாகத்தைப் பயிற்றுவித்த ஆசிரியர்களும், பயின்ற மாணவர்களும், ஏனைய தமிழ் மொழிச் சான்றோர்களும் பாரதீயம் இரண்டாம் பாகத்தையும் வரவேற்பதற்குப் பேரூக்கங் கொண்டிருப்பார் என்பது எனது நம்பிக்கை.

நம் முன்னோர் மொழி, கலை, நாடு முதலியவற்றில் படைத்துள்ள காதலையெல்லாம், அடிமைத் தளையிற்பட்டு மதிமயங்கிய காரணத்தால், பெரும்பான்மை பொருளுக்காகவும், சிறுபான்மை அதிகாரத்திற்காகவும் நம்மனோர் அறவே ஒதுக்கிவிட்டனர். அக்காலப் போக்குக்கியையப் பொருளையும் அதிகாரத்தையும் தருதற்குரிய பிறமொழியைப் பயிற்றுவோர்க்கே, அளத்தற்கரிய பெரும்பொருட்குவையை வாரி வழங்கியும், தமிழ்மொழியை விட்டுப் பிற மொழி பயிலும் மாணவர்க்குப் படிப்பிக்குங் காலப்பகுப்பில், பிற மொழி பயிற்றுங் காலப்பகுப்பிலும் தமிழ்மொழி பயிற்றுங் காலப் பகுப்பைக் குறைத்தும், தேர்ச்சிப் புள்ளியிலும் அவ்வாறே குறைத்தும், தமிழ் மொழியைப் படிப்பிப்போர்பாலும் படிப்போர்பாலும் மதிப்புக்குறைவைத் தானே இயையுமாறு செய்வித்தும், ஆட்சி மொழிப்பயிற்சியாளர் அதிகார உத்தியோகங்களின் மூலமாகவும், அன்ன பிறர் தங்கள் தங்கள் துறைப்போக்கு மூலமாகவும், தமிழ்ப் புலவோர்க்கு இடமின்றித் தாங்களே போலி நாட்டுத் தொண்டுகளை மேற்கொண்டு வருதலால், நாட்டுப் புலவோர் செல்வாக்குகளைக் குறைத்தும், நெறிமன்றங்களிலே குற்றத்துக்குரியார்மேல்

தொடரப்பட்ட வழக்குகளை அவரறியாத ஆங்கில மொழி யானே வழங்கி வரும் முகத்தால், தமிழ் மொழியும் தமிழ்க் கலைஞரும் இழிவுடையார் எனக்காட்டியும், இவ்வாறே கோடானுகோடி வகைகளிலே தமிழ்நாட்டுப் போக்கின் சீர் களைக் கெடுத்து வந்த அடிமைப் பேரிருட்பிழம்பானது தேசாபிமானம் மொழியபிமானம் முதலாய தெய்வங்களின் திருவருளால் அடங்கியொழியுமாறு செய்தற்கு, இறைவன் திருவருட்கதிரொளியானது வானமண்டலத்தில் வீச, மற்று அதன் எதிரொளி தமிழ் மண்டலத்திலும் வந்து பரவுதலால் அப்பேரிருட்பிழம்பு வலியற்றுப் போதலின், இந்நூலும் இனி வரும் நூல்களும் தமிழ் மக்களால் பெரிதும் பயன் பெறப் பேணப்பட்டு வருவன ஆகுக.

தங்கள் கருத்துக்களையெல்லாம், முப்பத்தொரு வகைத் தனி ஒலிகளாலும், வரிவடிவு வகைகளாலும், அவற்றாலான சொற்களாலும், உரைநடையாலும், பாட்டாலும், சின்னஞ் சிறு வயது முதலாக அறிவிக்கப் பயின்று வந்த பேரறிவும் பெரும்பயிற்சியும் பெற்ற சிறுவர்கட்கு, இவ்விலக்கணம் அவர்தம் தகுதிக்கு அதிகப்பட்டது என்றல் புனைந்துரை யாகும். அன்றியும், மெய்யறிவு நூல் முதலாய பலவற்றை யும் அறியும் அறிவின் விரைவு வலியை ஒரு சிறு நாழிகைக் குள் புலப்படுத்த வல்ல நம் மாணவர்க்கு இந்நூல் ஓர் இள நூலாகும் என்பது வெளிப்படை.

இன்னும் வெளிப்படுத்த இருக்கும் தொல்காப்பியம் முதலிய பேரிலக்கண உரைகள், திருவாசகப் பேருரை, அகநானூறு சிலப்பதிகாரப் பேருரைகள், திருக்குறள் உரை, முதலாய பலவற்றையும் தமிழ் உலகம் பயன்படுத்திக் கொள்ளுமாறு சான்றோர்கள் என்னை ஊக்குவார்களாக.

இந்நூலை எத்துணை வகையாலும் செப்பஞ்செய்தே வெளிப்படுத்தல் வேண்டும் என்னும் எனது வேணவா இப்போது ஒருவாற்றான் நிறைவெய்திற்று. இறைவன் இன்னும் எனது வேணவாவை முன்னின்று முடித்தருள்க.

இந்நூலை வெளிப்படுத்த முன் வந்த சண்முகநாதன் புத்தகசாலை அதிபராகிய திரு. சி. ச. குமாரசுவாமி அவர்கட்கும், இந்நூற்பிரதியை உடனிருந்து வினவி எழுதி நிறைவேற்றிய திரு. பூ. கந்தையா அவர்கட்கும் என் நன்றி உரியதாகுக.

2-6-'47.<br>
மாவிட்டபுரம்,<br>
தெல்லிப்பழை,<br>
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்,<br>
க. சு. நவநீதகிருஷ்ண பாரதி.

# பொருள் அடக்கம்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| **எழுத்திலக்கணம்** | | |
| 1. எழுத்து | ... | 6 |
| 2. எழுத்தின்வகைகள் | ... | 6 |
| i உயிர் எழுத்து | ... | 7 |
| (அ) குற்றெழுத்து | ... | 7 |
| (ஆ) நெட்டெழுத்து | ... | 7 |
| 1. பயிற்சி வினாக்கள் | ... | 8 |
| ii. ஒற்றெழுத்து | ... | 8 |
| (அ) வல்லினமெய் | ... | 9 |
| (ஆ) மெல்லினமெய் | ... | 9 |
| (இ) இடையினமெய் | ... | 9 |
| 2. பயிற்சி வினாக்கள் | ... | 9 |
| iii. உயிர்மெய் எழுத்து | ... | 9 |
| 3. பயிற்சி வினாக்கள் | ... | 10 |
| உயிர்மெய் எழுத்தின் வகைகள் | ... | 11 |
| i. வல்லின உயிர்மெய்க் குற்றெழுத்து | | 11 |
| ii. வல்லின உயிர்மெய் நெட்டெழுத்து | | 11 |
| iii. மெல்லின உயிர்மெய்க் குற்றெழுத்து | | 12 |
| iv. மெல்லின உயிர்மெய் நெட்டெழுத்து | | 12 |
| v. இடையின உயிர்மெய்க் குற்றெழுத்து | | 12 |
| vi. இடையின உயிர்மெய் நெட்டெழுத்து | | 12 |
| உயிர்மெய் நெட்டெழுத்துக்களின் படம் | | 14 |
| 4. பயிற்சி வினாக்கள் | ... | 16 |
| iv. ஆய்த எழுத்து | ... | 16 |

| பொருள் | | பக்கம் |
| --- | --- | --- |
| 5. பயிற்சி வினக்கள் | ... | 17 |
| 3. சுட்டும் வினவும் | ... | 17 |
| 6. பயிற்சி வினக்கள் | ... | 20 |
| சுட்டெழுத்து | ... | 20 |
| (அ) அகச்சுட்டு | ... | 21 |
| (ஆ) புறச்சுட்டு | ... | 22 |
| 7. பயிற்சி வினக்கள் | ... | 23 |
| வின எழுத்து | ... | 23 |
| (அ) அகவின | ... | 24 |
| (ஆ) புறவின | ... | 25 |
| வின விளக்கப் படம் | ... | 25 |
| 8. பயிற்சி வினக்கள் | ... | 26 |
| 4. குற்றியல் உகரம் | ... | 27 |
| குற்றியல் உகர அப்பியாசம் | ... | 28 |
| குற்றியல் உகரத்தின் வகை | ... | 29 |
| 9. பயிற்சி வினக்கள் | ... | 31 |
| 5. முற்றியல் உகரம் | ... | 31 |
| 10. பயிற்சி வினக்கள் | ... | 32 |
| 6. குற்றியல் இகரம் | ... | 33 |
| 11. பயிற்சி வினக்கள் | ... | 35 |
| 7. இன எழுத்துக்கள் | ... | 35 |
| 12. பயிற்சி வினக்கள் | ... | 36 |
| 8. மாத்திரை | ... | 36 |
| 13. பயிற்சி வினக்கள் | ... | 37 |
| 9. முதல் நிலே | ... | 38 |
| 10. இறுதி நிலே | ... | 38 |
| 11. போலி | ... | 39 |
| 14. பயிற்சி வினக்கள் | ... | 39 |

| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| **சொல் இலக்கணம்** | | |
| 12. சொல் | ... | 40 |
| 13. பகுபதம் பகாப்பதம் | ... | 41 |
| i. பகுபதம் | ... | 43 |
| இறந்தகால இடைநிலைகள் | ... | 45 |
| நிகழ்கால இடைநிலைகள் | ... | 45 |
| எதிர்கால இடைநிலைகள் | ... | 46 |
| பகுபத உறுப்புக்கள் | ... | 46 |
| ii. பகாப்பதம் | ... | 47 |
| 15. பயிற்சி வினாக்கள் | ... | 47 |
| 14. சொற்களின் வகை | ... | 48 |
| I. பெயர்ச்சொல் | ... | 49 |
| பெயர்ச்சொற்களின் வகை | ... | 50 |
| (அ) பொருட்பெயர் | ... | 51 |
| (ஆ) இடப்பெயர் | ... | 51 |
| (இ) காலப்பெயர் | ... | 51 |
| (ஈ) சினைப்பெயர் | ... | 51 |
| (உ) குணப்பெயர் | ... | 51 |
| (ஊ) தொழிற்பெயர் | ... | 51 |
| 16. பயிற்சி வினாக்கள் | ... | 52 |
| 1. திணை | ... | 53 |
| பொருள்களின் பகுப்பு | ... | 53 |
| உயர்திணை | ... | 54 |
| அஃறிணை | ... | 54 |
| அஃறிணை உயிர்களின் ஒலிகள் | ... | 55 |
| அஃறிணை உயிர்களின் இளமைப் பெயர்கள் | | 55 |
| 17. பயிற்சி வினாக்கள் | ... | 56 |
| 2. பால் | ... | 57 |

| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| | (அ) ஆண் பால் பெயர் ... | 58 |
| | (ஆ) பெண் பால் பெயர் ... | 59 |
| | (இ) பலர் பால் பெயர் ... | 59 |
| | (ஈ) ஒன்றன் பால் பெயர் ... | 60 |
| | (உ) பலவின் பால் பெயர் ... | 60 |
| | (ஊ) மரியாதைப் பன்மை ... | 61 |
| | (எ) பால் பகா அஃறிணைப் பெயர் ... | 61 |
| | ஆண் பால் பெண்பாற்சொற்களின் வேறுபாடு | 62 |
| 18. | **பயிற்சி வினாக்கள்** ... | 65 |
| 3. | **எண்** ... | 66 |
| | இருதிணையும் எண்ணும் ... | 66 |
| 19. | **பயிற்சி வினாக்கள்** ... | 67 |
| 4. | **இடம்** ... | 68 |
| | எண்ணும் இடமும் ... | 70 |
| | (அ) தன்மை ஒருமைப் பெயர் ... | 71 |
| | (ஆ) தன்மைப் பன்மைப் பெயர் ... | 71 |
| | (இ) முன்னிலை ஒருமைப் பெயர் ... | 71 |
| | (ஈ) முன்னிலைப் பன்மைப் பெயர் ... | 71 |
| | (உ) படர்க்கை ஆண் பால் பெயர் ... | 71 |
| | (ஊ) படர்க்கைப் பெண் பால் பெயர் | 71 |
| | (எ) படர்க்கைப் பலர் பால் பெயர் ... | 71 |
| | (ஏ) படர்க்கை ஒன்றன் பால் பெயர் | 72 |
| | (ஐ) படர்க்கைப் பலவின் பால் பெயர் | 72 |
| 20. | **பயிற்சி வினாக்கள்** ... | 72 |
| | (ஒ) விளிப் பெயர் ... | 73 |
| | (ஓ) பொதுப் பெயர்கள் ... | 73 |
| **ஆகுபெயர்** | ... | 73 |
| | 1. பொருளாகு பெயர் ... | 74 |

| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 2. சினையாகு பெயர் | ... | 75 |
| 3. இடவாகு பெயர் | ... | 75 |
| 4. இடத்தாகு பெயர் | ... | 75 |
| 5. காலவாகு பெயர் | ... | 76 |
| 6. குணவாகு பெயர் | ... | 76 |
| 7. தொழிலாகு பெயர் | ... | 77 |
| 21. பயிற்சி விஞக்கள் | ... | 77 |
| 5. வேற்றுமை | ... | 77 |
| 1. முதலாம் வேற்றுமை | ... | 87 |
| 22. பயிற்சி விஞக்கள் | ... | 90 |
| 2. இரண்டாம் வேற்றுமை | ... | 90 |
| 23. பயிற்சி விஞக்கள் | ... | 91 |
| 3. மூன்ரும் வேற்றுமை | ... | 92 |
| 24. பயிற்சி விஞக்கள் | ... | 93 |
| 4. நாலாம் வேற்றுமை | ... | 94 |
| 25. பயிற்சி விஞக்கள் | ... | 97 |
| 5. ஐந்தாம் வேற்றுமை | ... | 98 |
| 26. பயிற்சி விஞக்கள் | ... | 100 |
| 6. ஆரும் வேற்றுமை | ... | 101 |
| 27. பயிற்சி விஞக்கள் | ... | 102 |
| 7. ஏழாம் வேற்றுமை | ... | 103 |
| 28. பயிற்சி விஞக்கள் | ... | 104 |
| 8. எட்டாம் வேற்றுமை-விளி வேற்றுமை. | | 104 |
| 29. பயிற்சி விஞக்கள் | ... | 107 |
| வேற்றுமைகட்கு முடிக்குஞ்சொல் | ... | 107 |
| வேற்றுமைகளின் விரியும் தொகையும். | | 108 |
| 30. பயிற்சி விஞக்கள் | ... | 109 |
| வேற்றுமை விளக்கப் படம் | ... | 109B |
| 15. அல்வழி | ... | 110 |

| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| ii. வினைச்சொல் | ... | 111 |
| (அ) தெரிநிலை வினை | ... | 112 |
| (ஆ) குறிப்பு வினை | ... | 113 |
| 31. பயிற்சி வினாக்கள் | ... | 114 |
| (அ) தெரிநிலை வினைகளின் வகை | ... | 115 |
| க. தன்வினை | ... | 115 |
| கா. பிறவினை | ... | 115 |
| கி. செய்வினை | ... | 116 |
| கீ. செயப்பாட்டுவினை | ... | 116 |
| 32. பயிற்சி வினாக்கள் | ... | 117 |
| i. உடன் பாடு | ... | 118 |
| ii. எதிர்மறை | ... | 118 |
| 33. பயிற்சி வினாக்கள் | ... | 119 |
| க. வினைமுற்று | ... | 119 |
| (ஆ) தன்மை வினைமுற்று | ... | 121 |
| i. தன்மை ஒருமை வினைமுற்று | ... | 121 |
| தன்மை வினைமுற்று விளக்கப் படம் | ... | 122B |
| ii. தன்மைப் பன்மை வினைமுற்று | ... | 123 |
| 34. பயிற்சி வினாக்கள் | ... | 124 |
| (ஆ) முன்னிலை வினைமுற்று | ... | 124 |
| i. முன்னிலை ஒருமை வினைமுற்று | ... | 125 |
| ii. முன்னிலைப் பன்மை வினைமுற்று | ... | 125 |
| 35. பயிற்சி வினாக்கள் | ... | 126 |
| (இ) படர்க்கை வினைமுற்று | ... | 127 |
| i. ஆண் பால் வினைமுற்று | ... | 127 |
| ii. பெண் பால் வினைமுற்று | ... | 128 |
| iii. பலர் பால் வினைமுற்று | ... | 129 |
| iv. ஒன்றன் பால் வினைமுற்று | ... | 130 |
| v. பலவின் பால் வினைமுற்று | ... | 131 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| இருதிணை ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவான குறிப்புவினை முற்றுக்கள் | 132 |
| 36. பயிற்சி வினாக்கள் ... | 132 |
| (ஈ) செய்யும் என்னும் வினைமுற்று ... | 133 |
| (உ) ஏவல் வினைமுற்று ... | 134 |
| எதிர்மறை ஏவல் வினைமுற்று ... | 134 |
| (ஊ) வியங்கோள் வினைமுற்று ... | 135 |
| எதிர்மறை வியங்கோள் வினைமுற்று | 136 |
| 37. பயிற்சி வினாக்கள் ... | 136 |
| கா. எச்சம் ... | 137 |
| i. பெயர் எச்சம் ... | 137 |
| ii. வினை எச்சம் ... | 140 |
| 38. பயிற்சி வினாக்கள் ... | 142 |
| (இ) வினையாலணையும் பெயர் ... | 143 |
| (ஈ) தொழிற்பெயர் ... | 144 |
| 16. வினைச்சொற்களுள் பகுதி காணும் முறை | 145 |
| 17. தெரிநிலைவினைச் சொற்களுக்கு வாய்பாடு | 145 |
| வினைச்சொற்களின் வாய்பாட்டுதாரணப் படம் | 145 |
| சொல்லிலக்கணங் கூறல் ... | 145 |
| 18. உரைநடைப் பங்கீடு ... | 145 |
| 39. பயிற்சி வினாக்கள் ... | 150 |
| iii. இடைச்சொல் ... | 150 |
| iv. உரிச்சொல் ... | 152 |

# தோற்றுவாய்

முருகன் என்பவன் ஒரு குற்றமும் செய்யாதவன். பல தீயோர்கள் அவனுடைய காணிகளைப் பறித்துக் கொண்டதும் அன்றி, அவனைக் கள்வன் என்று குற்றம் சாட்டித் தண்டனையும் அடைய வைத்தார்கள். முருகன் தான் குற்றவாளியல்லன் என்பதை உணர்த்துவதற்கு ஏற்ற சொற்களையும் சொற்றொடர்களையும் ஏற்ற முறையில் அமைத்துக் கூறும் வல்லபம் அற்றவனாய் இருந்தான். அவ்வாறு இருந்தபடியால், தன் காணிகளை இழந்ததும் அன்றி, நெறிமன்றத் தலைவரால் தண்டனையும் பெற்றான். அவன் நெறிமன்றத்தலைவரிடம் தன்கருத்தை ஏற்றமுறையில் சொல்லியிருப்பானேல் காணியையும் இழந்துவிடாமல் தண்டனையும் பெறாமல் இருப்பான். பொய் வழக்காளிகள் தண்டனை பெறுவர்.

மாணவர்களே! உங்கள் கருத்தைப் பிறருக்குணர்த்தக் கற்றுக்கொள்ளாவிடில் நீங்களும் அல்லற்பட நேரிடும்.

சொற்கள் கோபத்தையும் உவகையையும் பிறப்பித்தற்கு ஒரு காரணமாய் இருக்கின்றன. நாம் உபயோகிக்கும் சொற்களினாலே அவைகள் பிறப்பதை நாம் நேரே பார்க்கின்றோம். இட்லர், மகாத்துமாகாந்தி போன்ற தலைவர்கள், நல்லதோ தீயதோ தாம் நினைத்ததை நினைத்தவாறே கைக்கொள்ளுமாறு வெளியீடுகளினாலே செய்துவிடுகிறார்கள். இதன் காரணம் சொல் வன்மையாகும். இவ்வாறாதலினாலே சொற்கள் தூய்மை உடையனவாக இருத்தல் வேண்டும் என்பது பெறப்படும்.

சொல்லறியாதவன் விலங்கோடு ஒப்பானவன் ஆவன். காலத்துக்கும் இடத்துக்கும் அப்பாற்பட்ட விடயங்களை மொழியறிவுள்ளவன் அறிந்துகொள்வான். மொழியறிவுள்ளவன் அறிவதுபோல மொழியறிவற்றவன் அறியமாட்டான். மனத்துக்கப்பாற்பட்ட இறைவனையும் மொழியறிவுள்ளவன், அவ்வறிவினாலே அறிந்துவிடுவன். மொழியறிவு நிறையுந்தோறும் நிறையுந்தோறும் மனிதத் தன்மை கடவுள் தன்மைகள் உண்டாகின்றன. அவ்வறிவு குறையுந்தோறும் விலங்குத்தன்மை உண்டாகின்றது.

**" விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்**
**கற்றாரோ டேனை யவர்."**

என்னும் திருக்குறளும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

ஆகவே, மனிதனுடைய ஆக்கம், கேடு என்னும் இரண்டற்கும் முறையே மொழியறிவும், அஃதில்லாமையும் காரணமாகின்றன என்பது புலப்படும்.

தத்தமக்கு மேலானதாகிய ஒழுக்க நெறியில் வழுவினவர்களைத் திருத்தும் வண்ணம் தண்டிப்பதற்குச் சட்ட நூல்கள் இருப்பது போலவே, ஒழுக்கம் இன்னது என்றுணர்த்தும் சொல்லுக்கும் பிழைகள் வாராதபடி நிலைபெறுத்தச் சட்டங்களாகிய **இலக்கணம்** இன்றியமையாதிருக்கின்றது.

ஒழுக்க வரம்புகள் தம் செயல்கட்கு இடம் கொடாமையாலே அவற்றை வெறுத்து மீறித் தம் மனம் போனபடியே நடக்கும் காமுகரைப்போல, இலக்கண வரம்புகளை வெறுத்து மீறுவோரும் இக்காலத்துள்ளார்.

சான்றோர்கள் சொற்களையும், சொற்றொடர்களையும், செய்யுட்களையும், அவற்றால் உணரப்படும் பொருள்களையும் பலவேறு சமயங்களில், பலவேறிடங்களில் வழங்கிய அமைப்புக்களின் தன்மைகளையெல்லாம் திரட்டித் தொகுத்தும், வகுத்தும், விரித்தும் அமைத்துக்கொண்ட அமைதி வரலாறே **இலக்கணமாகும்.** தேச ஆட்சிக்குச் சட்டம் இன்றியமையாதிருத்தல் போலவே, மொழியாட்சிக்கு இலக்கணம் இன்றியமையாதது.

நெறிகளைத் தெரிந்த நெறிமன்றத்தலைவர்களால் பல இடங்களிலும் பல வகைகளிலும் தீர்க்கப்பட்ட வழக்குகளின் முடிபுரைகள் எல்லாம் ஒருங்கே திரட்டப்பட்டு,

**ஒழுக்க நூல்**
**வழக்கு நூல்**
**தண்டனை நூல்களாக**

வெளிப்படுத்தப்படும்.

இவற்றிலே செய்யத்தக்கவை இவை, செய்யத்தகாதவை இவை என்ற விதி விலக்குகள் அமைக்கப்பட்டிருக்கும். இந்நூல்களைச் செவ்வனே பயின்றவனே நெறிமன்றத் தலைவன் ஆதற்கு உரியவனாவன். அவன் கீழ் வழக்கு நெறிகளை எடுத்துரைப்போரும், வழக்காளி எதிரிகளும், ஏனையோரும் அடங்கி நடப்பர்.

இவ்வாறே எழுத்துச் சொல் பொருள்களை வழங்குதற்குரிய அமைப்புக்களுக்குச் சான்றோர்களுடைய தீர்ப்புக்களே முடிபாகும். அம்முடிபுகளையெல்லாம் கற்றுணர்ந்த சான்றோனுக்குக்கீழ் உலகமே அடங்கி நடக்கும்.

இவ்விலக்கண முடிபுகளுள் சில காலத்திற்கேற்றபடி விலக்கப்பட்டும், சில புதியனவாகச் சேர்க்கப்பட்டும் வரும்.

முற்காலத்திலே தலைப்பாகைக்குச் சிலுவையடையாளம் இடப்பட்டு அணியப்படுதல் வேண்டுமென்ற சட்டம் இருந்தது. இக்காலத்தில் அது நீக்கப்பட்டது.

முற்காலத்திலே சனப்பிரதிநிதிகளை அரசாங்கமே தெரிவு செய்து வந்தது. இக்காலத்திலே மக்களே அங்கத்தவர்களைத் தெரிவு செய்கிறார்கள்.

இவற்றுள், முன்னையதில் பழைய சட்டம் நீக்கப்பட்டது; பின்னையதில் புதிதாக ஒரு சட்டம் இயற்றப்பட்டது.

இதில் நீக்கப்பட்ட சட்டம் சரித்திரத்துக்கு உதவுவதன்றி வழக்காற்றுக்கு உதவாது.

சட்டங்கள் காலத்துக்கேற்றவாறு விலக்கப்பட்டும் விதிக்கப்பட்டும் வருதல் போலவே, இலக்கண முடிபுகளும் காலத்துக்கு ஏற்றவாறு பல விலக்கப்பட்டும் சில புதியனவாகச் சேர்க்கப்பட்டும் வருதல் உண்டு.

பழையகாலத்தில் ஆதனுக்கு + தந்தை = ஆந்தை என வழங்கி வரப்பட்டது. இக்காலத்தில் இவ்வழக்கம் கைக்கொள்ளப்படவில்லை.

"நான் வந்தனென்," எனப் பழையகாலத்தில் கூறப் படும். இக்காலத்தில் "நான் வந்தனன்," எனக் கூறுவர். இது புதிகாகக் கொள்ளப்பட்டது.

இவற்றுள், முன்னையது தள்ளப்பட்டது; பின்னையது புதிதாகக் கொள்ளப்பட்டது.

முற்காலச் சட்டங்கள் தள்ளப்படின், அவை கைக் கொள்ளாது விடப்படுதல்போல, இலக்கண முடிபுகளுள் பழைய முடிபுகள் தள்ளப்படினும், கையாளாது விடப் படுதல் இல்லை. ஏனென்றால், பழையகால இலக்கியங் களைப் பயிலுதற்கு அவை வேண்டப்படுதலின். புதியகால இலக்கியங்களைப் பயிலுதற்குப் புதியகால இலக்கணங்க ளும், பழைய கால இலக்கியங்களைப் பயிலுவதற்குப் பழைய கால இலக்கணங்களும் இன்றியமையாதன.

தானே தனித்து ஒரு விஷயத்தைக் கண்டு பிடித்தல் சிரமம். பிறரோடு அளவளாவியே விஷயங்களைக் கண்டு பிடித்தல் வேண்டும். அவ்வாறு கண்டு பிடிக்கப்படும் விஷயங்கள் தெளிவுடையனவாக அமையும். ஒருவன் கணித சாஸ்திரத்திலே சிரத்தையுடையவனாகித் தனித் திருந்து, தன்னுடைய கலை வளர்ச்சிக்காகப் பெரிதும் முயற்சி செய்து வந்தான். அவன் சில காலத்துள் தன் னுடைய கல்வி வளர்ச்சியைப் பிறருக்குணர்த்திப் பெருமையடையவேண்டி ஒன்று கலைக் கழகத்துக்குப்* போனான். அவனுடைய பிரசங்கத்தைக் கேட்கப் பலர் ஆவலோடு அங்கே வந்து நிறைந்திருந்தார்கள். அவனும் தன்னுடைய பேச்சைப் பேசி முடித்தான். வந்திருந்த வர்கள் அவனுடைய அறிவு வளர்ச்சி குறைவாய் இருப்ப தைக் கண்டு ஏமாற்றம் அடைந்தார்கள். முடிவில் ஒன்று கலைக்கழகத் தலைவன், அவன் தனிமையாய் இருந்து ஆராய்ந்து வந்தபடியால் அவனுடைய அறிவு குறைவாய் இருப்பதை விளக்கிக் காட்டினான். அவனும் ஏமாற்ற மடைந்தான்.

* ஒன்று கலைக்கழகம் = University

ஆதலால் பேசவும், பாடவும், எழுதவும், அவ்வத் துறைகளில் பயிலவும் விரும்புவோர், எந்த எந்தத் துறையில் எவ்வெவர் எங்கெங்த முடிபுகளைக் கையாண்டார்கள் என்று அவர்கள் இயற்றிய நூல்களோடு சேர்ந்தும், பெரியார்களோடு சேர்ந்தும் பயின்று வரின் அவரது புலமை பெரும்புலமையாகும். அதனுல் உலகத்துக்கும் தமக்கும் பெரும்பயன் உண்டாம். அங்ஙனம் பயிலாது தாமே தனித்திருந்து பயின்றுவரின், முன்பு கணிதசாஸ்திரம் தனித்துப் பயின்ருன் வருந்தியது போல வருந்த நேரிடும். ஆகையினுலே, நாம் கல்வியை வளர்ப்பதற்குப் பெரியோர்களுடைய நூல்களையேனும், அவற்றைத் தம்மாற்றலால் விளங்க முடியாதவர்கள், அந்நூல்களோடு பயின்ற பெரியோர்களையேனும் சார்ந்துகொள்ளுதல் நன்மை பயப்பதாகும்.

சான்ருேர்கள் இயற்றிய இலக்கண நூல்களிலே, பொருள் இயல்புகளும், சொற்ருெடர் இயல்புகளும், சொல்லியல்புகளும், எழுத்தியல்புகளும் முதலாயவை உணர்த்தப்படும்.

சில கோடுகளைக் கீறிவிட்டு மிகச்செய்மைக்கண் உள்ள விஷயங்களையும், காலத்துக்கப்பாற்பட்ட விஷயங்களையும் மாணவர்களும் ஏனையோரும் தமது முன்னிலையிற் கொண்டுவந்து காண்கிருர்கள். இக்கோடுகளாகிய வரிவடிவங்கள், நமது பேச்சிலே ஒலிவடிவங்களாக இருக்கின்றன. தனித்தனி முப்பத்தொரு ஒலி வடிவுகளை நம் முன்னோர்கள் கண்டறிந்தனர். இவ்வொலிவடிவ வரிவடிவங்களை எழுத்துக்கள் என்பர். இவ்வெழுத்துக்களைக் கண்டுபிடித்த சான்ருேர்களுடைய அறிவாற்றல் வியப்புக்குரியனவன்றே? இதிலும் சுருங்கிய முறையில் "கட்கட்" என அறிவிக்கும் தந்தியின் ஆற்றல் மிகுந்த வியப்புடையதே. நிற்க.

முன்னர் எழுத்தைப்பற்றிய தன்மையைச் சிறிது கூறினேம். அவற்றின் வகைகளையும் தன்மைகளையும் முதலாவதாகவும், அவற்ருலாக்கப்படும் சொல்லியல்புகளையும் வகைகளையும் இரண்டாவதாகவும் அறிந்துகொள்வோம்.

## எழுத்து இலக்கணம்

1. **எழுத்து :—**

சொற்களை ஆக்குவதற்குக் காரணமான ஓசைகளே எழுத்துக்கள் எனப்படும். நாம் பேசுகின்ற சொற்களிலே உள்ள தனிப்பட்ட ஓசைகளை **ஒலி வடிவ** எழுத்துக்கள் என்றும், அவற்றையே காகிதங்களில் எழுதும் போது அவற்றை **வரி வடிவ** எழுத்துக்கள் என்றும் கூறுகின்றோம். ஆகவே, எழுத்துக்கள்,

**ஒலி வடிவம்**

**வரி வடிவம்**

ஆகிய இரு வடிவங்களை உடையன என்பது அறிந்து கொள்ளப்படுகின்றது.

**உதாரணம் :—**

**"முருகன்"**

முருகன் என்பது ஒரு சொல். அது, மு, ரு, க, ன் என்னும் நான்கு தனிப்பட்ட ஓசைகளையுடைய எழுத்துக் களாலே ஆக்கப்பட்டிருப்பதை அறிந்துகொள்ளுக. [**ஒலி வடிவு வரி வடிவு** ஆகிய இரு வடிவத்திலும் பொருத் திப் பார்த்துக்கொள்க.]

2. **எழுத்தின் வகைகள்.—**

தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்கள்,

1. **உயிர் எழுத்து**
2. **ஒற்று எழுத்து**
3. **உயிர்மெய் எழுத்து**
4. **ஆய்த எழுத்து**

என நான்கு வகைப்படும்.

i. உயிர் எழுத்து :—

உயிர்க்க (மூச்சுவிட) வரும் எழுத்துக்கள் **உயிர் எழுத்துக்கள்** எனப்படும். (மூச்சு விடும் நம்மைப் போலவே உயிர் உள்ளன என்று நாம் நினைக்கும்படி உயிர் எழுத்துக்கள் என்பர்.) மெய் (உடம்பு) எழுத்துக்களை இயங்கச் செய்யும் உயிர் போன்று இருத்தலால் **உயிர் எழுத்துக்கள்** என்று கூறுதலும் உண்டு. இவை **ஆவி எழுத்துக்கள்** என்றும் கூறப்படுகின்றன. இவ்வெழுத்துக்கள், **அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ** என்னும் பன்னிரண்டுமாம்.

இவற்றுள், **ஆ, ஈ, ஊ** என்னும் எழுத்துக்களைக் குறுக்கி மூச்சு விட்டு ஒலிப்போமாஞல், அவ்வெழுத்துக்கள் தோன்றப்பெரு. அவ்வெழுத்துக்கள், அவ்வாறு குறுக்கி மூச்சுவிட்டு ஒலிக்கப்படும் போது, '**ஆ**' என்பது '**அ**' எனவும், '**ஈ**' என்பது '**இ**' எனவும், '**ஊ**' என்பது '**உ**' எனவும் ஒலிக்கும். இவ்வாறன்றி, **ஆ, ஈ, ஊ** என்பவற்றை நீட்டி மூச்சுவிட்டு ஒலிக்கச்செய்யும்போது அவை தோன்றப்பெறும். ஆகவே, உயிர் எழுத்துக்கள்,

**குறுக்கி முச்சு விட வருவன**
**நீட்டி மூச்சு விட வருவன**

என இரு வகைப்படுகின்றன.

குறுக்கி மூச்சு விட வருவன **குற்றெழுத்துக்கள்** எனவும்,

நீட்டி மூச்சு விட வருவன **நெட்டெழுத்துக்கள்** எனவும் கூறப்படும்.

(அ) குற்றெழுத்து :—

குற்றெழுத்துக்கள், **அ, இ, உ, எ, ஒ** என்னும் ஐந்துமாம். இவை **குறில்** எனவும் கூறப்படும்.

(ஆ) நெட்டெழுத்து :—

நெட்டெழுத்துக்கள், **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ** என்னும் ஏழுமாம். இவை **நெடில்** எனவும் கூறப்படும்.

**i. பயிற்சி வினாக்கள் :—**

1. எழுத்தாவது யாது ?
2. எழுத்துக்கள் எவ்வகை வடிவங்கள் உடையன ?
3. எழுத்துக்கள் எத்தனை வகைப்படும் ?
4. உயிர் எழுத்தாவது யாது ?
5. அஃது எத்தனை வகைப்படும் ? அவை எவை ?
6. அணில், ஆடு, இறகு, உறி, ஊர், ஐயர் இவற்றி லுள்ள உயிர் எழுத்துக்கள் எவை ?
7. ஊஞ்சல், ஒற்றுமை, அரசன், ஆசை, ஔவை, ஏணி, எலி இவற்றில் உள்ள குறில், நெடில்கள் எவை ?

**ii. ஒற்று எழுத்து :—**

மூச்சை வெளியே விடாமல் உள்ளுறவே ஒற்றி அழுத்துதலினால் ஒலிக்கும் எழுத்துக்கள் ஒற்றெழுத்துக் களாம். இவ்வெழுத்து மூச்சின் உதவியின்றி வாராது. உடம்பு (மெய்) எப்படி உயிரின் உதவிகொண்டு இயங்கு கிறதோ, அப்படியே இவ்வொற்று எழுத்துக்களும் ஒலிக் கும் காரணத்தால், இவை உடம்பு (மெய்) எழுத்து என்றுங் கூறப்படும். இவை **க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்** என்பனவாம்.

**மெய் எழுத்துக்கள் :**

**மூச்சை விரைவாக வலித்து அழுத்தி ஒற்ற ஒலிப்பனஎன [வும், மூச்சை மெல்ல அழுத்தி ஒற்ற ஒலிப்பன எனவும், மூச்சை இவ்விரண்டுவகைக்கும் இடைப்பட அழுத்தி ஒற்ற ஒலிப்பன** எனவும் மூன்று வகைப்படுகின்றன.

வலிந்து ஒற்ற ஒலிப்பன **வல்லினம்** எனவும்,

மெலிந்து ஒற்ற ஒலிப்பன **மெல்லினம்** எனவும்,

இடைப்பட ஒற்ற ஒலிப்பன **இடையினம்** எனவும் கூறப்படும்.

(அ) **வல்லின மெய் எழுத்து :—**

வல்லினமெய்கள், **க், ச், ட், த், ப், ற்** என்னும் ஆறு மாம். இவை, **வன்கணம், வலி** எனவும் பெயர் பெறும்.

(ஆ) **மெல்லின மெய் எழுத்து :—**

மெல்லினமெய்கள், **ங், ஞ், ண், ந், ம், ன்** என்னும் ஆறுமாம். இவை, **மென்கணம், மெலி** எனவும் பெயர் பெறும்.

(இ) **இடையின மெய் எழுத்து :—**

இடையின மெய்கள், **ய், ர், ல், வ், ழ், ள்** என்னும் ஆறுமாம். இவை **இடைக்கணம், இடை** எனவும் பெயர் பெறும்.

2. **பயிற்சி வினாக்கள் :—**

1. ஒற்று எழுத்தாவது யாது? அது வேறெவ்வாறு கூறப்படும்?
2. அஃது எத்தனை வகைப்படும்? அவை எவை?
3. தோட்டம், ஆண்கள், அவ்வியம், பருந்து, வள்ளல், தாய், வாழ்க, அற்பம், வருத்தம், பந்து, சிரிப்பு, பார்வை, அம்மா, அங்ஙனம், அச்சம், வல்லவன், துஞ்சினன்—இவற்றிலுள்ள மூவகை மெய் எழுத்துக்களையும் காட்டுக.

iii. **உயிர்மெய் எழுத்து :—**

உயிர் எழுத்துக்களும் மெய் எழுத்துக்களும் கலந்து ஒரே ஒலியுடையனவாய் இசைக்கும் எழுத்துக்கள்தாம் **உயிர்மெய் எழுத்துக்கள்** எனப்படும்.

உதாரணம் :—

"**க்**" என்னும் மெய்யுடன் "**அ**" என்னும் உயிர் கலந்து ஒலிக்க, "**க**" என்னும் உயிர்மெய் பிறக்கிறது. இவ்வாறே **பதினெட்டு மெய்களையும் பன்னிரண்டு உயிர்களை**யும் கலந்து ஒலித்துப் பாருங்கள்.

"**க**" என்ற உயிர்மெய்யை நாம் இசைக்கும்போது "**க்**" என்னும் மெய் ஓசை முன்னும், "**அ**" என்னும் உயிர் ஓசை பின்னும் ஆக (க் + அ = க) ஒலிப்பதைக் காண்கிறோம். அவ்வாறு ஒலிப்பதனால், அதனை "**மெய் உயிர் எழுத்து**" என்று கூறாமல், '**உயிர்மெய் எழுத்து**' என்று கூறுதல் தக்கதா? ஆம்; அது தக்கதே. எப்படி அது தக்கது என்பதைப் பார்ப்போம்.

இராமன் ஒரு மாட்டைக் கொண்டு வருகிறான் என்று வைத்துக்கொள்வோம். இராமன் மாட்டின் பின்னால் நின்று செலுத்திக்கொண்டு வருகிறான். இப்போது இராமன் பின்னாகவும் மாடு முன்னாகவும் வருகிறார்கள். அப்படி வரும்போது இராமன் மாட்டைக் கொண்டுவந்தான் என்பதா, மாடு இராமனைக் கொண்டு வந்தது என்பதா? எது தக்கது? **இராமன் மாட்டைக் கொண்டு வந்தான்** என்பதே தக்கதாம். ஏன் அப்படிச் சொல்ல வேண்டுமென்றால், இராமன் மாட்டைச் செலுத்தும் தலைவனாகவும், மாடு செலுத்தப்படுவதாகவும் இருப்பதனால். இதுபோலவே உயிர் ஓசை பின்னும் மெய் ஓசை முன்னுமாக வந்தாலும், உயிரே மெய் ஓசையையும் வெளிப்படுத்திக்கொண்டு வருவதனால், "மெய் உயிர்" என்று சொல்லாமல் (தலைமையைக் கொண்டு) **உயிர்மெய்** என்று சொல்லுகிறோம்.

3. **பயிற்சி வினாக்கள் :—**

1. உயிர்மெய் எழுத்தாவது யாது?
2. அஃது ஏன் மெய் உயிர் என்று சொல்லப்படாமல் உயிர்மெய் என்று சொல்லப்படுகிறது?
3. "ங்" என்ற மெய்யோசையையும் "ஆ" என்ற உயிர் ஓசையையும் கலந்து ஒரே ஓசை அமைய இசைக்க.
4. அவ்வாறே "ற்" என்ற மெய்யையும் "இ" என்ற உயிரையும் சேர்த்து இசைக்க.

**உயிர்மெய் எழுத்தின் வகைகள் :—**

உயிர்மெய் எழுத்துக்கள்,

1. வல்லின உயிர்மெய்க் குற்றெழுத்து
2. வல்லின உயிர்மெய் நெட்டெழுத்து
3. மெல்லின உயிர்மெய்க் குற்றெழுத்து
4. மெல்லின உயிர்மெய் நெட்டெழுத்து
5. இடையின உயிர்மெய்க் குற்றெழுத்து
6. இடையின உயிர்மெய் நெட்டெழுத்து

**1. வல்லின உயிர்மெய்க் குற்றெழுத்து :—**

உயிர்க்குற்றெழுத்துக்கள் ஐந்தெனவும், வல்லின மெய் எழுத்துக்கள் ஆறு எனவும் முன்னரே அறிந்திருக்கின்றோம். இவ்வுயிர்க் குற்றெழுத்துக்கள் ஐந்தும் வல்லினமெய் ஆறும் சேர்ந்து ஒரே ஓசையுடையனவாக இசைக்கும்போது ($5 \times 6 = 30$) முப்பது உயிர்மெய்க் குறில்கள் ஒலிக்கின்றன. உயிர்க்குற்றெழுத்துக்கள் வல்லினத்தோடு சார்ந்து வருதலாலே **வல்லின உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள்** எனப்பட்டன.

**2. வல்லின உயிர்மெய் நெட்டெழுத்து :—**

உயிர் நெட்டெழுத்துக்கள் ஏழும் வல்லினமெய் ஆறோடும் ஒன்றாகச் சேர்ந்து இசைக்கும்போது, ($7 \times 6 = 42$) நாற்பத்திரண்டு **வல்லின உயிர்மெய் நெட்டெழுத்துக்களும்** தோன்றுகின்றன.

குறிப்பு :—வல்லின உயிர்மெய்க்குறில், வல்லின உயிர்மெய் நெடில் என்னும் இரு வகையான எழுத்துக்களையும் சேர்த்து வல்லின உயிர்மெய் எழுத்து என்று கூறுதலும் உண்டு. ஆகவே, வல்லின உயிர்மெய் **எழுபத்திரண்டு** ஆயிற்று.

3. மெல்லின உயிர்மெய்க் குற்றெழுத்து :—

உயிர்க் குற்றெழுத்துக்கள் ஐந்தும், மெல்லினமெய் ஆறோடும் ஒன்ருகச் சேர்ந்து இசைக்கும்போது, (5 × 6 = 30) முப்பது மெல்லின உயிர்மெய்க் குற்றெழுத்துக் களும் இசைக்கின்றன.

4. மெல்லின உயிர்மெய் நெட்டெழுத்து :—

உயிர் நெட்டெழுத்துக்கள் ஏழும், மெல்லினமெய் ஆறோடும் ஒன்ருகச் சேர்ந்து இசைக்கும்போது, (7 × 6 = 42) நாற்பத்திரண்டு மெல்லின உயிர்மெய் நெட்டெழுத் துக்களும் இசைக்கின்றன.

குறிப்பு :—மெல்லின உயிர்மெய்க்குறில், மெல்லின உயிர் மெய் நெடில் என்னும் இரு வகையினையும் சேர்த்து மெல்லின உயிர்மெய் எழுத்து என்பர். ஆகவே, மெல்லின உயிர்மெய் எழுபத்திரண்டு ஆயிற்று.

5. இடையின உயிர்மெய்க் குற்றெழுத்து :—

உயிர்க்குற்றெழுத்துக்கள் ஐந்தும், இடையினமெய் ஆறோடுஞ் சேர்ந்து ஒன்ருக ஒலிக்கும் போது, (5 × 6 = 30) முப்பது இடையின உயிர்மெய்க் குற்றெழுத்துக் களும் இசைக்கின்றன.

6. இடையின உயிர்மெய் நெட்டெழுத்து :—

உயிர் நெட்டெழுத்துக்கள் ஏழும், இடையின மெய் கள் ஆறோடும் ஒன்ருகச் சேர்ந்து இசைக்கும் போது, (7 × 6 = 42) நாற்பத்திரண்டு இடையின உயிர்மெய் நெட்டெழுத்துக்களும் இசைக்கின்றன.

குறிப்பு :—இடையின உயிர்மெய்க்குறில், இடையின உயிர்மெய், நெடில் என்னும் இரு வகையினையுஞ் சேர்த்து இடையின உயிர்மெய் எழுத்து என்பர். ஆகவே, இடையின உயிர்மெய் எழுபத்திரண்டு.

இனி,

| | |
|---|---|
| வல்லின உயிர்மெய்க் குறில் $5 \times 6 = 30$<br>வல்லின உயிர்மெய் நெடில் $7 \times 6 = 42$ | வல்லின உயிர்மெய் $30 + 42 = 72$ என்றும், |
| மெல்லின உயிர்மெய்க் குறில் $5 \times 6 = 30$<br>மெல்லின உயிர்மெய் நெடில் $7 \times 6 = 42$ | மெல்லின உயிர்மெய் $30 + 42 = 72$ என்றும், |
| இடையின உயிர்மெய்க் குறில் $5 \times 6 = 30$<br>இடையின உயிர்மெய் நெடில் $7 \times 6 = 42$ | இடையின உயிர்மெய் $30 + 42 = 72$ என்றும், |

அறிந்துகொள்க. மேலும்,

| | | |
|---|---|---|
| வல்லின உயிர்மெய்க்குறில் | 30 | உயிர்மெய்க்குறில் 90 என்றும், |
| மெல்லின உயிர்மெய்க்குறில் | 30 | |
| இடையின உயிர்மெய்க்குறில் | 30 | |
| வல்லின உயிர்மெய் நெடில் | 42 | உயிர்மெய் நெடில் 126 என்றும், அறிந்துகொள்க. |
| மெல்லின உயிர்மெய் நெடில் | 42 | |
| இடையின உயிர்மெய் நெடில் | 42 | |

குறிப்பு :—உயிர்மெய்கள், மெய்களின் வகையாலும் உயிர்களின் வகையாலும் ஆறு வகைப்பட்டும், தனியே மெய்யின் வகையால் மூவகைப்பட்டும், தனியே உயிரின் வகையால் இரு வகைப்பட்டும் வந்தவாறு கண்டுகொள்க.

இனி, பதினெட்டு மெய் எழுத்துக்களோடும், பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் சேர்ந்து ஓரோசையினவாக இசைக்க ($18 \times 12 = 216$) **இருநூற்றுப்பதினாறு உயிர்மெய் எழுத்துக்கள்** ஒலிக்கின்றன.

இவ்வுயிர்மெய்களின் தொகையையும் வகையையும் பின் வரும் படத்திலே கண்டு உணர்ந்துகொள்ளுக.

# உயிர்மெய் எழுத்துக்களின் படம்

| | குற்றெழுத்து | | | | | | | நெட்டெழுத்து | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அ, | இ, | உ, | எ, | ஒ. | | | ஆ, | ஈ, | ஊ, | ஏ, | ஐ, | ஓ, | ஔ | | |
| க் — | க, | கி, | கு, | கெ, | கொ | = | 5 | கா, | கீ, | கூ, | கே, | கை, | கோ, | கௌ | = | 7 |
| ச் — | ச, | சி, | சு, | செ, | சொ | = | 5 | சா, | சீ, | சூ, | சே, | சை, | சோ, | சௌ | = | 7 |
| ட் — | ட, | டி, | டு, | டெ, | டொ | = | 5 | டா, | டீ, | டூ, | டே, | டை, | டோ, | டௌ | = | 7 |
| த் — | த, | தி, | து, | தெ, | தொ | = | 5 | தா, | தீ, | தூ, | தே, | தை, | தோ, | தௌ | = | 7 |
| ப் — | ப, | பி, | பு, | பெ, | பொ | = | 5 | பா, | பீ, | பூ, | பே, | பை, | போ, | பௌ | = | 7 |
| ற் — | ற, | றி, | று, | றெ, | றொ | = | 5 | றா, | றீ, | றூ, | றே, | றை, | றோ, | றௌ | = | 7 |
| இவை முப்பதும் வல்லின உயிர் மெய்க் குற்றெழுத்துக்கள் | | | | | | | 30 | இவை நாற்பத்திரண்டும் மெல்லின உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் | | | | | | | | 42 |
| ங் — | ங, | ஙி, | ஙு, | ஙெ, | ஙொ | = | 5 | ஙா, | ஙீ, | ஙூ, | ஙே, | ஙை, | ஙோ, | ஙௌ | = | 7 |
| ஞ் — | ஞ, | ஞி, | ஞு, | ஞெ, | ஞொ | = | 5 | ஞா, | ஞீ, | ஞூ, | ஞே, | ஞை, | ஞோ, | ஞௌ | = | 7 |
| ண் — | ண, | ணி, | ணு, | ணெ, | ணொ | = | 5 | ணா, | ணீ, | ணூ, | ணே, | ணை, | ணோ, | ணௌ | = | 7 |
| ந் — | ந, | நி, | நு, | நெ, | நொ | = | 5 | நா, | நீ, | நூ, | நே, | நை, | நோ, | நௌ | = | 7 |
| ம் — | ம, | மி, | மு, | மெ, | மொ | = | 5 | மா, | மீ, | மூ, | மே, | மை, | மோ, | மௌ | = | 7 |
| ன் — | ன, | னி, | னு, | னெ, | னொ | = | 5 | னா, | னீ, | னூ, | னே, | னை, | னோ, | னௌ | = | 7 |
| இவை முப்பதும் மெல்லின உயிர் மெய்க் குற்றெழுத்துக்கள் | | | | | | | 30 | இவை நாற்பத்திரண்டும் மெல்லின உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் | | | | | | | | 42 |

| | | | | |
|---|---|---|---|---|
| ய் — ய, யி, யு, யெ, யொ | = 5 | யா, யீ, யூ, யே, யை, யோ, யௌ | = 7 |
| ர் — ர, ரி, ரு, ரெ, ரொ | = 5 | ரா, ரீ, ரூ, ரே, ரை, ரோ, ரௌ | = 7 |
| ல் — ல, லி, லு, லெ, லொ | = 5 | லா, லீ, லூ, லே, லை, லோ, லௌ | = 7 |
| வ் — வ, வி, வு, வெ, வொ | = 5 | வா, வீ, வூ, வே, வை, வோ, வௌ | = 7 |
| ழ் — ழ, ழி, ழு, ழெ, ழொ | = 5 | ழா, ழீ, ழூ, ழே, ழை, ழோ, ழௌ | = 7 |
| ள் — ள, ளி, ளு, ளெ, ளொ | = 5 | ளா, ளீ, ளூ, ளே, ளை, ளோ, ளௌ | = 7 |
| இவை முப்பதும் இடையின உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள் | 30 | இவை நாற்பத்திரண்டும் இடையின உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் | 42 |
| வல்லின உயிர்மெய்க் குறில் | = 30 | வல்லின உயிர்மெய் நெடில் | = 42 |
| மெல்லின உயிர்மெய்க் குறில் | = 30 | மெல்லின உயிர்மெய் நெடில் | = 42 |
| இடையின உயிர்மெய்க் குறில் | = 30 | இடையின உயிர்மெய் நெடில் | = 42 |
| ∴ உயிர்மெய்க் குறில் | = 90 | ∴ உயிர்மெய் நெடில் | = 126 |

## உயிர்மெய் எழுத்துக்கள் 216

4. **பயிற்சி வினுக்கள் :—**

1. உயிர்மெய் எழுத்தின் வகைகளைக் கூறுக.
2. உயிர்மெய்யின் தொகை எவ்வளவு?
3. உயிர்மெய்கள் எப்படி இருநூற்றுப்பதினாறு ஆயின?
4. கரும்பு, காற்றாடி, சித்திரம், சேகவன், யானை, மூங்கில், இரத்தினம், பாம்பு, பறவை, நோய், வாழ்வு, யௌவனம்—இவற்றிலுள்ள உயிர்மெய்களை அவற்றின் வகைகளில் அடக்கிக் கூறுக.

---

6. **ஆய்த எழுத்து :—**

ஆய்த எழுத்து, "ஃ" இப்படி மூன்று புள்ளி வடிவம் உடையதாக எழுதப்படும்.

இந்த எழுத்து, வல்லெழுத்தைக்காட்டிலும் விரைவாகக் காற்றை இழுத்து அமுக்கத் துள்ளி வெளிப்படும். இவ்வொலிதான் ஆய்தம் எனப்படும். அதிக விரைவினாலே அமுக்கமும் அதிகப்படும். இவ்வாறு அமுக்கம் அதிகப்படுதலால், இதன்மேல் உயிர் ஏறி ஒலிக்க இடமில்லையாகும். ஆனபடியால், "உயிர் ஆய்தம்" என்பதாக ஒரெழுத்து வருவதில்லை.

இந்த எழுத்து, குற்றெழுத்துக்கும், வல்லின உயிர்மெய் எழுத்துக்கும் நடுவிலேதான் சொற்களில் வரும்.

உதாரணம் :—

அஃது, எஃகு.

இது வரையும்,

உயிர் எழுத்து,
மெய் எழுத்து,
உயிர்மெய் எழுத்து,
ஆய்த எழுத்து

என நான்கு வகையான எழுத்துக்களையும் அறிந்து கொண்டீர்கள்.

இவவற்றின் தொகை,

| | |
|---|---|
| உயிர் எழுத்து | 12 |
| மெய் எழுத்து | 18 |
| உயிர்மெய்யெழுத்து | 216 |
| ஆய்த எழுத்து | 1 |
| ஆக மொத்தம் | 247 |

இந்த இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களுமே தமிழ் நெடுங்கணக்கு (அரிச்சுவடி) வரிசையிலுள்ள எழுத்துக்களாம்.

5. பயிற்சி வினுக்கள் :—


1. ஆய்த எழுத்து எப்படி எழுதப்படுகிறது ?
2. உயிர் ஆய்தம் என்ருேர் எழுத்து எப்படி இல்லாமற்போயது ?
3. ஆய்த எழுத்துச் சொற்களில் எவ்விடத்தே வரும்?
4. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்களை இவ்வளவெனக் கணக்கிடுக.

---

3. சுட்டும் வினுவும் :—

எழுத்துக்களுட்சில, தாமே தனித்து நின்று பொருள் உணர்த்தி வருவனவும் உண்டு. அவற்றை அவ்வாறு பொருளுணர்த்தி வரும்போது சொற்கள் என்றே கூறுவர்.

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| ஏ<br>(சொல்)<br>1 | <br>(பொருள்)<br>2 |
| வீடு<br>(சொல்)<br>3 | <br>(பொருள்)<br>4 |

மேலே தரப்பட்ட 1, 2 என்னும் இலக்கங்கள் இடப்பட்டனவற்றைப் பார்ப்போம். 1 என்னும் இலக்கம் இடப்பட்டது "ஏ" என்னும் எழுத்தாலாகிய சொல். 2 என்னும் இலக்கம் இடப்பட்டது, அச்சொல்லால் குறிக்கப்படும் பொருளாகிய **அம்பு**, இவை இரண்டற்கும் வேறுபாடு யாது? ஒன்று சொல்; மற்றது அதனால் குறிக்கப்படும் பொருள். இவ்வாறே, 3, 4 இலக்கமிடப்பட்டனவற்றையும் அறிந்துகொள்க.

இவ்வாறே, **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ** என்னும் எழுத்துக்களும், இவை போன்ற சில உயிர்மெய்களும், பொருள் உணர்த்தி வரும்போது எழுத்துக்களாகாமல் சொற்களே ஆகின்றன.

**உதாரணம் :—**

| | | | |
|---|---|---|---|
| ஆ | (பசு) | கா | (சோலை) |
| ஈ | (இலையான்) | சே | (எருது) |
| ஊ | (இறைச்சி) | தீ | (நெருப்பு) |
| ஏ | (அம்பு) | பூ | (மலர்) |
| ஐ | (தலைமை) | மா | (ஒரு மரம்) |
| ஓ | (மதகு நீர் தடுக்கும் பலகை) | நா | (நாக்கு) |

ஆனால், குற்றெழுத்துக்கள் இவை போலப் பெரும்பாலும் தனித்துப் பொருள் உணர்த்தி வருவன அல்ல. இவை நிற்க.

சொற்களோடு சேர்ந்து, சில குற்றெழுத்துக்களும் சில நெட்டெழுத்துக்களும் பொருளை அறிவித்து வருதல் உண்டு. இவ்வாறு சொற்களோடு சேர்ந்து பொருள் உணர்த்தல் எவ்வாறு என்பதை ஆராய்வோம் :

**அவன் யார் ?**
**அஃது என்ன ?**
**இது யாருடைய வீடு ?**

என்று எழுதப்பட்டிருக்கும் சொல் தொடர்களைக் கருத்தூன்றிப் பார்ப்போம்.

**அவன்**
**அஃது**
**இது**

என்பன சுட்டிக்காட்டுதல் பொருளிலும்,

**யார் ?**
**என்ன ?**
**யாருடைய ?**

என்பன வினவுதல் (கேள்வி கேட்டல்) பொருளிலும் வந்தன. இவ்வினாக்கட்கு,

**அவன் கந்தன்.**
**அது பனை.**
**இஃது இராமனுடைய வீடு.**

என்றேனும், இன்னும் பலவாறாகவேனும் விடை கூறிவிடலாம். எப்படிப் பார்த்தாலும் சொற்கள், வினா

வும், அதற்கு விடையுமாகவே முதன்முதலில் தோற்றம் பெறுகின்றன. இவ்வாறு சொற்கள் தோன்றுவதற்கு மூலமாக நிற்கும் எழுத்துக்கள் சுட்டெழுத்துக்களும், வினா எழுத்துக்களுமேயாம். ஆதலால், இவற்றைச் "சொல் மூலம்" என்பர். இவற்றுள் முதலில் சுட்டெழுத்துக்களைப்பற்றி அறிவோம் :

குறிப்பு :—சுட்டுக்களும் வினாக்களும் சொற்களோடு தனித்து நின்று பொருளுணர்த்தாமையை, (பின்னர் வருமிடங்களில் படித்து அறிந்துகொண்ட பின்) வேறு பிரித்தறிந்துகொள்க.

வினாவிடைகட்குச் சுட்டு உறுப்பாய் வருதலினாலே அதுவும் சொல் மூலமாயிற்று. வேறு ஆழ்ந்த கருத்துக்களும் உண்டு.

6. **பயிற்சி வினாக்கள் :—**

1. சொல் பொருள் இரண்டினதும் வேறுபாட்டை விளக்குக.
2. சுட்டு, வினா என்னும் பொருள்களைத் தரும் எழுத்துக்கள் ஏன் சொற்களாகா ?
3. சுட்டும் வினாவும் ஏன் சொல் மூலம் எனப்படுகின்றன ?

i. **சுட்டெழுத்து :—**

மாணவர்களே ! உங்கள் வலக்கையில் உள்ள இரண்டாவது விரலுக்குப் பெயரென்ன ? சுட்டுவிரல் என்பது. அந்த விரலைச் சுட்டுவிரல் என்று ஏன் கூறுகின்றோம் ? அந்த விரலே பொருள்களைச் சுட்டிக் காட்டுவதற்குக் கருவியாக இருப்பதனால் அதைச் **சுட்டுவிரல்** என்கிறோம். இதனால், சுட்டிக் குறிப்பது சுட்டாகும் என்பது விளங்குகிறது. சுட்டுப்பொருளில் வருவதற்குரிய எழுத்துக்கள் மூன்று. அவை, **அ, இ, உ** என்பனவாம். அவைகள்

சுட்டுப் பொருளில் வரும்போதுதான் சுட்டெழுத்துக்கள் எனப்படும். அல்லாத இடத்து அவைகள் உயிர்க்குற்றெழுத்துக்களேயாம்.

உதாரணம் :—

அவன், இவன், உவன்
அவ்வீடு, இவ்வீடு, உவ்வீடு, } என்பன.

நாம் தூரத்திலுள்ள ஒரு மாட்டைச் சுட்டிக் கூற வேண்டுமானால், உந்தமாடு அல்லது, இந்தமாடு என்று சுட்டமாட்டோம். அந்த மாடு என்றே சுட்டிக் கூறுவோம்; அது போலவே, பக்கத்திலுள்ள மாட்டை இந்த மாடு என்றும், தூரத்திலுமன்றிப் பக்கத்திலுமன்றி நடு இடத்திலே உள்ள மாட்டை உந்த மாடு என்றும் சுட்டிக் கூறுகின்றோம். ஆதலால், "அ" என்னும் சுட்டெழுத்துத் தூரத்தே உள்ள பொருள்களையும், "இ" என்னும் சுட்டெழுத்துத்துப் பக்கத்தே உள்ள பொருள்களையும், "உ" என்னும் சுட்டெழுத்து நடுவே உள்ள பொருள்களையும் சுட்டுகின்றன. "உ" என்னும் சுட்டெழுத்துப் பின் புறத்திலுள்ள பொருள்களையும் சுட்டுகிறது.

இவ்வாறு நாம் அறிந்துகொண்ட சுட்டு,

(அ) அகச்சுட்டு
(ஆ) புறச்சுட்டு

என இரண்டு வகைப்படும்.

(அ) அகச்சுட்டு :—

அகச்சுட்டாவது, சொல்லை ஆக்கிய எழுத்துக்களுள்ளே, சுட்டெழுத்தும் ஒன்றாக வருவது. இதைச் சொல்லின் அகத்தே வருவது என்று பெரியோர்கள் கூறுவர். அதனால், இவ்வாறு வருவது அகச்சுட்டு எனப்பட்டது.

உாரணம் :—

**அவன், இவன், உவன்** முதலியன.

இவற்றுள் "அவன்" என்னும் சொல், அ, வ, ன் என்னும் மூன்று எழுத்துக்களால் ஆக்கப்பட்டிருக்கிறது. அச்சொல்லில் "அ" என்னும் சுட்டெழுத்து, அவன் என்னும் சொல்லை ஆக்குதற்கு உறுப்பாய் (அங்கமாய்) வந்திருத்தலைக்காண்க. இவ்வாறே இவன், உவன் என்பவற்றையும் பிரித்து அறிந்துகொள்ளுங்கள். இவ்வாறு உறுப்பாய் வருவதையே, சொல்லை ஆக்கிய எழுத்துக்களுள் ஒன்றாய் வருவது என்றும், சொல்லின் அகத்தே வருவது என்றும் கூறுவர்.

**(ஆ) புறச்சுட்டு :—**

புறச்சுட்டாவது, சுட்டியறிவிக்கப்படும் பொருளை உணர்த்தும் சொல்லின் புறத்தே (வேறாக) சுட்டெழுத்து வருவது.

**உதாரணம் :— அந்(நாடு), இந்(நாடு), உந்(நாடு)**

அந்நாடு என்பதில் சுட்டப்படுவது நாடு என்பது. நாட்டைச் சுட்ட வந்த சுட்டெழுத்து "**அ**" என்பது. இந்த "**அ**" என்னும் சுட்டெழுத்து, **அவன்** என்பதில் உள்ள சுட்டெழுத்தாகிய "**அ**" என்பது வந்திருப்பது போல வரவில்லை. நாடு என்பது **நா, டு** என்னும் இரண்டெழுத்தாலும் ஆக்கப்பட்ட ஒரு சொல்லாகும். "அ" என்னும் சுட்டெழுத்து நாடு என்னும் சொல்லுக்குப் புறத்தே வந்திருக்கின்றது. ஆதலினால், இது புறச்சுட்டு எனப்படும். இது போலவே, **இவ்வீடு, உவ்வீடு** என்பவற்றையும் பிரித்து அறிந்துகொள்ளுங்கள்.

இவை நிற்க. **அரசன், உறி, இஞ்சி** என்னும் மூன்று சொற்களையும் அவதானியுங்கள். இச்சொற்களின் முத

யில் உள்ள அ, இ, உ என்பன சுட்டுதற்பொருளில் வரவில்லை. ஆதலினால், இவற்றைச் சுட்டெழுத்துக்கள் என்று சொல்லலாகாது. இவை, உயிர்க் குற்றெழுத்துக்களேயாம்.

அ, இ, உ, என்னும் சுட்டெழுத்துக்கள், அந்த, இந்த, உந்த என வேறுபட்டு வருதலும் உண்டு.

7. பயிற்சி வினாக்கள் :—

1. சுட்டெழுத்தாவது யாது ?
2. சுட்டுப் பொருளில் வரும் எழுத்துக்கள் எவை ?
3. அகச்சுட்டாவது யாது ?
4. புறச்சுட்டாவது யாது ?
5. அஃது, இரவு, அவ்வீடு, அணில், உத்தோட்டம், இவர், உயரம், இப்பறவை, அவ்வரசன்.
   இவற்றில் உள்ள சுட்டெழுத்துக்கள் யாவை ?
6. மேற்படி பயிற்சியில் உள்ள அகச்சுட்டுக்களையும் புறச்சுட்டுக்களையும் காட்டுக.

ii வினா எழுத்து :—

வினாவைப்பற்றி முன்பு அறிந்திருக்கின்றோம். அவ்வினாப்பொருளில் வரும் எழுத்துக்களையே வினா எழுத்து என்பர். அவ்வாறு வினாப்பொருளில் வரும் எழுத்துக்கள் ஐந்தாம். அவையாவன, எ, யா, ஆ, ஓ, ஏ என்பனவாம். இவை வினாப்பொருளில் வாராத போது, "எ" என்பது உயிர்க்குறிலாகவும், "யா" என்பது இடையின உயிர்மெய் நெடிலாகவும், ஏனையவை உயிர் நெடிலாகவும் கருதப்படும்.

உதாரணம் :—

(அ) (உன்னுடைய வீடு) எது ?

(ஆ) (உன்னுடைய தந்தையார்) யார் ?

(இ) (உங்கள் வகுப்பில் கெட்டிக்காரன் முருகன் + ஆ) முருகனா ?

(உ) (உன் புத்தகத்தை எடுத்தவன் வேலன்+ஓ) வேலனோ?

(ஊ) (இராமன்+ஏ) இராமனே அடித்தான்?

இவற்றுள், 'இராமனே அடித்தான்?' என்பதை எடுத்துக்கொள்வோம். இந்த வாக்கியத்தில் இராமனே என்பதில் உள்ள "ஏ" என்னும் எழுத்தே வினப்பொருளைத் தந்தது. இஃது உங்களுக்கு விளங்கவில்லையா? இராமனே அடித்தான் என்பதில் உள்ள "ஏ" என்னும் எழுத்தை நீக்கிவிடுவோம். இப்போது "இராமன் அடித்தான்" என்று ஆகிவிட்டது. இந்தச் சொற்றொடர் இப்போது வினவாகத் தோன்றுகிறதா? இஃது இப்போது வினவாகத் தோன்றவில்லை. ஏனென்றால், வினப்பொருளைத் தரும் எழுத்து இத்தொடரில் இல்லாமையினால். இப்போது "ஏ" என்னும் எழுத்து வினப்பொருளைத் தருதல் நன்கு விளங்குகிறதா? இது போலவே ஏனைய உதாரணங்களையும் பிரித்து விளங்கிக்கொள்ளுங்கள்.

இன்னும் இதில் நாம் அறிந்துகொள்ள வேண்டுவன சில உள. முன்பு படித்த சுட்டெழுத்துக்கள், சொற்களின் முதலிலேதான் வந்தன. ஆனால், வின எழுத்துக்கள், சொற்களின் முதலிலும் இறுதியிலும் வருகின்றன. சொற்களின் முதலில் வரும் வின எழுத்துக்கள், "எ, யா" என்னும் இரண்டுமாம். இறுதியில் வருவன "ஆ, ஓ" என்னும் இரண்டுமாம். இறுதியிலும் முதலிலும் வருவது ஏ என்னும் ஒன்றுமாம்.

சுட்டு அகச்சுட்டு, புறச்சுட்டு என இரு வகைப் பட்டது போலவே, வினவும் அகவின, புறவின என இரு வகைப்படும்.

(அ) அகவின :—

சொல்லின் அகத்தே வின எழுத்து வருமாயின், அஃது அகவின எனப்படும்.

உதாரணம் :—

எவன்? யாது? ஏது?

(ஆ) புறவினா :—

சொல்லின் புறத்தே வினா எழுத்து வருமாயின், அது புறவினா எனப்படும்.


உதாரணம் :

அவேன ? எம்மாடு ? யாங்ஙனம் ?

குறிப்பு :—"எ" என்னும் வினா எழுத்து **எந்த** என வேறுபட்டு வருதலும் உண்டு. அகத்து வருதல், புறத்து வருதல் என்பவற்றைச் சுட்டுக் கூறிய இடத்துக் கூறினோம். அங்ஙனமே இவ்விரு வகை வினாக்களையும் ஊகித்து அறிக.

வினா எழுத்துக்கள், சொல்லின் இறுதியிலும் முதலிலும் வரும் ; அவை, சொல்லின் முதலில் அகவினாவாகவும் புறவினாவாகவும், சொல்லின் இறுதியில் புறவினாவாகவும் வருவதைப் பின் வரும் படத்திற்கண்டு இலகுவில் விளங்கிக்கொள்க.

வினா விளக்கப்படம்



விஞ எழுத்து :

| | | | |
|---|---|---|---|
| எ . | எவன் ? | எம்மாடு ? | —————— |
| யா . | யாது ? | யாங்ஙனம் ? | —————— |
| ஆ . | —— | —— | (கந்தன்+ஆ) கந்தனு |
| ஓ . | —— | —— | (சாத்தன்+ஓ) சாத்தனே |
| ஏ . | ஏது ? | —— | (வேலன்+ஏ) வேலனே |

எருமை, நிலா, ஐயா, யானை, ஏவல் இவற்றில் உள்ள எ, ஆ, ஓ, யா, ஏ, என்பவை விஞப்பொருளில் வாராமையால், விஞ எழுத்துக்கள் அல்ல.

8. பயிற்சி விஞக்கள் :—

1. விஞப்பொருளில் வரும் எழுத்துக்கள் யாவை ?
2. சொல்லின் முதலில் வரும் விஞ எழுத்துக்கள் யாவை ?
3. சொல்லின் இறுதியில் வரும் விஞ எழுத்துக்கள் யாவை ?
4. சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும் விஞ எழுத்து யாது ?
5. அகவிஞ, புறவிஞ என்னும் இரண்டிற்குமுள்ள வேறுபாடு யாது ?
6. சொல்லின் முதலில் அகவிஞ ஆகவும் புறவிஞ ஆகவும் வரும் எழுத்துக்கள் யாவை ?
7. சொல்லின் முதலில் அகவிஞவாகமட்டும் வரும் விஞவெழுத்து யாது ?
8. சொல்லின் முதலில் எவ்வெவ்விஞக்கள் வரும் ?
9. சொல்லின் இறுதியில் எந்த விஞ வரும் ? எந்த விஞ வாராது ?

**குற்றியல் உகரமும் முற்றியல் உகரமும்:**

பிள்ளைகளே! சில எழுத்துக்களை நாம் அரிச்சுவடி வரிசையில் காண முடியாது. அவற்றைச் சொற்களிலே தாம் அறிந்துகொள்ள முடியும். அப்படி அறியப்படும் எழுத்துக்கள் பல உள. அவற்றுள், குற்றியல் உகரம், குற்றியல் இகரம் என்பவற்றை இப்போது அறிவோம்.

4. குற்றியல் உகரம்:

தனக்குரிய ஓசையிலிருந்தும் குறைவுபட்ட ஓசையை உடைய "உ"கரத்தைக் குற்றியல் உகரம் என்பர். (குறுமை)+இயல்+உகரம்=குற்றியல் உகரம். இந்த "உ"கரம் தன்னுடைய ஓசையிலிருந்தும், எவ்விடங்களில் குறைவு அடைகிறது என்று ஆராய்வோம்.

மாணவர்களே! குற்றியல் உகரத்தை நாம் கண்டு பிடிப்பதற்கு முக்கியமான மூன்று விஷயங்களைச் செவ்வனே அறிந்துகொள்ள வேண்டும்.

1. குற்றியல் உகரம், சொல்லின் இறுதியிலேதான் வரும்.
2. அவ்வாறு சொல்லின் இறுதியில் வரும் உகரம் வல்லினமெய் ஆறோடும் சேர்ந்த கு, சு, டு, து, பு, று என்பவற்றுள் ஒன்றாய் இருக்கும்.
3. குற்றியல் உகரம், இரண்டெழுத்துச் சொற்களிலேனும், மூன்று, நான்கு முதலிய பல எழுத்துச் சொற்களிலேனும் வரும். ஆனால், இரண்டெழுத்தில் வரும் குற்றியலுகரத்துக்கு முதல் எழுத்து நெட்டெழுத்தாக இருத்தல் வேண்டும். அவ்வாறன்றி, அம்முதலெழுத்துக் குற்றெழுத்தாக இருப்பின், அது குற்றியல் உகரமாகாது. பல எழுத்துக்களில் வரும் குற்றியல் உகரத்துக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எவ்வாறு இருப்பினும் அமையும்.

உதாரணம் :—

| | |
|---|---|
| நாகு<br>ஆடு<br>தூது | இரண்டெழுத்துக் குற்றியல் உகரம். |
| கொக்கு<br>அடுப்பு<br>இருப்பது | பல எழுத்துக் குற்றியல் உகரம். |

அப்பியாசம் :—

ஆசிரியர் :—மாணவர்களே ! குற்றியல் உகரம் எவ்வாறு வருமென்பதை இப்போது அறிந்துகொண்டீர்களா ? நல்லது : 'குமரன்' என்பதில் உள்ள "கு" என்பதில் சேர்ந்திருக்கும் உகரம் போன்றதுதானே குற்றியல் உகரம் ?

மாணவன் :—ஐயா ! அஃது ஆகாது : குற்றியல் உகரம் சொல்லின் இறுதியிலேதான் வரும் என்றீர்களே ?

ஆசி :—ஓகோ ! அப்படியா ? "கதவு" என்பதில் உள்ள உகரம் போலவா குற்றியல் உகரம் வரும் ?

மாண :—அப்படியும் வாராது ; கதவு என்பதில் உள்ள உகரம் இடையின மெய்யின்மேல் ஏறி வந்திருக்கின்றதே ? குற்றியல் உகரம் வல்லின மெய்யின்மேல் ஏறி வரும் என்றீர்களே ?

ஆசி :—அப்படியானால் மடு, அது என்பன போல வருதல் வேண்டுமா ?

மாண :—அதுவும் அன்று : மடு, அது என்பவைகளில் குற்றியல் உகரமே இல்லை. குற்றியல் உகரம் இரண்டெழுத்துச் சொல்லிலே குற்றெழுத்துக்குப் பின் வரமாட்டாது.

ஆசி :—நல்லது ; மாடு, நாடு என்றிருந்தால்.....................

மாண :—ஆம் ; இவைகள் இரண்டெழுத்துச் சொல்லில் வரும் குற்றியலுகரமே.

ஆசி :—குற்றியல் உகரம் இரண்டெழுத்திலே அன்றி மூன்று முதலிய பல எழுத்துக்களில் வாராவோ ?

மாண :—ஏன் வாரா ? வரலாம்.

ஆசி :—எப்படி வரும் ? சொல் பார்ப்போம்.

மாண :—அரசு, தட்டு, எஃகு, ஒன்பது இப்படி வரும்.

**குற்றியலுகரத்தின் வகை :—**

மாணவர்காள் ! குற்றியல் உகரம், தனக்கு முன்பு (அயலில்) வரும் எழுத்துக்களின் தொடர்ச்சியினாலே **ஆறு வகைப்படும்.**

ஆறு, மாடு முதலிய இரண்டெழுத்துச்சொல்லில் வரும் குற்றியல் உகரத்துக்கு முன் உள்ள எழுத்து நெட்டெழுத்தேயாகும் என்னும் நியமத்தால், இரண்டெழுத்துச் சொற்களில் வந்த குற்றியல் உகரத்தை, நெட்டெழுத்துத் தொடர்ந்த குற்றியல் உகரம் என்பர். ஆதலால், இது **நெடில் தொடர்க் குற்றியல் உகரம்** என்னும் பெயர் பெற்றது.

இப்படியே ஏனைய மூன்றெழுத்து முதலிய பல எழுத்துச் சொற்களில் வரும் குற்றியல் உகரங்கட்கும் இறுதி எழுத்துக்கு முதல் எழுத்தைக்கொண்டு பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன.

**எஃகு** என்னும் சொல்லின் இறுதி எழுத்துக்கு முதல் எழுத்து ஆய்த எழுத்தாகையால், இச்சொல்லில் வந்த குற்றியல் உகரத்தை ஆய்தம் தொடர்ந்து வந்த குற்றியல் உகரம் என்பர். ஆகவே, இதற்கு **ஆய்தத் தொடர்க் குற்றியல் உகரம்** என்பது பெயராயிற்று.

**வரகு, ஒன்பது, ஒவ்வாது, போன்றது, வாராது** என்னும் சொற்களில், இறுதி எழுத்திற்கு முதல் எழுத்துக்கள் எல்லாம் ர, ப, வா, ற, ரா எனக் குறிலும் நெடிலும் ஆகிய உயிர்மெய் எழுத்துக்கள் ஆகும்; ஆதலால், அவையெல்லாம் உயிர்மெய் எழுத்துக்களால் தொடரப்பட்டவை ; வரகு என்னும் உயிர்மெய் தொடர்ந்த குற்றியல்

உகரத்தை உடைய சொல்லில் உயிர்மெய் எழுத்தைப் பிரிக்கும்போது, (வ) (ர்+அ) (கு) என்றாகும். இப்போது குற்றியல் உகரத்தைத் தொடர்ந்திருப்பது "அ" என்னும் உயிர் எழுத்தேயாம். இக்காரணத்தால் உயிர்மெய்யால் தொடரப்பட்ட குற்றியல் உகரமெல்லாம் உயிர்த்தொடர்க் குற்றியல் உகரம் எனப்படும்.

கொக்கு, நட்பு, என்னும் சொற்களில், இறுதி எழுத்துக்கு முதலில் உள்ள எழுத்துக்கள் வல்லின மெய்யாகும்; ஆகவே, இது வல்லின மெய்யால் தொடரப்பட்ட குற்றியல் உகரம் எனப்படும். இக்காரணத்தால், இதற்கு வன் தொடர்க் குற்றியல் உகரம் என்பது பெயராயிற்று.

பந்து, பஞ்சு, நண்டு என்னும் சொற்களில், இறுதி எழுத்திற்கு முதலில் உள்ள எழுத்துக்கள் மெல்லின மெய் ஆகும். ஆகவே, இது மெல்லின மெய்யால் தொடரப்பட்ட குற்றியலுகரமாகும். இக்காரணத்தால், இதற்கு மென்தொடர்க் குற்றியல் உகரம் என்பது பெயராயிற்று.

சால்பு, தெள்கு என்னும் சொற்களில், இறுதி எழுத்திற்கு முதலில் உள்ள எழுத்துக்கள், இடையின மெய்யாகும். ஆதலால், இஃது இடையின மெய்யால் தொடரப்பட்ட குற்றியல் உகரமாகும். இக்காரணத்தால், இதற்கு இடைத்தொடர்க் குற்றியல் உகரம் என்பது பெயராயிற்று.

இப்படியே குற்றியலுகரம் தன்னைத் தொடர்ந்திருக்கும் முதல் எழுத்துக்களாலே ஆறு வகைப்படுதலை அறிவீர்களாக.

உதாரணம் :—

| | | | |
|---|---|---|---|
| பாகு, காடு | = நெடில்தொடர்க் | குற்றியல் | உகரம் |
| அஃது, எஃகு | = ஆய்தத்தொடர்க் | ,, | ,, |
| அரசு, பலாசு | = உயிர்த்தொடர்க் | ,, | ,, |
| தடுக்கு, பரப்பு | = வன்தொடர்க் | ,, | ,, |

பருந்து, இரும்பு = மென்தொடர்க் குற்றியலுகரம்.
சால்பு, மார்பு = இடைத்தொடர்க் ,,

9. பயிற்சி விஞக்கள் :—

1. குற்றியல் உகரம் என்பது என்ன ?
2. சொற்களில் அது வந்திருப்பதை எவ்வாறறியலாம்?
3. குற்றியல் உகரம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
4. அவை அவ்வாறு வகைப்படுத்தப்பட்ட காரணம் யாது ?

5. முற்றியல் உகரம் :—

ஓசையில் குறைந்த குற்றியல் உகரத்தைப்பற்றி அறிந்துகொண்டோம். இனி ஓசையில் குறைவுபடாத முற்றியல் உகரம் என்பதை அறிவோம்.

(ஓசையில் குறையாது) முற்று(தலைக்கொண்ட) இயல்(பினை உடைய) உகரம், முற்றியல் உகரம்.

" உ " போன்ற தனி உயிர்க்குறிலாகவும், கு, ஙு, யு போன்ற பதினெட்டு மெய்களின்மேலும் ஏறி வந்த தனி உயிர்மெய்க் குறிலாகவும் வருவனவாகிய உகரங்களும் முற்றியல் உகரங்களாம்.

எல்லாச் சொற்களினதும் முதலில், " குடை " எனவும், " நுகம் " எனவும் "யுகம்" எனவும் வரும் வல்லின, மெல்லின, இடையின மெய்யின்மேல் ஏறிவரும் உகரமும் முற்றியல் உகரமாம்.

எல்லாச் சொற்களினதும் நடுவிலே, **இடுக்கண், அமுதம், கழுதை** எனவரும் வல்லின மெல்லின இடையின மெய்யின்மேல் ஏறிவரும் உகரமும் முற்றியல் உகரமாம்.

எல்லாச் சொற்களின் இறுதியிலே "உருமு" எனவும், "நெல்லு" எனவும் மெல்லின இடையின மெய்யின்மேல் ஏறி வரும் உகரமும் முற்றியல் உகரமாம்.

இரண்டு எழுத்துச் சொற்களின் இறுதியிலே பகு, பசு, விடு, மது, அறு என வல்லின மெய்யின்மேல் ஏறி வந்த உகரத்துக்கு முன்னுள்ள எழுத்துக்கள், ப, வி, ம, அ எனக் குற்றெழுத்துக்களாயிருத்தலின், அக்குற்றெழுத்துக்களின் பின்னர் வல்லின மெய்யின்மேல் ஏறி வந்த உகரமும் முற்றியல் உகரமாம்.

குறிப்பு :—

| | | | |
|---|---|---|---|
| பகு | என்பது | பாகு | எனவும் |
| பசு | ,, | பாசு | ,, |
| விடு | ,, | வீடு | ,, |
| மது | ,, | மாது | ,, |
| அறு | ,, | ஆறு | ,, |

இரண்டெழுத்துச் சொற்களில் வந்த முதலெழுத்தை நெட்டெழுத்தாக நீட்டினால், அந்தச் சொற்களின் இறுதியில் உள்ள வல்லின மெய்யின்மேல் ஏறி வந்துள்ள உகரம் குற்றியல் உகரமாம்.

குறிப்பு :—குற்றியலுகரம் அல்லாத உகரம் முற்றியலுகரமாம்.

10. பயிற்சி வினாக்கள் :—

| | | | | |
|---|---|---|---|---|
| உருளை, | அழகு, | வருதல், | குடை, | வரவு, |
| நகுதல், | உருமு (இடி), | யுகம், | நுனி, | விழு. |
| அமுதம், | நடு, | அஃகு, | சுண்ணும்பு, | ஏழு, |
| பிண்ணுக்கு, | வடக்கு, | காணுதல், | வல்லூறு, | சரயு, |
| எட்டு, | வேணு(மூங்கில்), | கரும்பு, | சுடு, | ஏடு, |
| முகடு, | சாவு, | கிள்ளு, | ஆடு, | பயறு, |
| சார்பு, | சங்கு, | நொய்து, | சுருக்கு, | மங்கு, |
| எஃகு, | மார்பு, | இஃது, | மருப்பு, | வேர்வு. |

என்னும் சொற்களில் உள்ள குற்றியல் உகரங்களையும் முற்றியல் உகரங்களையும் குறிப்பிடுக.

| குற்றியல் உகரம் | | | | | | முற்றியல் உகரம் |
|---|---|---|---|---|---|---|
| நெடில் தொடர் | ஆய்தத் தொடர் | உயிர்த் தொடர் | வன் தொடர் | மென் தொடர் | இடைத் தொடர் | |
| ஆடு | அஃது | பயறு | வடக்கு | கரும்பு | மார்பு | வரவு |

6. குற்றியல் இகரம் :—

குற்றியல் இகரம் என்பது, குற்றியல் உகரத்தைப் போலவே தன்னுடைய ஓசையிற் குறைவுபட்ட இகரம்.

| வீடு | + | யாது |
|---|---|---|
| இது குற்றியல் உகரத்தை இறுதியில் கொண்ட சொல் | | இஃது யா என்னும் எழுத்தை முதல் எழுத்தாகக்கொண்ட சொல். |

இந்த இரண்டு சொற்களும் தம்முள்ளே சேரும் போது "**வீடியாது**" என்று வரும். இப்படி வருவது தமிழ் மொழி வழக்காகும்.

குற்றியல் உகரத்தை இறுதியிற்கொண்ட சொல்லானது, "யா" என்னும் இடையின உயிர்மெய் எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்ட சொல்லுடன் கூடும்போது தான் இப்படி வேறுபடுகின்றது.

வீடு என்னும் சொல், யாது என்னும் சொல்லோடு கூடிய பின்னர் வீடி என வேறுபட்டது. வீடு என்னும் சொல்லின் இறுதியிலுள்ளது 'டு' என்னும் உயிர்மெய்

எழுத்து : "வீடி" என்பதில் இறுதியில் உள்ளது "டி" என்னும் உயிர்மெய் எழுத்து. "டு" என்னும் எழுத்தே "டி" என வேறுபட்டது. "டு" என்னும் உயிர்மெய் எழுத்தை (ட்+உ) எனப் பிரிக்கலாம். "டி" என்பதையும் (ட்+இ) எனப் பிரிக்கலாம். "டு" என்பதில் உள்ள "உ" என்னும் எழுத்துக்குப் பதிலாக "இ" என்னும் எழுத்து வந்துள்ளது.

இப்படியே யா என்பதை முதல் எழுத்தாக உடைய சொல்லோடு குற்றியல் உகரம் கூடும்போது, குற்றியல் உகரத்துக்குப் பதிலாக ஓர் இகரம் வரும். அந்த இகரமும் குற்றியல் உகரம்போலத் தன் ஓசையில் குறைவுபட்டு ஒலிக்கும். அந்தக் குறைவுபட்ட ஓசையை உடைய இகரத்தைக் குற்றியல் இகரம் என்பர்.

"யா" என்னும் எழுத்தை முதலாக உடைய சொற்கள், யாவன், யாவள், யாவர், யாது, யாவை, யார், யானை, யாறு (ஆறு), யாமை (ஆமை), யாணர் (புதிது), யாத்தல் (கட்டுதல்), யாக்கை (உடம்பு) யாசகம், யாகம் (வேள்வி) முதலாயினவாம்.

**உதாரணம் :—**

| குற்றியல் உகரம் | | யா என்பதை முதலெழுத்தாக உடைய சொல் | குற்றியல் இகரம் |
|---|---|---|---|
| நாடு | + | யாது | நாடியாது |
| அஃது | + | யாது | அஃதியாது |
| முருகு (முருகன்) | + | யாவன் | முருகியாவன் |
| வடக்கு | + | யாது | வடக்கியாது |
| பஞ்சு | + | யாது | பஞ்சியாது |
| மார்பு | + | யாது | மார்பியாது |

இங்கே வந்துள்ள நாடி, அஃதி, முருகி, வடக்கி, பஞ்சி, மார்பி என்பவற்றின் இறுதியில் உள்ள இகரம் எல்லாம் குற்றியல் இகரங்களேயாம்.

இந்தக் குற்றியல் இகரம் ஒரு சொல்லிலும் வரும் என்பர்.

நீ நில்; நீ செல்; நீ காண்; என்னும் சொல்தொடர்களில் வந்துள்ள, "நில்" என்பதை "**நின்மியா**" எனவும், செல் என்பதைச் **சென்மியா** எனவும், "காண்" என்பதைக் **காண்மியா** எனவும் முன்னோர் கூறுவது உண்டு.

நின்மியா = நில் எனவும்
சென்மியா = செல் எனவும்
காண்மியா = காண் எனவும் பொருள்படும்.

இந்த "மியா" என்பது, நில், செல், காண் என்பவற்றின் பொருளை வலியுறுத்தவே வந்தது. இப்படி வரும் "மியா" என்னும் சொல்லின் முதலெழுத்தாகிய "மி" என்னும் உயிர்மெய்யில் உள்ள "ம்" என்றதன்மேல் ஏறியுள்ள இகரமும் குற்றியல் இகரம் என்பர்.

## 11. பயிற்சி வினாக்கள் :—

1. குற்றியல் இகரம் என்பது என்ன?
2. அஃது எப்படி வரும்?
3. ஒரு சொல்லில் வரும் குற்றியல் இகரம் எவ்வாறு வரும்?

## 7. இன எழுத்துக்கள் :—

எழுத்துக்கள், ஒலி, வடிவம், ஒலிக்கும் கால அளவு, பிறப்பு முதலியவற்றால் ஒன்றனோடு மற்றொன்று இனம் (தொடர்பு) உடையனவாகும். அவ்வாறு தொடர்பு உடைய எழுத்துக்கள் இன எழுத்துக்கள் எனப்படும்.

"அ" என்பதற்கு "ஆ" என்பதும்

"இ" என்பதற்கு "ஈ" என்பதும் "ஐ" என்பதும்

"உ" என்பதற்கு "ஊ" என்பதும் "ஔ" என்பதும்

"எ" என்பதற்கு "ஏ" என்பதும்

"ஒ" என்பதற்கு "ஓ" என்பதும் இன எழுத்துக்களாம்.

"க்" என்னும் வல்லின மெய்க்கு "ங்" என்னும் மெல்லின மெய்யும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| "ச்" | " | " | "ஞ்" | " | " |
| "ட்" | " | " | "ண்" | " | " |
| "த்" | " | " | "ந்" | " | " |
| "ப்" | " | " | "ம்" | " | " |
| "ற்" | " | " | "ன்" | " | " |

இன எழுத்துக்களாம்.

ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறு இடையின மெய்யும் ஓர் இனமேயாகும். அவற்றுக்கு வேறு எழுத்துக்களின் தொடர்பு இல்லை.

12. பயிற்சி வினுக்கள் :—

1. இன எழுத்துக்கள் என்று சொல்லப்பட்டதேன்?
2. ன், த, ம, ஐ, ச், ஔ என்பவற்றுக்கு இன எழுத்துக்கள் யாவை?

8. மாத்திரை :—

உயிர் எழுத்துக்கள் குறுக உயிர்ப்பன, நெடுக உயிர்ப்பன என முன் படித்தோம். இவ்வாறு குறுக்கியும் நீட்டியும் ஒலிப்பதனுலே ஓசையைப் பிறப்பித்தற்கு ஒரு கால அளவு வேண்டுமன்றே? அவ்வாறு கால அளவு இல்லாவிட்டால் அவ்வொலிகள், நம் கருத்தின்படி

எழுத்துக்களை இசைக்கமாட்டா. கண்ணிமைக்கும் நேர அளவும், கை நொடிக்கும் நேர அளவும் ஆகிய இவ் வளவைகளையே முன்னோர் எழுத்துக்களின் ஓசையை அளக்கும் அளவு கருவியாகக் கொண்டார்கள். அப்படிக் கொண்டு அதற்கு **மாத்திரை** எனப் பெயரிட்டனர்.

**எழுத்துக்களின் மாத்திரை :**

| | | | |
|---|---|---|---|
| உயிர்க்குற்றெழுத்து | = | 1 | மாத்திரை |
| உயிர் நெட்டெழுத்து | = | 2 | ,, |
| மெய் எழுத்து | = | $\frac{1}{2}$ | ,, |
| உயிர்மெய்க் குற்றெழுத்து | = | 1 | ,, |
| உயிர்மெய் நெட்டெழுத்து | = | 2 | ,, |
| ஆய்த எழுத்து | = | $\frac{1}{2}$ | ,, |
| குற்றியல் உகரம் | = | $\frac{1}{2}$ | ,, |
| குற்றியல் இகரம் | = | $\frac{1}{2}$ | ,, |

13. **பயிற்சி வினாக்கள் :—**

1. மாத்திரை என்பது என்ன ?
2. மாத்திரை அளவு எப்படிக் கணிக்கப்படுகிறது ?
3. மாத்திரையின் உபயோகம் யாது ?

எழுத்துக்கள் முதலிலும், இறுதியிலும், நடுவிலும் ஆகச் சொற்களிலே நிற்கவேண்டிய முறைப்படி நின்று இசைப்பதனாலே இனிய ஓசை பிறக்கின்றது. இவ்வாறு இனிய ஓசையைப் பிறப்பித்தல் வேண்டித் தமிழ்ப்பெரி யோர்கள், இன்ன எழுத்துக்கள் சொற்களின் முதலிலும், இன்ன எழுத்துக்கள் சொற்களின் இறுதியிலும், இன்ன எழுத்துக்கள் நடுவிலும் நின்று இசைத்தல் வேண்டுமென வரம்புபடுத்தி உள்ளார்கள். இவ்வாறு எல்லை கடவாமல் தமிழ் எழுத்துக்கள் சொற்களிலே நிலைபெற்று வருத

லாலே தமிழ்மொழி இனிமையுடைய மொழியாய் இருக்கின்றது. இனி முதல் இறுதி என்னும் இரண்டிடங்களிலும் வரும் எழுத்துக்களை அறிவோம்.

9. முதல் நிலை :—

சொற்களின் முதலில் நிலைத்து நிற்கும் எழுத்துக்களை முதனிலை என்பர்.

அவ்வாறு சொற்களின் முதலில் நிலைத்து நிற்கும் எழுத்துக்கள், அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் பன்னிரண்டு உயிர்களும், க், ச், த், ந், ப், ம், வ், ய், ஞ், ங் என்னும் பத்து மெய்களுமாம்.

உதாரணம் :—

அரசன், ஆடு, இரவு, ஈரம், உருளை, ஊஞ்சல், எலி, ஏணி, ஐயம், ஒருமை, ஓதல், ஔவியம் என உயிர்களும், கதவு, சந்திரன், தந்தை, நன்றி, படிப்பு, மல்லிகை, வறுமை, யந்திரம், ஞமலி (நாய்), ஙனம் என மெய்களும் சொல்லுக்கு முதலில் வந்தமை காண்க.

10. இறுதி நிலை :—

சொற்களின் இறுதியில் நிலைத்து நிற்கும் எழுத்துக்கள் இறுதி நிலை எனப்படும். இவை, அ, ஆ முதலாகிய பன்னிண்டு உயிர்களும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொரு மெய்களும், குற்றியல் உகரமும் ஆகிய இருபத்து நான்குமாம்.

உதாரணம் :—

பெரிய, பலா, சிரி, தீ, உது, பூ, சேஎ, தே, ஆசை, நொ (துன்பப்படு), போ, கௌ என உயிர்களும்,

உரிஞ், மண், வெரிந் (முதுகு), மரம், பொன், காய், பெரியர், உரல், தெவ் (பகை), யாழ், அவள் என மெய்களும்,

முதுகு எனக் குற்றியல் உகரமும் வந்தமை காண்க.

11. போலி :—

சொற்களிலே ஓர் எழுத்து நின்று இசைத்த இடத்திலே அவ்வெழுத்திற்குப் பிரதியாக வேறோர் எழுத்து நின்றிசைப்பினும் முந்திய பொருளையே தந்து நிற்பதும் உண்டு. இவ்வாறு வரும் சொற்களில் பிரதியாக வரும் எழுத்துக்களே போலி எழுத்துக்கள் எனப்படும். இப்போலி எழுத்துக்கள் சொற்களின் முதலிலும், இறுதியிலும், இடையிலும் வரும்.

**உதாரணம் :—**

பயல், பையல் } சொல்லில் முதலெழுத்துப் போலி.

பந்தல், பந்தர் } இறுதிப்போலி.

அரசன், அரைசன் } இடைப்போலி.

இவற்றில் உள்ள இன்னும் பலவேறுபட்ட தன்மைகளை மேல் வகுப்புக்களில் அறிவோம்.

14. பயிற்சி வினாக்கள் :

1. முதனிலையாவது யாது ?
2. சொற்களின் முதலில் வரும் எழுத்துக்கள் யாவை?
3. இறுதி நிலையாவது யாது ?

4. இறுதியில் வரும் எழுத்துக்கள் யாவை ?

5. போலியாவது யாது ?

6. மரன், சாம்பர், அரைசன் இவற்றிலுள்ள போலிகள் யாவை? அவ்வவ்விடங்களில் நிற்கவேண்டிய எழுத்துக்களை வைத்து இசைக்க.

**எழுத்திலக்கணம் நிறைவேறிற்று.**

---

## சொல் இலக்கணம்

---

சொற்களின் இயல்பைப் புலப்படுத்துவதே சொல் இலக்கணம் எனப்படும்.

**12. சொல் :—**

ஓர் எழுத்துத் தனித்தேனும், இரண்டு முதலிய பல எழுத்துக்கள் ஒன்று சேர்ந்தேனும் பொருளை அறிவித்தால், அது சொல்லெனப்படும். பொருளை அறியாத போது, ஓர் எழுத்துத் தனித்து இருப்பினும், பல எழுத்துக்கள் ஒன்று சேர்ந்திருப்பினும் சொல்லெனப்படா. அவை எழுத்துக்களேயாம்.

உதாரணம் :—

வா, நீ, போ, ஆ, ஈ (ஓரெழுத்துச் சொற்கள்)
யார், யானை, ஆடு, கோழி (இரண்டு ,, ,, )

பிள்ளை, கத்தி, குதிரை, பாம்பு (மூன்றெழுத்துச் சொற்கள்)

விளக்கு, குரங்கு, சூரியன் (நான்கு ,, ,, )

மந்திரம், இளையவன், சந்திரன் (ஐந்து ,, ,, )

இலக்கணம், மருத்துவன் (ஆறு ,, ,, )

கார்த்திகேயன், சித்திரகூடம் (ஏழு ,, ,, )

இவைகள் எல்லாம் பொருளை அறிவித்து வருதலி னாலே **சொற்கள்** எனப்படும்.

ஙு, ஞுறி, மஙுவ, லேவசுறு—இவைகள் தனித்தும் சேர்ந்தும் வந்திருப்பினும், பொருளை அறிவியாமையால், சொற்கள் எனப்படா.

இவ்வாறு நாம் அறிந்துகொண்ட சொல்லைப் "**பதம்**" என்றுஞ் சொல்வார்கள். இப்பதங்கள் (சொற்கள்), பயன்படும் பல உறுப்புக்களாகப் பிரிக்கக் கூடியனவா கவும், அவ்வாறு பிரிக்கக் கூடாதனவாகவும் இரு வகை யாய் இருக்கின்றன.

13. பகுபதம், பாகப்பதம் :—



(அ)



(ஆ)

இரண்டு படங்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் (அ) என்று குறிப்பிடப்பட்டுள்ள படம் ஒரு தூக்குச் செம்பு. இந்தத் தூக்குச் செம்பு இரண்டு உறுப்புக்களா லே ஆக்கப்பட்ட ஒரு பொருள். இது போலவே பல உறுப்புக்களாலே ஆக்கப்பட்டுள்ள பொருள்களும் உண்டு.

இந்தத் தூக்குச் செம்பின் மேலேயுள்ளது, மூடியும் கைப்பிடியும் சேர்ந்த உறுப்பு. அதைப் பிரித்துவிட்டால் மிகுதியாயிருப்பது செம்பு.






மூடியும் கைப்பிடியும் செம்பு

மேலே காட்டிய இரண்டு உறுப்புக்களும் சேர்ந்த போதுதான் தூக்குச் செம்பாகும்.

இனி, (ஆ) என்று குறிப்பிடப்பட்டுள்ள படத்தைப் பாருங்கள். அஃது ஒரு சட்டியினுடைய படம். தூக்குச் செம்பைப்போலச் சட்டியில் எவையேனும் உறுப்புக்கள் இருக்கின்றனவா ? சட்டியில் உறுப்புக்கள் ஒன்றும் இல்லையே. அப்படியானுல், அதைப் பிரிக்க ஒன்றும் முடியாதா ? ஏன் பிரிக்கக் கூடாது ?



படத்தில் காட்டப்பட்டிருப்பதுபோல உடைத்துப் பிரிக்கலாம். ஆனால், தூக்குச் செம்பு பிரிக்கப்பட்டது போலச் சட்டி பிரிக்கப்படவில்லை. தூக்குச் செம்பைப் பிரித்துப் பார்த்தோம். அதிற்பயனுண்டு. சட்டியைப் பிரிப்பதனால் வரும் பய்ன் யாதுமில்லை.

அது போலவே, சொற்களும் பயன்படும் உறுப்புக்களாகப் பிரிபடக் கூடியனவும், அவ்வாறு பிரிபடக் கூடாதனவுமாய் இருக்கின்றன. பயன்படும் உறுப்புக்களாகப் பிரிபடக்கூடிய சொற்களை (பதங்களை)ப் பகுபதங்கள் என்றும், அவ்வாறு நம்மால் பிரிக்க முடியாது இருப்பனவற்றைப் பாகப்பதங்கள் என்றும் சொல்வர்.

பகுபதம்—பகுக்கக்கூடிய (பிரிக்கக்கூடிய) இயல்புடைய பதம்.

பகாப்பதம்—பகுக்கக்கூடாத (பிரிக்கக்கூடாத) இயல்புடைய பதம்.

I. பகுபதம் :—

'தச்சனுடைய வேலை யாது?' என்றால், '**தச்சு**' என்றும், 'கணக்கனுடைய வேலை யாது?' என்றால், 'கணக்கு' என்றும் சொல்லிவிடுவோம் அன்றே? ஆகவே, தச்சுத் தொழில் செய்கிற காரணத்தால் '**தச்சன்**' என்றும், கணக்குத் தொழில் செய்கிற காரணத்தால் '**கணக்கன்**' என்றும் அவ்வத்தொழில் செய்வோரைக் கூறுகின்றோம்.

தச்சன் என்ற சொல்லைத் **தச்சு+அன்** என்றும், கணக்கன் என்ற சொல்லைக் **கணக்கு+அன்** என்றும் பிரித்துக்கொள்ளலாம்.

இவற்றுள் **தச்சு, கணக்கு** என்பன தொழில்களையும், **அன்** என்பது அவ்வத்தொழில் செய்வோனையும் உணர்த்துகின்றன.

இராமன் **உண்டான்**
இராமன் **உண்கிறான்** } இவை வினைச் சொற்கள்.
இராமன் **உண்பான்**

இராமன் செய்த தொழில் **உண்டல்.** ஆகையால், அதனை உணர்த்தவே **உண்டான்** என்ற சொல்லின் முதல் உறுப்பாக "**உண்**" என்பது வந்தது. கடைசியில் உள்ள "**ஆன்**" என்பது உண்ணும் தொழிலைச் செய்த இராமனைக் காட்ட வந்தது. இவ்விரண்டு உறுப்புக்களையும் விட இடையிலே "ட்" என்ற உறுப்பு ஒன்று இருக்கின்றது. அந்த "ட்" என்ற உறுப்பு, இராமன் இதற்கு முந்திய காலத்திலே உண்ணுதலைச் செய்தான் என்பதைக் காட்ட வந்தது. ஆகவே, அந்த "ட்" என்பது போன்ற உறுப்புக் **காலத்தைக் காட்டுகிறது** என்பது விளங்குகிறது.

இதுபோலவே **உண்கிறான்** என்பதை **உண்+கிறு+ஆன்** எனப் பிரிக்கலாம். இதிலும் "**உண்**" என்பது தொழிலையும், **ஆன்** என்பது உண்ணுகிற இராமனையும், காட்டுகின்றன. இடையில் உள்ள "**கிறு**" என்னும் உறுப்பு, இப்போதுதான் அத்தொழில் நடக்கிறது என்பதைக் காட்டுகிறது.

**உண்பான்** என்பதையும் இப்படியே பிரிப்போமானால், **உண்+ப்+ஆன்** எனப் பிரிக்கலாம். இதில் இடையே வந்துள்ள உறுப்பு ஆகிய "ப்" என்பது இனிமேல் **உண்பான்** என்பதைக் காட்ட வந்தது. இங்ஙனம் இடையில் வரும் உறுப்பு **இடைநிலை** எனப்படும்.

முன்பு நடந்தவற்றைக் குறிப்பிடும் வினைச்சொற்களை, **இறந்தகால வினைச்சொற்கள்** என்றும், இப்போது நடக்கிறவற்றை (நிகழ்கின்றவற்றை)க் குறிப்பிடும் வினைச்சொற்களை **நிகழ்கால வினைச்சொற்கள்** என்றும், இனிமேல் நடப்பனவற்றைக் குறிப்பிடும் வினைச்சொற்களை **எதிர்கால வினைச்சொற்கள்** என்றும் கூறுவர்.

**இறந்த கால இடைநிலைகள் :—**

த், ட், ற், இன் என்பன.

உதாரணம் :—

| | |
|---|---|
| பார்த்தான், செத்தான் | (த் இடைநிலை) |
| கண்டான், மாண்டான் | (ட் ,, ) |
| விற்றான், தின்றான் | (ற் ,, ) |
| போயினான், ஆயினான் | (இன் ,, ) |

குறிப்பு :—"இன்" என்னும் இடைநிலை சிதைவுறாது நின்றும், "ன்" என்பது சிதைந்து "இ" என நின்றும், "இ" என்பது சிதைந்து, "ன்" என நின்றும் இறந்த காலங் காட்டும்.

உதாரணம் :—

| | |
|---|---|
| போயினான் | (இன் இடைநிலை) |
| போனான் | (ன் இடைநிலை) |
| வருந்தியது | (இ இடைநிலை) |

**நிகழ்கால இடைநிலைகள் :—**

கிறு, கின்று, ஆநின்று என்பன.

உதாரணம் :—

வருகிருன், போகிருன், நிற்கிறது. (கிறு இடைநிலை)

நடக்கின்ருன், இருக்கின்ருன். (கின்று இடைநிலை)

போகாநின்ருன், செல்லாநின்ருன். (ஆநின்று „ )

எதிர்கால இடைநிலைகள் :—

ப், வ் என்பனவாம்.

உதாரணம் :—

படுப்பான் (ப் இடைநிலை)

அழுவான், ஓடுவான் (வ் இடைநிலை)

[உதாரணங்களில் காட்டப்பட்டுள்ள பதங்களை முன் காட்டியவாறே பிரித்துணர்க.]

எனவே, தச்சன், கணக்கன் போன்ற பெயர்ச்சொற்களும், உண்டான், நிற்கிருன், இருப்பான் என்பன போன்ற வினைச்சொற்களும் பகுபதங்களாம்.

பகுபத உறுப்புக்கள் ;—

பகுபத உறுப்புக்களுள், பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய மூன்று உறுப்புக்களையும் தெரிந்துகொண்டீர்கள். இவற்றைவிட இன்னும் சந்தி, சாரியை, விகாரம் என மூன்று உறுப்புக்களும் உள்ளன.

எனவே, பகுபத உறுப்புக்கள்,

பகுதி
விகுதி
இடைநிலை
சந்தி
சாரியை
விகாரம்

என்னும் ஆறுமாம்.

இந்த ஆறு உறுப்புக்களின் தன்மைகளை மேல் வகுப்புக்களில் விளக்கமாக அறிந்துகொள்வீர்கள்.

சில பகுபதங்களை அப்பியாசத்தின்பொருட்டுப் பிரித்துக் காட்டுகின்றோம்:

| | |
|---|---|
| பொன்னன்: | பொன் + அன் = பொன்னன். |
| வெற்றிலை: | வெறுமை + இலை = வெற்றிலை. |
| பெற்றான்: | பெறு + ஆன் = பெற்றான். |
| செத்தான்: | சா + த் + த் + ஆன் = செத்தான். |
| வருவான்: | வா + ரு + வ் + ஆன் = வருவான். |
| வந்தான்: | வா + த் + த் + ஆன் = வந்தான். |

II. பகாப்பதம் :—

மரம் என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். இதனை மர்+அம் என்றும், மர+ம் என்றும், ம+ரம் என்றும், ம+ர+ம் என்றும் பலவாறாகப் பிரிக்கலாம். இப்படிப் பிரிப்பதனால், மரம் என்ற சொல் எப்படி வந்தது என்று அறிவதற்கு இடமில்லை. ஆனபடியால், பயன்படுமாறு பிரிக்க முடியாமல் இருக்கும் பதங்களைப் பகாப்பதங்கள் என்றறிந்துகொள்க.

உதாரணம் :—

சட்டி, யானை, பசு,<br>போ, நில், வினா. } முதலியன.

15. பயிற்சி வினாக்கள் :—

1. சொல்லாவது யாது ?
2. பகுபதம் என்பது என்ன ?

3. இரும்பு, காட்சி, இடம், வேளாளன், எருமை என்னும் இவற்றுள் பகுபதங்கள் யாவை ?
4. கட்டினன், தைத்தான், எழுதுகிறான், வெட்டுவான் என்னும் இவற்றைப் பிரித்துக்காட்டுக.
5. பகுபத உறுப்புக்கள் யாவை ?
6. பகாப்பதமாவது யாது ?
7. அணில், தருமவான், பனை, நடையன், பொன், மண், பூ, போ, வா என்னும் இவற்றுள் பகாப்பதங்கள் யாவை ?

## 14. சொற்களின் வகை:—

மேலே நாம் படித்துக்கொண்ட சொற்கள் (பதங்கள்) ஏதாவது ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொற்கள், ஏதாவது ஒன்றைப்பற்றிப் பேசுவதைக் குறிக்கும் சொற்கள் என இரண்டு வகைப்படும்.

ஏதாவது ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல் **பெயர்ச்சொல்.**

ஏதாவது ஒன்றைப்பற்றி ஏதாவது பேசுவதைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்.**

பெயரும் வினையும் ஆகாது, அவற்றோடு சார்ந்து பொருள் அறிவித்து வரும் சொல்லும் உண்டு. அஃது **இடைச்சொல்** எனப்படும்.

பொருளின் இயல்பையும், தொழிலின் இயல்பையும் தனித்தனியே உணர்த்திவரும் சொல்லும் ஒன்று உளது. அஃது **உரிச்சொல்** எனப்படும்.

எனவே, சொற்கள்,

1. **பெயர்ச்சொல்**
2. **வினைச்சொல்**
3. **இடைச்சொல்**
4. **உரிச்சொல்**


என நான்கு வகைப்படும்.

# I. பெயர்ச்சொல்

ஏதாவது ஒன்றினுடைய பெயரைச் சொல்லும் சொல் பெயர்ச்சொல்லாம். பலவற்றினுள்ளே ஒன்றனைப் பெயர்த்து (வேறுபடுத்திக்) கூறுவது என்பதே பெயர் என்பதனுடைய கருத்தாம்.




புத்தகம்




கை



மலை



வட்டம்



காலை



நடத்தல்

முன்பக்கத்தில் சில படங்கள் காட்டப்பட்டுள்ளன. "**புத்தகம்**" என்று சொல்லும் போது, அந்தச் சொல் ஏனையவற்றுள்நின்றும் புத்தகமாகிய பொருளைப் பெயர்த்திருக்கிறதைக் கண்டுகொள்ளுங்கள். இங்கே புத்தகமாகிய பொருளைப் பெயர்த்துக் குறிப்பிட்ட **புத்தகம்** என்ற சொல் பெயர்ச்சொல்லாகும்.

ஆனால், படத்தில் இருக்கிற அல்லது நீங்கள் கைகளில் வைத்துக்கொண்டு படிக்கிற புத்தகங்கள் பெயர்ச்சொற்களாகா. அவற்றினுடைய பெயரை உணர்த்துகின்ற "**புத்தகம்**" என்ற சொல்லே பெயர்ச்சொல்லாகும் என அறிக.

**உதாரணம் :—**

**மரம், யாழ்ப்பாணம், இரா, தலை, கறுப்பு, நடை.**

**பெயர்ச்சொற்களின் வகை :—**

பெயர்கள்,

**பொருளுக்கும்**
**இடத்துக்கும்**
**காலத்துக்கும்**
**சினைக்கும் (உறுப்புக்கும்)**
**பண்புக்கும் (குணத்துக்கும்)**
**தொழிலுக்கும்**

பெயராக வரும்.

(அ) பொருளுக்குப் பெயராக வரும் சொல் **பொருட் பெயர்ச்சொல்** எனவும்,

(ஆ) இடத்துக்குப் பெயராக வரும் சொல், **இடப் பெயர்ச்சொல்** எனவும்,

(இ) காலத்துக்குப் பெயராக வரும் சொல், **காலப் பெயர்ச்சொல்** எனவும்,

(௭) சினைக்குப் பெயராக வரும் சொல், சினைப் பெயர்ச் சொல் எனவும்,

(௮) குணத்துக்குப் பெயராக வரும் சொல், குணப் பெயர்ச்சொல் எனவும்,

(௯) தொழிலுக்குப் பெயராக வரும் சொல், தொழிற் பெயர்ச்சொல் எனவும் கூறப்படும்.

(அ) **பொருட்பெயர்** :—பொன், மரம், மனிதர், விலங்கு, அறம் முதலிய பொருள்களின் பெயரைச் சொல் வது பொருட்பெயராம்.

(ஆ) **இடப்பெயர்** :—மலை, வனம், நாடு, வானம், அகம், புறம் முதலிய இடங்களின் பெயரை உணர்த்தும் சொல் இடப்பெயராம்.

(இ) **காலப்பெயர்** :—ஆண்டு, கார் காலம், முதலிய பெரும்பொழுதுகள், காலை மாலை முதலிய சிறு பொழுதுகள், மாதம், வாரம், நாள், இரா, பகல், நேற்று, நட்சத்திரம் முதலிய காலங்களுக்குப் பெயராக வருவது காலப்பெயராம்.

(௭) **சினைப்பெயர்** (உறுப்புப் பெயர்) :—தோள், கை, கால், இலை, பூ முதலிய உறுப்புக்களின் பெயராக வருவது சினைப் பெயராம்.

(௮) **குணப்பெயர்** (பண்புப்பெயர்) :—பெருமை, சிறுமை, அறிவு, அறியாமை, ஒப்புமை, ஒவ்வா மை என்பனவும் ; கறுப்பு, சிவப்பு என்பனவும் ; மக்களின் தன்மை, தெய்வத்தன்மை என்பனவும்; வட்டம், சதுரம் என்பனவும் ; இவை போன்ற பிறவுமாகிய பண்புகளின் பெயராக வருவது பண் புப் பெயராம்.

(௯) **தொழிற்பெயர்** :—நடை, கொடை, தச்சு, ஏவல், காட்சி முதலிய தொழில்களின் பெயராக வருவது தொழிற்பெயராம்.

குறிப்பு:—இடப்பெயர், இடம் கருதாதபோது பெயராகவே வரும். காலப் பெயர்களும் சினைப்பெயர்களும் அவ்வாறே வரும். ஆகவே, பெயர்கள், பொருள், பண்பு, தொழில் என்னும் மூவகையுள் அடக்கப் பட்டு வருதலும் உண்டு.

மேலும், சுட்டு, வினா ஆகியனவாகிய இடைச் சொற்களால் வரும் பெயர்கள், சொல்வோன் குறிப் பின்படி பொருளாதிய ஆறனுள் ஒன்றில் அடங்கும்.

16. **பயிற்சி வினாக்கள் :—**

1. சொற்கள் எத்தனை வகைப்படும்? அவையாவை?
2. பெயர்ச்சொல்லாவது யாது?
3. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?
4. கந்தன், பறவை, இலங்கை, பாம்பு, கருமை, மூக்கு, கொடை, கூந்தல், கொழும்பு, சதுரம், வாரம்—இப்பெயர்ச்சொற்கள் எவ்வகைகளில் அடங்கும்?

பெயர்ச்சொற்களினாலே திணை, பால் எண், இடம், வேற்றுமை என்னும் ஐந்தனையும் அறியலாம்.

குறிப்பு :—மேற்கூறிய ஐந்தனையும் உணர்த்தும் பெயர் களும், அவற்றுள் சிலவற்றையே உணர்த்தும் பெயர்களும் உண்டு.

## 1. திணை

பொருள்கள், இயங்கும் பொருள்கள், இயங்காத பொருள்கள் என இரு வகைப்படும்.

இயங்குவனவற்றில் நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன ஆகிய எல்லாம் அடங்கும்.

இயங்காதனவற்றில் உயிர்ப்பொருள்களும், உயிர் இல்லாத பொருள்களும் என இரு வகை உண்டு. இவற்றைப் பின் வரும் படத்தில் காண்க.

**பொருள்களின் பகுப்பு:**

- பொருள்கள்
  - இயங்குவன
    - நடப்பன (மாடு), பறப்பன (பறவை), ஊர்வன (பாம்பு), நீந்துவன (மீன்)
      - உயிர் உடையன
  - இயங்காதன
    - நிற்பன
      - உயிர் உடையன (மரம்)
      - உயிர் இல்லாதன (மலை)

**உயிர் உள்ளன :**—மக்கள், விலங்குகள், பறவைகள், பாம்புகள், மீன்கள், மரங்கள் ஆதியன.

**உயிரில்லாதன:**—மலை, கல், மண், பொன் முதலியன.

இப்போது, பல வேறுவகைப்பட்ட சாதிகளாயிருந்த பொருள்கள் எல்லாவற்றையும் உயிர் உள்ளன, உயிர்

இல்லன என இரு பகுப்புக்களில் அடக்கிக்கொண்டோம். இவ்விருவகைப்பொருள்களும், பகுத்தறிவு, மானம் முதலிய உயர்ந்த அறிவினலே உயர்நிலையுடையனவும், அஃதல்லாத நிலையுடையனவும் என இரு வகைப்படுகின்றன.

உயர்வாகிய நிலையுடைய பொருள்களை **உயர்திணைப் பொருள்கள்** எனவும்,

உயர்வு அல்லாத பொருள்களை (அல் + திணை) = **அஃறிணைப் பொருள்கள்** எனவும் இலக்கண நூலார் கூறுவர். **திணை = நிலை.**

**உயர்திணை :—**

உயர்ந்த அறிவினலே உயர்ந்த நிலையையுடைய பொருள்கள் **மக்களும்**, மக்களினும் உயர்ந்த **தேவர்களும்**, மக்களினும் தாழ்ந்த **நரகர்களும்** ஆவார்கள்.

**அஃறிணை (அல் + திணை) :—**

மேற்கூறிய மூவகைப்பட்ட உயர்ந்த நிலையையுடைய பொருள்கள் அல்லாதனவாகிய **விலங்கு, பறவை, பாம்பு** முதலிய **ஊர்வனவும், மீன்** முதலிய **நீந்துவனவும், நிலம், மலை, மரம்** முதலிய நிற்பனவும் ஆகிய பொருள்கள் எல்லாம் அஃறிணைப் பொருள்களாம்.

முன்பு கூறப்பட்ட பெயர்கள் எல்லாம் திணை வகையால் இரண்டு வகைப்பட்டமை காண்க.

இவை நிற்க.

உயர்திணை உயிர்கள் தம் கருத்தை வெளிப்படுத்தச் செய்யும் ஒலியைப் “ **பேசுதல்** ” என்பர்.

அஃறிணை உயிர்களின் ஒலிகளைப் பல வேறு வகையாகப் பிரித்துக் கூறுவர்.

### அஃறிணை உயிர்களின் ஒலிகள் :

| | | | |
|---|---|---|---|
| நாய் | ... குரைக்கும் | கோழி | ... கூவும் |
| குதிரை | ... கனைக்கும் | காகம் | ... கரையும் |
| கழுதை | ... கத்தும் | மயில் | ... அகவும் |
| பசு | ... கதறும் | குயில் | ... கூவும் |
| சிங்கம் | ... கர்ச்சிக்கும் | புறா | ... குறுகுறுக்கும் |
| புலி | ... உறுமும் | ஆந்தை | ... அலறும் |
| யானை | ... பிளிறும் | பாம்பு | { கொறிக்கும் |
| நரி | ... ஊளையிடும் | | சீறும் |

**அஃறிணை உயிர்களின் இளமைப் பெயர்கள் :—**

**பிள்ளை** :—அணிற்பிள்ளை, கீரிப்பிள்ளை, கிளிப்பிள்ளை.

**குட்டி** :—நாய்க்குட்டி, ஆட்டுக்குட்டி, பூனைக்குட்டி, புலிக்குட்டி, சிங்கக்குட்டி, பாம்புக்குட்டி.

**கன்று** :— பசுக்கன்று, எருமைக்கன்று, யானைக்கன்று, மான் கன்று

**குஞ்சு** :—எலிக்குஞ்சு, மீன்குஞ்சு, பறவைக்குஞ்சு.

குறிப்பு :—பிள்ளை என்பது தென்னம்பிள்ளை, கமுகம்பிள்ளை என வருதலும் உண்டு.

கன்று என்பது, ஆலங்கன்று, அரசங்கன்று, வேப்பங்கன்று, புளியங்கன்று என வருதலும் உண்டு.

குட்டி என்பது, வாழைக்குட்டி என வருதலும் உண்டு.

17. **பயிற்சி வினுக்கள்:—**

1. திணை என்பது என்ன ?
2. திணை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
3. உயர்திணையில் அடங்கும் பொருள்களையும் அஃறிணையில் அடங்கும் பொருள்களையும் கூறுக.
4. கந்தன் வேலி அடைத்தான்.

   புலி பசித்தாலும் புல்லைத் தின்னுது.

   தாய்ப்பசு கன்றுக்குப் பாலூட்டி வளர்க்கும்.

   இத்தொடர்களிலுள்ள அஃறிணைப் பெயர்களையும் உயர்திணைப்பெயர்களையுங் கூறுக.
5. காட்டில் யானை கர்ச்சிப்பதைக் கேட்டுச் சிங்கம் குரைத்தது.

   வீட்டில் கள்வன் புகுந்தபடியால் நாய் அலறிற்று.

   கன்றைக் காணுமையால் பசு கரைந்தது.

   வேலன் ஒரு கீரிக்குழந்தையைப் பிடித்து வளர்த்தான்.

   பாம்புப் பிள்ளைக்கும் பல்லில் விஷமுண்டு.

   பூனை ஒரு எலிக்கன்றைப் பிடித்துத் தின்று விட்டது.

   இத்தொடர்களிலுள்ள பிழைகளைத் திருத்தி அமைக்க.

## 2. பால்

பால் என்பது, உயர்திணைப் பொருள்களையும், அஃறிணைப் பொருள்களையும் அவ்வவற்றின் நிலைமைக்கு ஏற்றவாறு பிரிக்கப்பட்ட பகுப்பாகும்.

உயர்திணை :

| ஆண் | பெண் |
| --- | --- |
| குருடன் | குருடி |
| அரசன் | அரசி |
| கணவன் | மனைவி |
| இளையவன் | இளையவள் |

மேலே காட்டியபடி உயர்திணைப்பொருள்கள் ஆண்பிரிவும் பெண்பிரிவும் வேறுவேறுடையனவாக இருக்கின்றன. இவற்றுள் ஆண் பிரிவு (பகுப்பு) **ஆண் பால்** என்றும், பெண் பிரிவு (பகுப்பு) **பெண் பால்** என்றும் கூறப்படும். ஆண் பன்மையினையும், பெண் பன்மையினையும், ஆண் பெண் இரண்டும் கலந்து வரும் பன்மையினையும் **பலர் பால்** எனக் கூறுவர்.

**உதாரணம் :—**

**முருகன், அவன்.** (ஆண் பால்)
**தமயந்தி, அவள்.** (பெண் பால்)
**ஆடவர், போர் வீரர், மங்கையர், மக்கள்,** } பலர் பால்

உயர்திணைக்குரியவர், அறம், மறம் என்பவற்றைப் பகுத்துணரும் தன்மையும், தேசாபிமானம், தெய்வாபிமானம், உயிர், உடல், பொருள் எல்லாவற்றையும் பிறர்க்குதவும் கொடை முதலாகிய குணம் செயல்களும் உடையவர். ஆதலினாலே, அவர்க்கு ஆண், பெண், பலராகிய பகுப்புக்கள் இன்றியமையாதனவாயின.

அஃறிணையுள்ளும் ஆண் பெண் பகுப்பு உள்ளது ஆயினும் அவற்றிடையே மானங்காவாமை, மணமுறை இல்லாமை, தெய்வம் பேணுமை, பகுத்தறிவில்லாமை முதலியவற்ருல் ஆண் பெண் எனப் பகுப்பதனுல் பய னில்லை என்றுணர்ந்த பெரியோர், அத்தகையனவாகிய யானை பறவை முதலிய உயிர்ப்பொருள்களும், நிலம் மலை முதலாய உயரில்லாத பொருள்களும் ஆகிய அவற்றை யெல்லாம் ஆண் பெண் எனப் பகுக்கார் ஆயினுர்.

அவற்றுள் ஒருபொருளைக் குறிப்பதை **ஒன்றன்பால்** என்வும், பலவற்றைக் குறிப்பதை **பலவின் பால்** எனவும் கூறுவர்.

ஒன்றனுக்குரிய பகுதி = ஒன்றன் பால்
பலவற்றினுக்குரிய பகுதி = பலவின் பால்

**உதாரணம் :—**

**அது, மூக்கது — ஒன்றன் பால்**
**அவை, மரங்கள் — பலவின் பால்**

இருதிணைப்பெயர்களும், ஐம்பால்கள் காரணமாக ஐவகைப்பட்டமை காண்க.

(அ) **ஆண் பால் பெயர்**
(ஆ) **பெண் பால் பெயர்** } உயர்திணைப் பெயர்
(இ) **பலர் பால் பெயர்**

(ஈ) **ஒன்றன் பால் பெயர்**
(உ) **பலவின் பால் பெயர்** } அஃறிணைப் பெயர்

இவைகளே இரு திணை ஐம்பாற்பெயர்களாம்.

(அ) **ஆண் பால் பெயர் :—**

ஓர் ஆண் மகன் என்னும் பகுப்பினைக் கொண்ட பெயர்ச்சொல் ஆண் பாற்பெயர்ச்சொல்லாம்.

ஆண் பாற்பெயர்கள், **அன், ஆன், மன், மான், ன்** என்னும் விகுதிகளுள் ஒன்றனைப் பெற்று வரும்.

உதாரணம் :—

| (அ) ஆண் பாற்பெயர் | | விகுதி |
|---|---|---|
| பொன்னன் | (பொன் + அன்) | அன் |
| ஊரான் | (ஊர் + ஆன்) | ஆன் |
| வடமன் | (வடக்கு + மன்) | மன் |
| சேரமான் | (சேரர் + மான்) | மான் |
| பிறன் | (பிற + ன்) | ன் |

(ஆ) பெண் பால் பெயர் :—

ஒரு பெண் மகளைக் குறித்து வரும் பகுப்பினைக் கொண்ட பெயர்ச்சொல் பெண் பாற்பெயர்ச்சொல் எனப்படும்.

பெண் பாற்பெயர்ச்சொற்கள், **அள், ஆள், ள், இ** என்னும் விகுதிகளுள் ஒன்றினைப் பெற்று வரும்.

உதாரணம் :—

| பெண் பாற்பெயர் | | விகுதி |
|---|---|---|
| கண்ணள் | (கண் + அள்) | அள் |
| கூந்தலாள் | (கூந்தல் + ஆள்) | ஆள் |
| பிறள் | (பிற + ள்) | ள் |
| வீரி | (வீரம் + இ + ) | இ |

(இ) பலர் பால் பெயர் :—

இருவரும் அதற்கு மேம்பட்டோருமாகிய பகுப்பினைக் கொண்ட பெயர்ச்சொல் பலர் பாற்பெயர் எனப்படும்.

பலர் பால் பெயர்ச்சொல்லில், இருவரும் இருவர்க்கு மேம்பட்டவருமாகிய ஆண் பகுதியும், இருவரும் இருவர்க்கு மேம்பட்டோருமாகிய பெண் பகுதியும், ஆண் பெண் இரு பகுப்பும் சார்ந்த இருவரும் இருவர்க்குமேம்பட்டோரும் ஆகிய பகுப்பும் பலர் பாலுள் அடங்குவன.

பலர் பாற்பெயர்ச்சொற்கள், **அர், ஆர்,** மார், ர், **கள்** என்னும் விகுதிகளுள் ஒன்றனைப் பெற்று வரும்.

**உதாரணம் :—**

| பலர் பாற்பெயர் | | விகுதி |
|---|---|---|
| காதலர் | (காதல்+அர்) | அர் |
| ஊரார் | (ஊர்+ஆர்) | ஆர் |
| தேவிமார் | (தேவி+மார்) | மார் |
| பிறர் | (பிற+ர்) | ர் |
| ஆட்கள் | (ஆள்+கள்) | கள் |

**(ஈ) ஒன்றன் பால் பெயர் :—**

ஒரு பொருளைக் குறித்து வரும் பகுப்பினைக்கொண்ட பெயர்ச்சொல், ஒன்றன் பால் பெயர்ச்சொல்லாம்.

ஒன்றன் பால் பெயர்கள் "**து**" என்னும் விகுதியைப் பெற்று வரும்.

**உதாரணம் :—**

| ஒன்றன் பால் பெயர் | | விகுதி |
|---|---|---|
| அது | (அ+து) | து |
| கொம்பது | (கொம்பு+அ+து) | து |

**(உ) பலவின் பால் பெயர் :—**

ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களைக் குறித்து வரும் பகுப்பினைக் கொண்ட பெயர்ச்சொல் பலவின் பாற் பெயர்ச்சொல்லாம்.

பலவின் பால் பெயர்கள், **அ, வை, கள்** என்னும் விகுதிகளுள் ஒன்றனைப் பெற்று வரும்.

உதாரணம் :—

| பலவின் பால் பெயர் | | விகுதி |
|---|---|---|
| கரிய | (கருமை + அ) | அ |
| அவை | (அ + வை) | வை |
| மலர்கள் | (மலர் + கள்) | கள் |

**(ஊ) மரியாதைப் பன்மை :—**

ஒருவர் இன்று நம் வீட்டுக்கு வந்தார்; சுப்பிரமணியனுடைய தகப்பன் கந்தனார் இன்று கொழும்புக்குப் போனார்.—இவ்விரண்டு சொல் தொடர்களிலுமுள்ள **ஒருவர், கந்தனார்** என்னும் பெயர்ச்சொற்கள், பலரைக் குறிப்பிடாது ஒவ்வொருவரையே குறிப்பிடுகின்றன. இப்படியானால் இவ்விரண்டு பெயர்ச்சொற்களும் என்ன பகுப்பில் அடங்கும் என்று கேட்கிறீர்களா? நல்லது: **ஒருவர், கந்தர்** என அச்சொற்களால் ஒவ்வொருவரே குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவைகள் பலர் பால் சொற்களேயாம். இவ்வாறு வருவனவற்றை மரியாதைப்பன்மை என இலக்கண நூல்கள் கூறும்.

**(எ) பால் பகா அஃறிணைப் பெயர் :—**

**அது, கரியது** என்பன போன்றவை ஒன்றன்பால் பெயர்கள் என்றும், **அவை, கரிய** என்பன பலவின்பாற் பெயர்கள் என்றும் முன்னரே அறிந்துகொண்டீர்கள்.

மரம் முரிந்தது;
மரம் முரிந்தன;

என ஒன்றன்பால் பலவின்பால்கட்குப் பொதுவாக வரும் பெயர்களும் உண்டு. அவ்வாறு வருவனவற்றையே பால்

பகா அஃறிணைப் பெயர் என்பர். (பால் பகா = பாலைப் பகுக்க முடியாத)

உதாரணம் :—

| | | | |
|---|---|---|---|
| யானை | **வந்தது,** | யானை | **வந்தன,** |
| பசு | **மேய்ந்தது,** | பசு | **மேய்ந்தன.** |

இவை நிற்க.

**ஆண் பால் பெண் பாற்சொற்களின் வேறுபாடு :**

ஆண்பாற்சொற்கள், பெண்பாற்சொற்கள் இரண்டிலும் உள்ள வேறுபாடுகள் சிலவற்றை அறிவோம். உயர்திணை ஆண் பாலில் "**அன்**' என்று முடிந்திருக்கிற சொற்கள், பெண் பாலில் '"**அள்**" எனவும் "**இ**" எனவும், "**ச்சி**" எனவும், "**த்தி**" எனவும் ; ஆண் பாலில் "**ஆன்**" என்று முடிந்திருக்கிற சொற்கள், பெண் பாலில் "**ஆள்**" எனவும், "**த்தி**" எனவும் ; ஆண் பாலில் "**வான்**" என முடிந்திருப்பவை, பெண்பாலில் "**வதி**" எனவும் ; ஆண் பாலில் "**காரன்**" என முடிந்திருப்பவை பெண் பாலில் "**காரி**" எனவும் முடியும்.

உதாரணம் :—

"அன்" **என்னும் இறுதியையுடைய ஆண் பாற் சொற்கள், "அள்" எனப் பெண்பாலாக முடிவதற்கு :—**

| ஆண் பால் | விகுதி | பெண் பால் | விகுதி |
|---|---|---|---|
| **இவன்** | **—அன்** | **இவள்** | **—அள்** |
| **பெரியன்** | **—அன்** | **பெரியள்** | **— அள்** |

"அன்" என்னும் இறுதியையுடைய ஆண் பாற் சொற்கள் "இ" எனப் பெண் பாலாக முடிவதற்கு :—

| ஆண் பால் | விகுதி | பெண் பால் | விகுதி |
|---|---|---|---|
| குருடன் | —அன் | குருடி | — இ |
| காதலன் | —அன் | காதலி | — இ |

"அன்" என்னும் இறுதியையுடைய ஆண் பாற் சொற்கள் "ச்சி" எனப் பெண் பாலில் முடிவதற்கு:—

| ஆண் பால் | விகுதி | பெண் பால் | விகுதி |
|---|---|---|---|
| புலையன் | —அன் | புலைச்சி | — ச்சி |
| இடையன் | —அன் | இடைச்சி | — ச்சி |

"அன்" என்னும் இறுதியையுடைய ஆண் பாற் சொற்கள் "த்தி" எனப் பெண் பாலாக முடிவதற்கு :—

| ஆண் பால் | விகுதி | பெண் பால் | விகுதி |
|---|---|---|---|
| குயவன் | — அன் | குயத்தி | — த்தி |
| குறவன் | — அன் | குறத்தி | — த்தி |

"ஆன்" என்னும் இறுதியையுடைய ஆண் பாற் சொற்கள் "ஆள்" எனப் பெண் பாலாக முடிவதற்கு :—

| ஆண் பால் | விகுதி | பெண் பால் | விகுதி |
|---|---|---|---|
| யாழ்ப்பாணத்தான் | —ஆன் | யாழ்ப்பாணத்தாள் | — ஆள் |
| உடையான் | —ஆன் | உடையாள் | — ஆள் |

"ஆன்" என்னும் இறுதியையுடைய ஆண் பாற் சொற்கள் "த்தி" எனப் பெண் பாலாக முடிவதற்கு :—

| ஆண் பால் | விகுதி | பெண் பால் | விகுதி |
|---|---|---|---|
| வண்ணான் | — ஆன் | வண்ணாத்தி | — த்தி |
| தட்டான் | — ஆன் | தட்டாத்தி | — த்தி |

"அன்" என ஆண் பாலில் முடிந்தவை பெண் பாலில் "தை" என மாறுபட்டு வருவதற்கு :—

| ஆண் பால் | விகுதி | பெண் பால் | விகுதி |
| --- | --- | --- | --- |
| புனிதன் | — அன் | புனிதை | — தை |
| பண்டிதன் | — அன் | பண்டிதை | — தை |

"வான்" என ஆண் பாலில் முடிந்தவை பெண் பாலில் "வதி" என முடிவதற்கு :—

| ஆண் பால் | விகுதி | பெண் பால் | விகுதி |
| --- | --- | --- | --- |
| குணவான் | —வான் | குணவதி | —வதி |
| புண்ணியவான் | —வான் | புண்ணியவதி | —வதி |

"காரன்" என ஆண் பாலில் முடிந்தவை பெண் பாலில் "காரி" என முடிவதற்கு :—

| ஆண் பால் | விகுதி | பெண் பால் | விகுதி |
| --- | --- | --- | --- |
| கூலிக்காரன் | —காரன் | கூலிக்காரி | — காரி |
| கெட்டிக்காரன் | —காரன் | கெட்டிக்காரி | — காரி |

சாலி, இ, ஆளி என்னும் இறுதிகளையுடைய சில பெயர்கள் ஆண் பால் பெண் பால்கட்குப் பொதுவாக வரும்.

உதாரணம் :—

| ஆண் பால் | விகுதி | பெண் பால் | விகுதி |
| --- | --- | --- | --- |
| புத்திசாலி | —சாலி | புத்திசாலி | —சாலி |
| அதிட்டசாலி | —சாலி | அதிட்டசாலி | —சாலி |
| பாவி | — இ | பாவி | — இ |
| ஞானி | — இ | ஞானி | — இ |
| நோயாளி | — ஆளி | நோயாளி | — ஆளி |
| குற்றவாளி | — ஆளி | குற்றவாளி | — ஆளி |

குறிப்பு :—

மேலே காட்டிய ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர்கட்கு உரிய உதாரணங்களில் உள்ள விகுதிகள் எல்லாம், அவ்வப்பெயர்கட்குரிய **அன், ஆன், அள், ஆள்** முதலியவற்றுள் அடங்குவனவே. ஆனால், இங்கு ஆண் பாற்பெயர்களிலும் பெண் பாற்பெயர்கள் எவ்வாறு வேறுபட்டிருக்கின்றன என்பதைக் காட்டவே "**த்தி, ச்சி**" முதலியனவாகப் பகுத்துக் கொண்டு பலவாகக் கூறினோம். த்தி, ச்சி என்பவைகளில் இகர விகுதியுள்ளமை காண்க.

18. **பயிற்சி வினாக்கள் :—**

1. பால் என்பது யாது?
2. பால் எத்தனை வகைப்படும்?
3. அவற்றுள் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் உரியன யாவை?
4. அஃறிணையில் ஏன் ஆண் பெண் பால்கள் கொள்ளப்படவில்லை?
5. ஆண் பால் விகுதிகள் யாவை? உதாரணங் கூறுக.
6. ஏனைய பால் விகுதிகளையும் உதாரணங்களையும் கூறுக.
7. அரசன், காதலன், தச்சன், பெரியன், ஊரான், கண்ணியவான் என்பவற்றுக்குப் பெண் பால் கூறுக.
8. பண்டிதை, சிறியள், சுன்னாகத்தாள், வண்ணாத்தி இவற்றுக்கு ஆண் பாற்சொற்கள் கூறுக.

## 3. எண்

'பொருள் ஒன்ரு, அன்றிப் பலவா?' என்னும் எண்ணிக்கையைக் குறிப்பது **எண்** எனப்படும். எண்ணிக்கையினுலே அளப்பதனுல் இஃது **எண்ணல் அளவை** எனப்படும்.

பொருள் ஒன்ருக இருப்பின், அஃது **ஒருமை எண்** என்றும்; பொருள்கள் இரண்டாகவும் அதற்கு மேற்பட்டன ஆகவும் இருப்பின், அவை **பன்மை எண்** எனவும் இலக்கண நூல்களால் கூறப்படும்.

ஒருமை = பொருள் ஒன்ருக இருக்கும் தன்மை.

பன்மை = பொருள் பலவாக இருக்கும் தன்மை.

எனவே, எண், ஒருமை, பன்மை என இரண்டு வகைப்படும் எனவும், பொருள்களின் எண்ணிக்கை இவ்விரண்டு வகையுள் அடங்கும் எனவும் அறிக.

**இரு திணையும் எண்ணும் : —**

உயர்திணை ஆண் பால், பெண் பால் இரண்டும் ஒருமை எண்ணுக்குரியனவாகவும்; உயர்திணைப் பலர் பால் பன்மை எண்ணுக்குரியதாகவும் வரும்.

அஃறிணை ஒன்றன்பால் ஒருமை எண்ணுக்கு உரியதாகவும், அஃறிணைப் பலவின் பால் பன்மை எண்ணுக்குரியதாகவும் வரும்.

| | |
|---|---|
| **ஆண் பால்**<br>**பெண் பால்**<br>**ஒன்றன் பால்** | இம்மூன்று பால்களும் ஒருமை எண்ணுக்குரியன. |
| **பலர் பால்**<br>**பலவின் பால்** | இவ்விரண்டு பால்களும் பன்மை எண்ணுக்குரியன. |

உதாரணம் :—

அரசன் — உயர்திணை, ஆண் பால் ஒருமை.

அரசி — உயர்திணை, பெண் பால் ஒருமை.

தேவிமார்<br>கணவர்<br>மக்கள் } — உயர்திணை, பலர் பால் பன்மை.

பெரியது — அஃறிணை, ஒன்றன் பால் ஒருமை.

பெரியன — அஃறிணை, பலவின் பால் பன்மை.

19. பயிற்சி வினக்கள் :—

1. எண்ணுவது யாது? அஃது எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. உயர்திணையில் ஒருமை எண்ணுக்குரிய பால்கள் எவை?
3. அஃறிணையில் ஒருமை எண்ணுக்குரிய பால்கள் எவை?
4. இருதிணையிலும் பன்மைக்குரிய பால்கள் யாவை?
5. இருதிணையிலும் ஒருமைக்குரிய பால்கள் யாவை?
6. விஜயன் இந்தியாவை அரசாண்ட சிங்கவாகுவினுடைய மகன். அவன் துஷ்டனாயிருந்தபடியால், அவனுடைய தந்தை அவனைத் துரத்திவிட்டான். அப்போது விஜயன் எழுநூறு கூட்டாளிகளுடன் இலங்கையை அடைந்தான்.—இத்தொடர்களிலுள்ள ஒருமை பன்மைப் பெயர்கள் யாவை?

## 4. இடம்

நாகராசனும், சிவசங்கரனும் பின் வருமாறு பேசிக் கொண்டிருக்கிறார்கள்:

**நாகராசன் :—**சிவசங்கரா! யான் நேற்றைக்குப் பாடசாலைக்குப் போகவில்லை. ஆனபடியால், நாளைக்கு என்ன தண்டனை கிடைக்குமோ, தெரியவில்லை. நீ போனாயா?

**சிவசங்கரன் :—**ஆம்: யான் போனேன். நீ வாராததைப் பற்றி என்னை ஆசிரியர் விசாரித்தார். அதைப்பற்றி எனக்குத் தெரியாதென்று நான் சொல்லிவிட்டேன்.

**நாகராசன் :—பொன்னன்** பாடசாலைக்கு வரவில்லையா? **அவன்** வந்திருந்தால், என்னைப்பற்றி விசாரித்திருப்பானே?

**சிவசங்கரன் :—**ஆம், **பொன்னன்** விசாரித்ததைச் சொல்லத்தான் தொடங்குகிறேன். அதற்குள்ளாக நீ ஆத்திரப்பட்டால்.........

இச்சம்பாஷணையிற்கலந்துகொண்டவர்கள், நாகராசனும் சிவசங்கரனும் ஆகிய இருவருமே. இவ்விருவரும் இடையில் பொன்னனைப்பற்றியும் பேசினார்கள்.

இப்போது இங்கே மூன்று பிரிவுகள் தோன்றுகின்றன. அவை :—

1. பேசிக்கொண்டிருக்கிறவன்,
2. கேட்டுக்கொண்டிருக்கிறவன்,
3. பேசப்பட்டுக்கொண்டிருக்கிறவன் என்பன.

நாகராசன் பேசும் போது, பேசுகிற தன்னை யான் என்றும், கேட்டுக்கொண்டிருக்கிற சிவசங்கரனை நீ என்றும், பேசப்பட்டுக்கொண்டிருக்கிறவனைப் பொன்னன் என்றும், அவன் என்றும் குறிப்பிட்டான்.

சிவசங்கரன் பேசும் போது, பேசுகிற தன்னை யான் என்றும், கேட்டுக்கொண்டிருக்கிற நாகராசனை நீ என்றும், பேசப்பட்டுக்கொண்டிருக்கிறவனைப் பொன்னன் என்றும், அவன் என்றும் குறிப்பிட்டான்.

இங்கே, பேசிக்கொண்டிருக்கிறவன் தன்னை யான் என்று குறிப்பிட்டான். இங்ஙனம் தன்னைக் குறிப்பிட்டுக்கொள்ளும் இடம் **தன்மை இடம்.**

கேட்டுக்கொண்டிருப்பவன் நீ என்று குறிப்பிடப்பட்டான். இங்ஙனம் குறிப்பிடும் இடம் **முன்னிலை இடம்.**

பேசப்பட்டுக்கொண்டிருப்பவன் பொன்னன் எனவும், அவன் எனவும் குறிப்பிடப்பட்டான். இப்படிக் குறிப்பிடும் இடம் **படக்கை இடம்.**

எனவே, தன்னைக் குறிக்கும் இடம் **தன்மை இடம்** எனவும், அதன் முன்னால் நிலை பெற்று நின்று பேச்சைக் கேட்கும் இடம் **முன்னிலை இடம்** எனவும், இவ்விரண்டிடத்துப் பொருள்களும் அல்லாதனவற்றைக் குறிக்கும் இடம் **படர்க்கை இடம்** எனவும் அறிக.

எல்லாப் பெயர்களும் இந்த மூன்று இடங்களிலும் அமைவனவாகும்.

குறிப்பு :—இதுவரையும் பெயர்ச்சொற்களைப் பொருள் முதலாகிய ஆறு வகையாகவும், பின்பு திணைபற்றி இரு வகையாகவும், அதன் மேல் பால் காரணமாக

ஐவகையாகவும் வகைப்படுத்துப் படித்தோம். இடமும் எண்ணும் காரணமாக மேற்கூறிய பெயர்கள் அவ்வெண்ணிடப் பகுப்புள் அடங்குவனவாம்.

எண்ணும் இடமும் :—

எண்கள் ஒருமை, பன்மை என இரண்டுவகைப்படுமெனவும், இடங்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படுமெனவும் அறிந்துகொண்டீர்கள். முன்பு கூறப்பட்ட பெயர்கள், இவ்வெண்களும் இடங்களும் காரணமாகப் பிரிக்கப்படும் பகுப்புக்களுள் அடங்குமாற்றை இனி அறிவாம் :

தன்மை இடத்துக்குரிய பெயர்கள், எண் காரணமாக இரு வகைப்படுகின்றன. அவை **தன்மை ஒருமைப்பெயர், தன்மைப் பன்மைப்பெயர்** என்பன, இவ்வாறே முன்னிலைப் பெயர்களும் ஒருமை, பன்மைப் பெயர்களாக இரு வகைப்படுகின்றன. படர்க்கைப் பெயர்களும், உயர்திணை ஆண் பால், பெண் பால் என்னும் பகுப்பினைக் கொண்ட ஒருமைப் பெயராகவும், பலர்பால் என்னும் பகுப்பினைக் கொண்ட பன்மைப் பெயராகவும், அஃறிணை ஒன்றன் பால் என்னும் பகுப்பினைக் கொண்ட ஒருமைப் பெயராகவும், அஃறிணைப் பலவின்பால் என்னும் பகுப்பினைக் கொண்ட பன்மைப்பெயராகவும் ஐவகைப்படுகின்றன.

எனவே பெயர்கள்,

| | |
|---|---|
| (அ) **தன்மை ஒருமைப் பெயர்** | பொதுத்திணை |
| (ஆ) **தன்மைப் பன்மைப் பெயர்** | |
| (இ) **முன்னிலை ஒருமைப் பெயர்** | |
| (ஈ) **முன்னிலைப் பன்மைப் பெயர்** | |

(உ) படர்க்கை ஆண் பால் ஒருமைப் பெயர்
(ஊ) படர்க்கைப் பெண் பால் ஒருமைப் பெயர்
(எ) படர்க்கைப் பலர் பால் பன்மைப் பெயர்
} உயர் திணை

(ஏ) படர்க்கை ஒன்றன்பால் ஒருமைப் பெயர்
(ஐ) படர்க்கைப் பலன்வின்பால் பன்மைப் பெயர்
} அஃறிணை

என ஒன்பது வகையாகவும் பகுக்கப்படுகின்றன.

(அ) தன்மை ஒருமைப் பெயர் :—

நான், யான் என்பன தன்மை ஒருமைப் பெயர்களாம்.

(ஆ) தன்மைப் பன்மைப் பெயர் :—

நாம், நாங்கள், யாம், யாங்கள் என்பன தன்மைப் பன்மைப் பெயர்களாம்.

(இ) முன்னிலை ஒருமைப் பெயர் :—

நீ என்னும் ஒன்றுமே முன்னிலை ஒருமைப் பெயராம்.

(ஈ) முன்னிலைப் பன்மைப் பெயர் :—

நீவிர், நீயிர், நீர், நீங்கள், எல்லீர் ( + உம்) என்பன முன்னிலைப் பன்மைப்பெயர்களாம்.

(உ) படர்க்கை ஆண் பால் பெயர் :—

இராமன், அவன், யாவன், பிறன், மற்றையான் முதலாயினவெல்லாம் படர்க்கை ஆண் பால் ஒருமைப் பெயர்களாம்.

(ஊ) படர்க்கைப் பெண் பால் பெயர் :—

கண்ணம்மாள், அவள், எவள், பிறள், மற்றையாள் என்பன போன்றவையெல்லாம் படர்க்கைப் பெண் பால் ஒருமைப் பெயர்களாம்.

(எ) படர்க்கைப் பலர் பால் பெயர் :—

ஆடவர்கள், தேவிமார், மக்கள், அவர், எவர், பிறர், மற்றவர் என்பன போன்றவையெல்லாம் படர்க்கைப் பலர் பால் பன்மைப் பெயர்களாம்.

(ஏ) படர்க்கை ஒன்றன் பால் பெயர் :—

கறுத்தது, அஃது, எது, பிறிது, மற்றது என்பன போன்றன படர்க்கை ஒன்றன் பால் ஒருமைப் பெயர் களாம்.

(ஐ) படர்க்கைப் பலவின் பால் பெயர் :—

பெரியன, அவை, யாவை, பிற, மற்றைய என்பவை போன்றன படர்க்கைப் பலவின் பால் பன்மைப் பெயர் களாம்.

20. பயிற்சி வினாக்கள் :—

1. இலக்கண நூல்களால் குறிக்கப்படும் இடங்கள் எத்தனை ? அவை யாவை ?
2. இடமும் எண்ணும் காரணமாகப் பெயர்கள் எத்தனை வகைப்படுகின்றன ? அவை யாவை ?
3. எல்லாப் பெயர்களும் அவற்றில் அடங்குவதை விளக்குக.
4. கந்தா ! அன்று நீயும் நானும் கோயிலுக்குப் போனோம். அப்போது தெரு வீதியில் முருகேச னும் வந்தான். பின் நாங்கள் மூவரும் ஒருமித்துப் போனோம். கோயில் வீதியில் அநேக வண்டிகள் நின்றன. கடைகளும் பல இருந்தன, ஆண்களும் பெண்களும் வருவதும் போவதுமாய் இருந்தனர். அடியார்கள் பலர் சுவாமி தரிசனம் செய்ய வந்தார் கள். எல்லாவற்றையும் நீயும் பார்த்தாயல்லவா ? அன்று கண்ட காட்சி கண்ணுக்கு ஒரு விருந்து தான்.

   இதில் உள்ள பெயர்ச்சொற்களை வகைப்படுத்திக் கூறுக.

(ஒ) **விளிப் பெயர் :—**

இராமன் தெரு வீதியில் நடந்து போகின்ருன். இப்போது இராமன் படர்க்கை இடத்துக்குரியவனுவான். யான் அவனேடு பேசுவதற்காக, 'இராமா! நீ இங்கே வா,' என்று கூப்பிட்ட போது இராமன் என்னை நோக்கி முன்னிலைப்படுகிறபடியால், முன்னிலை இடத்தை அடைகிருன். இங்கே 'இராமா!' என்பது விளிப்பெயர் (அழைக்கப்படுபெயர்).

**உதாரணம் :—**

**தம்பீ!** வா. **பிள்ளாய்!** வாழ்க. **கிளியே!** பேசு. **கந்தன்!** படி என வரும்.

(ஓ) **பொதுப் பெயர்கள் :—**

பெயர்களில் இருதிணைக்கும் பொதுவான பெயர்கள் பலவுள. அவற்றுள் பிரதானமான சிலவற்றை இப்போது அறிவோம்:

**தான், யான், நான், நீ** என்னும் தன்மை முன்னிலை இடங்கட்குரிய ஒருமைப் பெயர்களும், **தாம், யாம், நாம், எல்லாம், எல்லீர், நீயிர், நீர், நீவிர்** என்னும் தன்மை முன்னிலையிடங்கட்குரிய பன்மைப் பெயர்களும் இருதிணைப் பொதுப் பெயர்களாம்.

## ஆகுபெயர்

ஆகுபெயராவது, ஒரு பொருளுக்கு இயல்பாக இட்டு வழங்கும் பெயர், அதனேடு தொடர்புடைய பொருளுக்கும் பெயராக வருவதாம்.

இப்பெயர் புதிதாக ஆக்கிக்கொள்ளப்படாது, பண்டு தொட்டே அவ்வாறு வழங்கப்பட்டு வருதலையுடையது.

1. பொருளின் பெயர், சினைக்கும்,
2. சினையின் பெயர், பொருளுக்கும்,
3. இடத்தின் பெயர், இடத்திலுள்ளதற்கும்,
4. இடத்திலுள்ளதன் பெயர், இடத்திற்கும்,
5. காலத்தின் பெயர், அக்காலத்தோடு தொடர்புடையதற்கும்,
6. குணத்தின் பெயர், குணத்தை உடையதற்கும்,
7. தொழிலின் பெயர், தொழிலைப் பெற்றதற்கும்,
8. அளவைகளின் பெயர், அளக்கப்படு பொருள்கட்கும்,
9. சொல்லின் பெயர், அதனுல் உணர்த்தப்படும் பொருளுக்கும்,
10. கருவியின் பெயர், அதனுல் ஆகும் காரியத்திற்கும்,
11. காரியத்தின் பெயர், அதற்குரிய காரணத்துக்கும் (கருவிக்கும்),
12. செயப்படுபொருளின் பெயர், அதைச் செய்வோனுக்கும்,
13. ஒப்புக் காட்ட வந்த பொருளின் பெயர், பேச எடுத்துக்கொண்ட பொருளுக்கும், பெயராக வரும்.

இவற்றுள், முதல் ஏழையும் இப்போது அறிந்து கொள்வோம் :

1. பொருளாகுபெயர் :—

"முல்லை வளர்ந்தது" என்று சொல்லும் போது, முல்லை என்பது ஒரு பூங்கொடியின் இயல்பான பெயர் என்பது தெரிகிறது. "முல்லையை மாலையாகத் தொடுத்தான்" என்று சொல்லும் போது, முல்லைப்பூவைத் தொடுத்தான் என்பது தெரிகிறது. ஆகவே, முல்லைக் கொடியினுடைய இயல்பான பெயர், அதன் பூவாகிய சினைக்குப் பெயராயிற்று.

<u>இயற்பெயர்</u> <u>ஆகுபெயர்</u>

முல்லை வளர்ந்தது. முல்லையை மாலையாகத் தொடுத்தான்

<u>கொடி</u> <u>பூ</u>

[பொருளின் இயல்பான பெயர், அதன் சினைக்கு ஆகும் பெயராய் வருவது பொருளாகுபெயர். இங்கே ஆகியது பொருளென்றுணர்க.]

2. சினையாகுபெயர் :—

"துதிக்கை வந்தது," என்று சொல்லும் போது, துதிக்கை என்பது, யானையினுடைய சினை (உறுப்பு)க்கு இயல்பானபெயர், அந்தச் சினையையுடைய முதற்பொருள் ஆகிய யானையை உணர்த்துதலினாலே ஆகுபெயராகும். சினையின் பெயர் முதலுக்காதலினால் இது சினையாகுபெயர்.

"துதிக்கை நெடியது" என்னும் போது, துதிக்கை என்பது உறுப்பின் இயல்பான பெயராகவே நிற்கும்.

3. இடவாகுபெயர் :—

"ஊர் பசிக்கிறது." "ஊர்" என்பது இடத்தின் இயல்பான பெயர். ஊருக்குப் பசிப்பதே இல்லை. ஊரில் உள்ள உயிர்கட்குத்தான் பசி உண்டு. ஆதலால், ஊர் என்பது இங்கே அவ்வூரிலுள்ள உயிர்களைக் குறிப்பிடுகின்றது. இடத்தைக் குறிக்கும் இயல்பான பெயராகிய ஊர் என்பது, இங்கே இடத்திலுள்ள பொருள்களுக்கு ஆகும் பெயராய் வந்தது. இவ்வாறு இடத்தின் பெயர் இடத்திலுள்ள பொருள்கட்கு ஆகும் பெயராய் வருவது இடவாகு பெயராம்.

4. இடத்ததாகுபெயர் (தானியாகு பெயர்) :

"திருவண்ணாமலை சிகரத்தையுடையது," என்ற போது, திருவண்ணாமலை என்பது, மலையைக் குறிக்கும் இயல்பான பெயர். அன்றியும், அஃது ஓர் இடத்திலுள்ள பொருள்.

"**திருவண்ணாமலை எனதூர்,**" என்ற போது, திருவண்ணாமலை என்பது, மலையை உணர்த்தாது, அம்மலை நிற்கும் இடத்தை உணர்த்தியது. இடத்திலுள்ள பொருளின் பெயர், இடத்துக்கானபடியால் இடத்ததாகுபெயராம். (இடத்தது = இடத்திலுள்ளது)

இதனைத் தானி ஆகுபெயரென்றுங் கூறுவர்.

தானம் = இடம்

தானி = இடத்தையுடையது (இடத்தது)

5. காலவாகுபெயர் :—

"**கார்த்திகை பூத்தது,**" கார்த்திகை என்பது காலத்தையுணர்த்தும் இயல்பான பெயர். கார்த்திகை என்று சொல்லப்படும் காலம் பூப்பதில்லை. செடி கொடிகள் மரங்கள்தாம் பூவைப் பூப்பனவாகும். ஆதலினால், 'கார்த்திகை பூத்தது.' என்னும்போது கார்த்திகை ஆகிய காலத்திற்குரிய இயல்பான பெயர், அதனோடு தொடர்புடைய கார்த்திகைச் செடிக்கு ஆகும் பெயராய் வந்தது.

இவ்வாறு காலத்தின் பெயர் அதனோடு தொடர்புடைய பிறிதொரு பொருளுக்கு ஆகி வருவது கால ஆகுபெயராம்.

6. குணவாகுபெயர்:—

**கருமை, நன்மை** முதலிய குணங்களின் பெயர், அக்குணத்தையுடையதாகிய குணிக்கு ஆகுபெயராய் வரின், அது குணவாகுபெயர் எனப்படும்.

குணம் = பண்பு

குணி = பண்பி (பண்புடையது) குணத்தையுடையது.

"**கறுப்பு, கொக்கில் காண்பதரிது,**" என்றவிடத்துக், கறுப்பு என்பது ஒரு நிறத்தின் இயல்பான பெயர். "**கறுப்பு**

**உழுதது**" என்றவிடத்துக் கறுப்பு என்னும் நிறக்குணத்தின் இயல்பான பெயர், அந்நிறத்தையுடைய மாட்டிற்கு ஆகுபெயராகி அம்மாட்டை உணர்த்திற்று.

7. தொழிலாகு பெயர் :—

"நெல் புழுங்கிய புழுங்கல் நன்ருய் இருக்கிறது" என்ற போது, "**புழுங்கல்**" என்பது, புழுங்குதல் என்னும் தொழிலின் இயல்பான பெயராகும்.

"**புழுங்கல் குற்றினுள்,**" என்ற போது, புழுங்கல் என்னும் தொழிற்பெயர் புழுங்குதலைப் பெற்ற நெல்லுக்கானமை கண்டுகொள்க.

இங்கே தொழிலின் பெயர், அத்தொழிலைப் பெற்ற பொருளாகிய நெல்லுக்கானமையால் தொழிலாகுபெயர்.

21. பயிற்சி வினுக்கள் :—

தாமரை, சித்திரை, கிரிமலை, யாழ்ப்பாணம், வெள்ளை, வற்றல், பொங்கல், நீலம், கார்த்திகை என்னும் இவற்றை இயற்பெயராகவும், ஆகுபெயராகவும் வாக்கியங்களில் அமைத்து வகைப்படுத்துக.

## 5. வேற்றுமை

பெயர்ச்சொற்கள், வாக்கியங்களிலே உபயோகிக்கப்படும் போது தாம் முன் பிற சொற்களோடு சேரா திருந்த நிலையினின்றும் வேறுபாடு அடையும்.

'பெயர்ச்சொற்கள் எப்படி வேறுபாடு அடைகின்றன?' என்பதை இனிப் பார்ப்போம் :

(அ) (ஆ)





பானை (இருந்தது) பானை (உடைந்தது)

(அ) என்ற படம் ஒரு பானை. அதனை உணர்த்திய சொல் பானை என்பது. (ஆ) என்ற படத்தில் பானை உடைந்திருக்கிறது. இரண்டு படங்களும் இப்போது வேறுபட்டிருக்கின்றன. பானை உடைந்த செயலை உணர்த்துவதற்குப் "பானை" என்ற பெயர்ச்சொல் பிற சொற்களோடு சேரவேண்டியிருக்கிறது. அச்செயலை உணர்த்தும்பொருட்டே, பானை என்னும் பெயர்ச்சொல் உடைந்தது என்னும் வினைச்சொல்லோடு சேர்ந்தது. அவ்வாறு சேர்ந்தபடியால், (அ) என்னும் படத்தை உணர்த்திய பானை என்னும் பெயர்ச்சொல், (ஆ) என்னும் படத்தை உணர்த்திய பானை என்னும் பெயர்ச்சொல்லாக மாறுபட்டது. ஆகவே, முதலாவது பானை என்னும் பெயர்ச்சொல்லும் இரண்டாவது பானை என்னும் பெயர்ச்சொல்லும் தம்முள் வேறுபாடுடையன. 'வேறுபாடு யாதும் தோன்றவில்லையே?' என்று கேள்வி கேட்க ஆயத்தமாக இருக்கிறீர்கள் போலும்! கருத்தூன்றுங்கள். முதலாவதிலுள்ள 'பானை' என்னும் பெயர்ச்சொல், வாளா (சும்மா) இருந்த பெயர்ச்சொல். அஃது 'உடைந்தது' என்னும் வினையோடு சேரவே, தான் தலைமைப் பொரு

(இ)




பெண் கத்தரிக்காயை வெட்டுகிருள்.

ளாக வேறுபட்டது. இவ்வாறே பெயர்ச்சொற்கள் தாம் பிற சொற்களோடு சேரும் தன்மையினுலே எட்டு வித மான வேறுபாடுகளை அடைகின்றன. அவ்வெட்டு வகையுள் ஒரு வகை மேலே காட்டப்பட்டது. இவ் வெட்டு வேற்றுமைகளின் விளக்கத்தைப் பின்னுல் அறி வோம். இப்போது பொதுவாக இவற்றின் இயல்பை அறிந்துகொள்வோம்.

குறிப்பு :—பானை என்னும் பெயர்ச்சொல், தன் பொருளை உணர்த்தப் புகுங்கால், அந்தப் பொருளின் பல வகைப்பட்ட தன்மைகளுள் ஒன்றைக் குறிக்கும். எல்லாப் பொருள்களும் வாளா இருப்பனவல்ல. அவை ஏதாவதொரு வேறுபாட்டை அடைந்தேயிருக்கும்.

(ஈ)



கத்தரிக்காய் (சிறியது)

(ஈ) என்ற படத்தில் உள்ள கத்தரிக்காய் (அ) என்ற படத்தில் உள்ள பானைபோல வாளாவிருந்தது.

(இ) என்ற படத்தில் கத்தரிக்காய் வெட்டப்படுகிறது. கத்தரிக்காய் வெட்டப்படுகிற நிகழ்ச்சியையே, "பெண் கத்தரிக்காயை வெட்டுகிறாள்," என்னும் சொல் தொடர் உணர்த்துகின்றது. இப்போது (ஈ) என்ற படத்தில் உள்ள கத்தரிக்காய் வேறுபட்டிருக்கிறது. (ஆ) என்ற படத்தில் உள்ள பானையை வேறுபடுத்தியது பிறி தொன்றுமின்று. பானை தானாகவே வேறுபட்டது. ஆனால், கத்தரிக்காயை வேறுபடுத்துகிறவள் ஒரு பெண். பெண் வெட்டுகிறாள். கத்தரிக்காய் அவ்வாறு அவள் வெட்டுதலைச் செய்யப்பட்டுக்கொள்கிறது. இது செயப்படுபொருளாக வேறுபடுந் தன்மையாம். இவ்வாறு வேறுபட்ட பொருளை உணர்த்தும் பெயர்ச்சொல் வேறுபட்டதைக் காட்ட, வேற்றுமைச் சொற்கள், அவற்றின் இறுதியிலே அவற்றோடு சேர்ந்து வரும். இவ்வாறு வேறுபட்டதைக் காட்டி வரும் வேற்றுமைச் சொற்கள் உருபுகள் எனப்படும். இப்போது நாம் இரண்டாவதாக அறிந்துகொண்ட வேற்றுமையை உணர்த்திய உருபு 'ஐ' என்பது.

(உ)



கந்தன் (நின்றான்)

(ஊ)



மாடு (நடந்தது)

(எ) (ஏ)



கந்தனால் மாடு நடத்தப்பட்டது.

(ஊ) என்னும் படத்திலுள்ள மாட்டை உணர்த்தும் "மாடு" என்னும் பெயர்ச்சொல், நடந்தது என்னும் வினையோடும், (உ) என்னும் படத்திலுள்ள 'கந்தன்' என்னும் பெயர்ச்சொல் 'நின்றான்' என்னும் வினையோடும் சேர்ந்து முதல் வேறுபாடு அடைந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

(எ,ஏ) என்னும் படத்தில் உள்ள மாடு நடத்தப்பட்டது என்னும் வினையோடு சேர்ந்து வேறுபட்டிருக்கின்றது: ஆனால், இரண்டும் தலைமைப் பொருளையே உணர்த்துகின்றன. எனினும், (எ,ஏ) என்பதில் குறிக்கப்படும் மாடு நடத்தப்பட்ட பயனை அடைந்த செயப்படு பொருளேயாம். மாடு பிரதானமாக உணர்த்தப்படும் போது அது செயப்படுபொருளுக்குரியதாயினும், கருத்தாவாகவும், அதை நடத்திய கருத்தாவைக் காரணமாகவும் கூறுவர்.

எனவே, தொழிலைச் செய்த கருத்தாவைப் பிரதானமாக உணர்த்தவேண்டில் முதலாம் வேற்றுமையாகவும், அவனால் செய்யப்பட்ட தொழிலின் பயனைப்பெற்ற செயப்படுபொருளைப் பிரதானமாக உணர்த்தவேண்டில், கருத்தாவை மூன்றும் வேற்றுமைக்குரிய காரணப் பொருளாகவும் கூறுதல் இலக்கண நூல் மரபாகும்.

இவ்வேறுபாட்டையறிய, முதலாம் வேற்றுமையில் வரும் கருத்தா தன் விகுதி வினையினால் முடித்தும், அக்கருத்தா மூன்றாம் வேற்றுமைக் காரணப் பொருளில் வரும் போது செயப்பாட்டு வினைகொண்டு முடித்தும் காட்டுவர்.

இனி, மாடு நடத்தப்படுவதற்குக் காரணமாய் இருந்தவன் கந்தன் என்பான். அஃதெப்படியென்று பார்ப்போம்:

(ஊ) என்ற படத்தில் உள்ள கந்தன் வாளா இருந்தான். அவனை உணர்த்திய சொல்லும் அப்படியே வாளா இருந்தது. ஆனால் (எ) என்ற படத்தில் மாடு நடத்தப்படுவதற்குக் காரணமாகக் கந்தன் வேறுபட்டான். இந்நிகழ்ச்சியைக் "கந்தனால் மாடு நடத்தப்பட்டது" என்னும் சொல் தொடர் உணர்த்துகிறது. இங்கே, கந்தன் என்னும் சொல் காரணப் பொருளாக மாறுபட்டிருக்கிறது. (தன்னால் உணர்த்தப்படும் பொருளைப்போல) இவ்வேறுபாட்டை அறிவதற்கு "**ஆல்**" என்னும் உருபு கந்தன் என்னும் சொல்லோடு சேர்ந்து, கந்தனால் என வந்திருக்கிறது.

(ஐ) (ஒ)




**(ஏழைக்குச் செல்வன் பொருள் கொடுக்கிறான்.)**

முற்பக்கத்தில் (ஐஓ) என்று குறிப்பிடப்பட்ட படங்களைப் பாருங்கள். (ஓ) என்ற படத்தில் உள்ளவன் ஒரு செல்வன். அவன் யாது செய்கிறான்? பொருள் கொடுக்கிறான் அன்றோ? அப்பொருளை ஏற்றுக்கொள்கிறவன் யார்? (ஐ) என்ற படத்தால் குறிப்பிடப்பட்ட ஏழை. இந்நிகழ்ச்சியையே, "ஏழைக்குச் செல்வன் பொருள் கொடுக்கிறான்," என்ற சொல் தொடர் உணர்த்துகிறது. இங்கே செல்வன் கொடுத்தான் என்னும் போது செல்வம் முதல் வேறுபாட்டையடைந்த பெயர்ச்சொல்லாயிற்று. ஆனால், ஏழை என்ற பெயர்ச்சொல் ஏற்றுக்கொள்ளும் பொருளாக வேறுபட்டது. இவ்வேறுபாட்டை உணர்த்தக் "கு" என்ற வேற்றுமைச்சொல்லை ஏழை என்ற பெயர் ஏற்றுக்கொண்டது. இவ்வேறுபட்ட பொருளைக் **கோடற்பொருள்** என்பர். (கோடல் = கொள்ளுதல்)

(ஓ)

(ஔ)



பழம் பலா

**பலாவின் வீழ் பழம்**

முற்பக்கத்தில் (ஓ) (ஔ) என இரண்டு படங்கள் இருக்கின்றன : (ஔ) என்பது பலாப்பழம் (ஓ) என்பது பலா மரம். பலாவில் பலாப் பழங்கள் இருக்கின்றன; அவற்றுள் ஒருபழம் பலாவை விட்டு நீங்கிக் கீழே விழுகின்றது : இந்நிகழ்ச்சியையே, "பலாவின் வீழ் பழம்" என்னும் சொல்தொடர் உணர்த்துகிறது. இதில் நீங்கியது பழம். அப்பழம் நீங்கிய நீக்கத்தையுடையது பலாமரம். பலா என்னும் பெயர்ச்சொல், இப்போது நீக்கப்பொருளாக வேறுபட்டது. இவ்வேறுபாட்டை உணர்த்த "இன்" என்னும் வேற்றுமைச் சொல்லை அஃது ஏற்றுக் கொண்டது.

(க) பரமேஸ்வரன்



(கா) புத்தகம்


பரமேஸ்வரனது புத்தகம்

[ (க, கா) என்று குறிப்பிட்ட படங்களைப் பார்க்க]

படத்தில் பரமேஸ்வரன் ஒரு புத்தகத்தை வைத்திருக்கிறான். அந்தப் புத்தகம் பரமேஸ்வரனுக்கு உரிமையானது. ஆனபடியால், பரமேஸ்வரனது புத்தகம் என்று கூறுவார்கள். இவ்வாறு கூறும் போது, பரமேஸ்வரன் என்னும் சொல், புத்தகத்துக்குத் தொடர்புடைய பொருளாக வேறுபட்டது. இவ்வேறுபாட்டை உணர்த்த அப்பெயர்ச்சொல், "அது" என்னும் உருபை ஏற்றுக்கொண்டது.


உரிமை = தொடர்பு, கிழமை.

(கி)



பெட்டி (சதுரமானது)

(கீ)




**பெட்டியின்கண் புத்தகம்**

(பெட்டியின்மேல் புத்தகம் இருக்கிறது.)

முற்பக்கத்தில் இரண்டு படங்கள் காட்டப்பட்டுள்ளன. (கி) என்று குறிப்பிட்டுள்ள படம் ஒரு பெட்டி. (கீ) என்ற படத்திலுள்ள பெட்டியின்மேல் ஒரு புத்தகம் இருக்கிறது. இதைப் "பெட்டியின்கண் புத்தகம் இருக்கிறது," என்னும் சொல் தொடரால் உணர்த்தலாம். (கி) என்ற படத்தையுணர்த்திய "பெட்டி" என்னும் பெயர்ச் சொல் வாளா இருந்தது. "பெட்டியின்கண் புத்தகம்" என்ற தொடரில் உள்ள பெட்டியென்னும் பெயர் பிற சொற்களோடு சேர்ந்தபடியால் வேறுபாட்டையடைந்தது. இங்கே பெட்டி புத்தகம் இருப்பதற்கு இடமாயிற்று. இதனை இடப்பொருள் என்பர். பெட்டியென்னும் பெயர் இடப்பொருளாக மாறுபட்டதை உணர்த்தக் "**கண்**" என்னும் உருபை ஏற்றுக்கொண்டது.




**இராமா! இங்கே வா.** **சங்கரன்**

இராமன் தூரத்தில் (படர்க்கை இடத்தில்) போகிருன். சங்கரன் அவனேடு ஏதோ பேச விரும்பி, 'இராமா! இங்கே வா,' என்று கூப்பிடுகிருன். இப்போது இராமன்

தன்னுடைய நிலையில் நின்றும் அழைப்புப் பொருளாக வேறுபட்டான். இதனை 'இராமா!' என்ற பெயர்ச்சொல் காட்டுகிறது.

மேலே பொதுவாகக்கூறப்பட்ட எட்டு வகைகளுமே வேற்றுமைகளாகும். இவ்வேற்றுமைகட்கு எண்களினாலேயே பெயரிட்டு வழங்குவர். வேற்றுமைகளின் பெயர்களையும் உருபுகளையும் பின்வருமாறு கண்டுகொள்க.

| வேற்றுமை | உருபு |
|---|---|
| 1. முதலாம் வேற்றுமை | பெயர். |
| 2. இரண்டாம் வேற்றுமை | ஐ. |
| 3. மூன்றும் வேற்றுமை | ஆல், ஆன், ஒடு, ஓடு. |
| 4. நாலாம் வேற்றுமை | கு. |
| 5. ஐந்தாம் வேற்றுமை | இல், இன். |
| 6. ஆறும் வேற்றுமை | அது, (ஆது), அ. |
| 7. ஏழாம் வேற்றுமை | கண். |
| 8. எட்டாம் வேற்றுமை | பெயர்கள் இயல்பாதலும் வேறுபடலும். |

1. முதலாம் வேற்றுமை :—

இது, காரியத்தைச் செய்வதற்குத் தலைமை இடத்தை ஏற்றுக்கொள்வதனால், இதன் பொருள் தலைமைப் பொருள் எனப்படும். (தலைமை, கருத்தா என்பன ஒரு பொருளுடையன). எல்லாக்காரியமும் தோன்றுவதற்குத் தோற்றுவாயாக இருப்பதனால் எழுவாய் என்றும் கூறுவர். இதனால் இஃது எழுவாய் வேற்றுமை என்றும் சொல்லப்படும்.

தான் செய்யுந் தொழிலுக்குத் தானே அதிகாரியாய் இருப்பதனால், இது பிறிதொன்றனால் வேறுபடுத்தப்பட வேண்டுவதில்லை. தன்னைத்தானே வேறுபடுத்தும் இந்தப்

பொருளுக்கு வேறுபடுத்தும் பிறிதொருபொருள் இல்லாத வாறே, இதைக் குறிக்க வரும் வேறு உருபும் இதனுக்கு இல்லையாயிற்று. பொருளே தன்னைத்தான் வேறுபடுத்திக் கொள்வது போல, அதைக் காட்ட வந்த பெயரும் உருபா யிற்று. அதனால் இது பெயர் வேற்றுமை எனவும்படும். இதன் உருபு பெயரே.

ஆகவே, இவ்வேற்றுமை,

முதலாம் வேற்றுமை
எழுவாய் வேற்றுமை
பெயர் வேற்றுமை

என்னும் மூன்று பெயர்களையும் உடையது.

உதாரணம் :—

இராமன் படித்தான்.
வேலன் விழுந்தான்.

குறிப்பு :—இங்கே வந்துள்ள "இராமன், வேலன்" என்னும் பெயர்களே முதலாம் வேற்றுமைக்கு உருபு களாகும்.

சொல்லுருபு :—இவ்வேற்றுமைக்கு, ஆனவன், ஆகின்ற வன், ஆவான், என்றவன், என்கின்றவன், என்பான் என்பவை போன்ற இருதிணை ஐம்பாற்சொற்களும் சொல்லுருபுகளாக வரும். சொல்லுருபு இலக் கணத்தை மூன்றும் வேற்றுமை கூறுமிடத்துக் கூறுவோம். அங்கே பார்க்க.

உதாரணம் :—

**கந்தன் ஆனவன் வந்தான்.**
**கந்தன் ஆகின்றவன் வந்தான்.**
**கந்தன் ஆவான் வருவான்.**
**இராமன் என்றவன் வந்தான்.**
**இராமன் என்கின்றவன் வருகின்றான்.**
**இராமன் என்பான் வருவான்.**

**முதலாம் வேற்றுமைக்குப் பயனிலை :—**

சொல் தொடரின் பயன் நிலைத்து நிற்கும் சொல்லை இவ்வேற்றுமை பயனிலையாகக் கொண்டு முடியும்.

**உதாரணம் :—**

**பெரியவன் நகைத்தான்.**

இங்கே பெரியவன் என்பதே கருத்தா; அவனுடைய தொழில் நகைத்தல்; அவன் நகைத்தலால் வேற்றுமை அடைந்தான்; இவ்வேற்றுமையின் பொருள் முடிந்த சொல் நகைத்தான் என்பதாம். இதனால், அச்சொல் பொருள் நிலை, அல்லது பயன் நிலை எனப்பட்டது.

இவ்வாறு முதலாம் வேற்றுமைக்குப் பயனாக வரும் சொற்கள், வினையாகவும், வினாவாகவும், பெயராகவும் வரும்.

**உதாரணம் :—**

கண்ணம்மாள் **அடித்தாள்.** (தெரிநிலை வினைச்சொல் —பயனிலை)

அவன் முன் **பணக்காரன்.** (குறிப்பு வினைச்சொல்— பயனிலை)

அஃது யாது? (வினா — பயனிலை)

இது மரம். (பெயர்—பயனிலை)

குறிப்பு:—'அஃதியாது என்பதை மட்டும் வினாப்பயனிலைக்குக் காட்டி, வந்தானா போன்றவற்றை விலக்கியதேன்?' என்று கேட்பீர்கள். வந்தான் + ஆ என்பதில், வந்தான் என்ற வினையோடு பெயர் முடியும். ஆ என்னும் வினா புறத்தே வந்தது. யாது? என்பது அவ்வாறன்று. அதில் வினா அகத்தே வந்

திருக்கிறது. இவ்வினு இன்றிச் சொல் நிரம்பாது அதனுல், 'வந்தானு'? என்பது போன்றவை வினேப் பயனிலே ஆவதன்றி வினுப்பயனிலேயாகா.

22. **பயிற்சி வினுக்கள் :**

1. முதலாம் வேற்றுமை எப்பொருளில் வரும்?
2. தலேமைப்பொருள் என்பது என்ன?
3. 'மரம் முரிந்தது' என்னும் இச்சொல் தொடரில் தலேமைப் பொருளுடைய சொல் எது?
4. முதலாம் வேற்றுமைக்கு உருபும், சொல்லுருபுகளும் யாவை?
5. மற்றைய வேற்றுமைகளேப்போல இதற்கு ஏன் உருபுகள் இல்லே?
6. இஃது ஏன் வேற்றுமை எனப்படுகின்றது?
7. முதலாம் வேற்றுமை மட்டும் தோன்ற ஐந்து வாக்கியங்கள் கூறுக.

2. **இரண்டாம் வேற்றுமை :—**

கருத்தா எந்தப் பயன் கருதி ஒரு தொழிலேச் செய்ததோ, அந்தத் தொழிலின் பயன்படும் பொருளாகிய செயப்படுபொருளேக் கொண்டதே இரண்டாம் வேற்றுமை. ஒரு பொருள் தன் இயல்பான நிலேயில்நின்றும், செயப்படுபொருளாக வேறுபடுதல் இங்கு வேற்றுமையாகும்.

இவ்வாறு செயப்படுபொருளாக வேறுபட்டதைக் காட்ட வரும் உருபுச்சொல் "ஐ" ஒன்றுமேயாம். இதனே **ஐ வேற்றுமை, செயப்படுபொருள் வேற்றுமை** எனவும் கூறுவர்.

இந்தச் செயப்படுபொருள், ஆக்கல், அழித்தல், அடைதல், நீக்கல், ஒத்தல், உடைமை என ஆறு வகைப் படும்.

உதாரணம் :—

(அ) இராமன் **வீட்டைக்** கட்டினன். (ஆக்கல்)

(ஆ) வேலன் **பானையை** உடைத்தான். (அழித்தல்)

(இ) நான் **வீட்டை** அடைந்தேன். (அடைதல்)

(ஈ) பொன்னன் **கள்ளரைத்** துரத்தினன். (நீக்கல்)

(உ) அவளுடைய முகம் **சந்திரனை** ஒத்தது(ஒத்தல்)

(ஊ) நாய் இரண்டு **குட்டிகளை** உடையது. (உடைமை)

23. பயிற்சி வினக்கள் :—

1. செயப்படு பொருளாவது யாது?
2. "கண்ணன் மரத்தை வெட்டினன்." இச்சொல் தொடரில் வேற்றுமை எங்கிருக்கிறது?
3. இரண்டாம் வேற்றுமை உருபு யாது?
4. யாழ்ப்பாணம் ஒரு தமிழ் நாடு. அங்குள்ளவர்கள் தமிழ் மொழியைப் பேசுவார்கள். அதனல், அவர் கள் தமிழர் எனப்படுவர். யாழ்ப்பாணம் நல்ல வளமுடைய நாடு.

இத்தொடர்களிலுள்ள முதலாம் வேற்றுமைகளையும் இரண்டாம் வேற்றுமைகளையும் வேறு வேருகக் காட்டுக.

3. **மூன்றும் வேற்றுமை :—**

ஒருவன் ஒரு காரியத்தைச் செய்வதற்குரிய காரண மாகி (கருவியாகி) நிற்கும் பொருளாக வேறுபடுவது மூன்றும் வேற்றுமையாகும்.

க. அஃது எந்தப் பொருளால் செய்யப்பட்டது ?

கா. அஃது எந்த ஆயுதத்தின் துணையால் செய்யப் பட்டது ?

கி. அஃது எந்தச் செய்வோனால் செய்யப்பட்டது ? என மூன்று வகைப்படும்.

**உதாரணம் :—**

க. **மரத்தினால்** பெட்டி செய்யப்பட்டது.

இதில் மரம் காரணமாய் இருக்கப் பெட்டி ஆகிய காரியம் செய்யப்பட்டதை அறிக.

கா. **உளியினால்** பெட்டி செய்யப்பட்டது.

இதில் உளி என்னும் ஆயுதத்தின் உதவி காரணமாகப் பெட்டி செய்யப்பட்டதை அறிக.

கி. **தச்சனால்** பெட்டி செய்யப்பட்டது.

இதில் தச்சன் காரணமாக நிற்கப் பெட்டி செய்யப் பட்டதை அறிந்துகொள்ளுக.

அவ்வாறு காரணப்பொருளாக வேறுபட்டதைக் காட்ட வரும் உருபுச்சொல் **ஆல்** என்பது. **ஆன்** என் பதும் கொள்ளப்படும்.

**சொல்லுருபு :—**

"உளியால் பெட்டியைச் செய்தான்," என்பது போலவே, "உளிகொண்டு பெட்டியைச் செய்தான்,"

என்று சொல்வதும் வழக்கம். இங்கே "ஆல்" உருபு நிற்க வேண்டிய இடத்திலே "கொண்டு" என்னும் சொல் வந்திருக்கிறது. "கொண்டு" என்னும் சொல், உருபுக்காக வந்திருத்தலின், இதனையும், இது போன்ற ஏனைய வேற்றுமைகளில் வருவனவற்றையும் சொல்லுருபுகள் என்பர்.

உதாரணம் :—

(அ) மண்கொண்டு பானை செய்யப்பட்டது.

(ஆ) வாள்கொண்டு மரம் வெட்டப்பட்டது.

தாய் வந்தாள் ; அவள் குழந்தையும் வந்தது. குழந்தை தானே வாராது. ஆனபடியால், குழந்தை வருவதற்குத் தாய் காரணமாய் இருக்கிறாள். இதனைத் தாயினால் குழந்தை வந்தது என்று சொல்வதும் உண்டு. இப்படிச் சொல்லும் போது அக்காரணப் பொருளை உடனிகழ்ச்சிப் பொருள் என்பர். இப்பொருளுக்கு உருபுகள் ஒடு, ஓடு என்பன.

உதாரணம் :—

குழந்தை தாயோடு வந்தது.

மனைவி மணமகனோடு வந்தாள்.

இதற்கு உடன் என்பது சொல்லுருபாக வரும்.

உதாரணம் :—

நாய் முருகனுடன் வந்தது.

24. பயிற்சி வினாக்கள் :—

1. மூன்றாம் வேற்றுமைக்குப் பொருள் யாது ?

2. காரணப் பொருள் என்பது என்ன ?

3. "உன்னால் யானடைந்த நன்மைகள் பல." இதில் உள்ள காரணப் பொருளை விளக்குக.

4. காரணம் எத்தனை வகைப்படும்? உதாரணங்கள் காட்டுக.

5. உடனிகழ்ச்சிப் பொருள் தோன்ற இரண்டு உதாரணம் கூறுக.

6. மூன்றும் வேற்றுமை உருபுகளையும் சொல்லுருபுகளையும் கூறுக.

7. இராமன் உழவுத்தொழில் செய்து வசித்து வந்தான். அவன் பிள்ளைகளும் அவனோடு தொழில் செய்வார்கள். பெருமழையினால் அவன் செய்த பயிர்கள் அழிந்துவிட்டன. ஆனபடியால், அவனை வறுமை வருத்தியது. அவன் பசியால் வருந்தினான். அவனுடைய மனைவி மக்களும் அவனுடன் வருந்தினார்கள். அவன் ஒருவாறு கடன்பட்டுத் தன்னுடைய குடும்பத்தைப் பாதுகாத்தான்.

இத்தொடர்களிலுள்ள 1-ஆம், 2-ஆம், 3-ஆம் வேற்றுமைகளை எழுதுக.

குறிப்பு :—" எந்தச் செய்வோனால் " என்னும் காரணப் பொருளில் வருவதை மூன்றும் வேற்றுமைக் கருத்தா என்பர்.

நாலாம் வேற்றுமை :—

ஒருவன் ஒரு பொருளைக் கொடுக்க அதை ஏற்றுக்கொண்டவன், ஏற்றுக்கொள்ளும் பொருளாக வேறுபடுகின்றான். இவ்வாறு ஏற்றுக்கொள்ளும் பொருளை உடைய வேற்றுமையை நாலாம் வேற்றுமை என்பர்.

ஏற்றுக்கொள்ளும் பொருளைக் **கோடற்பொருள்** எனக் கூறுவர்.

கோடல் (கொள் + தல் = (ஏற்றுக்) கொள்ளுதல். இவ்வேற்றுமையுருபு " **கு** " என்பதாகும்.

கோடற்பொருள் பல வகைப்படும். அவற்றைப் பின் வருமாறு கண்டறிக:

(அ) கோடற்பொருள் பிறிதின்கண்ணுள்ள **நட்பையும்** ஏற்றுக்கொள்ளும்.

உதாரணம் :—

இராமனுக்கு நண்பன் குகன்.

(ஆ) கோடற்பொருள் பிறிதின்கண்ணுள்ள **பகையை**யும் ஏற்றுக்கொள்ளும்.

உதாரணம் :—

இராமனுக்குப் பகைவன் இராவணன்.

(இ) இஃது ஒன்றனைத் தனக்குத் தகுதியாகவும் ஏற்றுக் கொள்ளும்.

உதாரணம் : —

துறவிகட்குத் தக்கது தவம்.

(ஈ) இஃது " **இதற்காக இது** " என்னும் பொருளிலும் வரும்.

தச்சன் தன் கையிலே உளியை எடுத்துக்கொண்டு வந்தான். அவனைப் பார்த்து, இளையவன் என்பான் 'எதற்காக உளிகொண்டு போகிறாய்?' என்றான். தச்சன், 'பெட்டியை ஆக்குவதற்காகக் கொண்டு போகிறேன்' என்றான். 'ஓகோ! அதுவாதற்கு இதைக் கொண்டு போகிறாயா?' என்று இளையவன் கூறிப்போனான்.

**அது = பெட்டி ; இது = உளி** (பெட்டிக்கு உளி)

இதை இலக்கணநூலார் "அதுவாதல் பொருள்" என்பர்.

உதாரணம் :—

குடத்திற்கு மண்

(உ) இக்கோடற்பொருள் 'எதன்பொருட்டு இக்காரியத்தைக் கொண்டாய்?' என்னும் பொருளிலும் வரும். இதனைப் பொருட்டுப் பொருள் என்பர்.

உதாரணம் :—

ஔவைப் பிராட்டியார் கூழுக்குப் பாடினார்.

பொருட்டுப் பொருளிலும், அதுவாதல் பொருளிலும் "ஆக" என்பது சொல்லுருபாக வரும்.

உதாரணம் :—

ஆபரணத்திற்காகப் பொன் (அதுவாதல்)

கூலிக்காக வேலை செய்தான் (பொருட்டு)

"பொருட்டு" என்னும் சொல்லுருபு பொருட்டுப் பொருளில் மட்டும் வரும்.

உதாரணம் :—

கூலியின்பொருட்டு வேலை செய்தான்.

(ஊ) கோடற்பொருள் பிறவற்றின்கண்ணுள்ள முறையை ஏற்றுக்கொள்ளும் பொருளிலும் வரும்.

உதாரணம் :—

இராமனுக்குத் தம்பி இலக்குவன்.

கும்பகர்ணனுக்குத் தமையன் இராவணன்.

கண்ணனுக்கு மாமி குந்தி தேவி.

திருதராட்டிரனுக்கு மகன் துரியோதனன்.

(எ) இன்னும் இப்பொருள் பகை, நட்பு முதலியவற்றை ஏற்றுக்கொள்ளாமல் பொதுப்படக் கொடுக்க ஏற்றுக் கொள்ளும் பொருளிலும் வரும். இதனைக் கோடற் பொருள் என்பர். (கொள் + தல் = கோடல்).

உதாரணம் :—

இரவலர்க்குப் பொன் கொடுத்தான்.
விருந்தினனுக்கு உணவு கொடுத்தான்.
பசுவுக்கு நீர் வார்த்தான்.
பயிர்க்கு நீர் இறைத்தான்.

25. பயிற்சி வினக்கள் :—

1. கோடற்பொருளாவது யாது ?
2. ஆசிரியன் மாணவருக்கு அடிகொடுத்தான். இதிற் கோடற்பொருளாக மாறுபட்டது யாது ?
3. ஏற்றுக்கொள்ளும் பொருள் எவ்வெவற்றை ஏற்றுக்கொள்ளும் ?
4. அதுவாதற்பொருள், பொருட்டுப் பொருள் இரண்டையும் உதாரணங்காட்டி விளக்குக.
5. விசயன் என்பவன் இந்தியாவையாண்ட சிங்கவாகுவுக்கு மகன்; அவன் எழுநூறு நண்பர்களோடு இலங்கையை அடைந்தான்; இலங்கையில் இருந்த குவேனி என்பவளை மணந்துகொண்டான்; பின்பு அவளைத் துரத்திவிட்டுப் பாண்டிய ராசன் மகளுக்கு மணமகன் ஆனான்; விஜயன் புத்த சமயத்தைக் கைக்கொண்டவன். அதை வளர்ப்பதற்காகப் பல புத்தகோயில்களைக் கட்டினான்.

   இதில் உள்ள 1-ஆம், 2-ஆம், 3-ஆம், 4-ஆம் வேற்றுமைகள் யாவை ?

**ஐந்தாம் வேற்றுமை :—**

இதன் பொருள் **நீக்கப் பொருளாகும்.** ஒரு பொருள் நீங்க அதுநீங்கிய நீக்கத்தைப் பெறுவதே நீக்கப்பொருளாம்.

நல்லம்மாளுடைய கையில் மாம்பழம் இருக்கிறது. அவள் அதைத் தன் மகனுக்குக் கொடுத்தாள். கொடுக்கும்போது நல்லம்மாளுடைய கையை விட்டு நீங்கியது மாம்பழம்; மாம்பழம் நீங்கிய நீக்கத்தைப் பெற்றது நல்லம்மாளுடைய கை. ஆதலால், நல்லம்மாளுடைய கை, நீக்கப் பொருளுக்குரியதாயிற்று.

இவ்வேற்றுமைக்குரிய உருபு **இன்** என்பது. **இல்** என்பதும் வருவதுண்டு.

**உதாரணம் :—**

**பனையின் வீழ் பழம்**

**பனையில் வீழ் பழம்**

இங்கே நீங்கியது பழம். அது நீங்கிய நீக்கத்தைப் பெற்றது பனை என அறிந்துகொள்க.

இந்நீக்கப் பொருளும் கோடற்பொருள் போலப் பல வகைப்படும்.

(க) நீக்கப்பொருள் இரண்டு பொருள்கட்கு **ஒப்புக் கூறும்** பொருளிலும் வரும்.

மூத்தன் என்பவன் சங்கரனை மாலைப்பொழுதில் தேடிச்சென்றான். அவன் போகும் போது தூரத்திலே ஓர் உருவம் காணப்பட்டது. அவ்வுருவம் மரக்குற்றியோ, அல்லது சங்கரனோ என ஐயம் தோன்றியது. மூத்தன் சமீபத்தில் சென்று பார்க்கையில் அவ்வுருவம் சங்கரனுவதைக் கண்டான். கண்ட மூத்தன் சங்கரனைப் பார்த்து 'நீ குற்றியின் தோன்றினாய்' என்றான். அப்போது சங்கரனுடைய குற்றித்தோற்றம் நீங்கிப் போக அது

நீங்கிய நீக்கத்தைச் சங்கரன் பெறுகிறுன். இஃது ஒப்புமையால் வந்த நீக்கப் பொருள்.

(கா) இஃது **எல்லைப் பொருளிலும்** வரும்.

**உதாரணம் :—**

**கீரிமலையின் கிழக்கு மாவிட்டபுரம்.**

கீரிமலைக்குக் கிழக்கெல்லையாய் உள்ளது மாவிட்டபுரம். மாவிட்டபுரம் கீரிமலையின் கிழக்குப் பகுதியில் நீங்கக் கீரிமலை அது நீங்கிய நீக்கத்தைப்பெற்றது. இதனுல் கீரிமலை எல்லை நீக்கப்பொருள்.

(கி) இந்நீக்கப் பொருள் **காரணப் பொருளிலும்** வரும்.

காரணம் = ஏது, கருவி.

**உதாரணம் :—**

**பந்தடியில் பரமன் பெரியவன்.**

ஒரு பெரிய போட்டிப் பந்தாட்டம் நடைபெற்றது. பந்தடியில் கீர்த்திபெற்ற சிவபாலன், கமலநாதன், யோகதாசன், குகதாசன், நாகராசன் முதலிய பலர் அப்பந்தாட்டத்தில் பங்கு பற்றினுர்கள். பரமனும் அதிற்கலந்து கொண்டான். அப்பந்தாட்டத்தில் ஏனையோர் யாவரினும் பரமனே வெற்றி பெற்றுன். உடனே அதைப் பார்த்தவர்கள் "**பந்தடியில் பரமன்**" என்று புகழ்ந்தார்கள். அப்போது பரமனுடைய பந்தடித்திறமையானது ஏனைய பந்தடியிற் பெருமை பெற்றவர்களினின்றும் அவனைப் பிரித்துவிட்டது. பரமன் பெருமை பெற ஏனையோர் நீங்கினர். இவர்களது நீக்கத்தைப் பெற்றது பரமனுடைய பந்தடி. அவ்வடி காரணமாகப் பரமன் பெரியவனுனுன்.

ஏனையோர் பெருமை நீங்குவதற்கும், பரமன் பெருமை பெறுவதற்கும் காரணமாயிருந்தது பந்தடியாதலினுல் இஃது **ஏது நீக்கப்** பொருளாயிற்று.

இவ்வேற்றுமைக்கு, **நின்று, நின்றும், இருந்து, இருந்தும்** என்பவை உருபுகளின்மேல் வந்து சொல்லுருபு களாக வரும்.

உதாரணம் :—

மலேயினின்று அருவி பாய்ந்தது. (நின்று)
மலேயினின்றும் அருவி பாய்ந்தது. (நின்றும்)
கந்தன் வீட்டிலிருந்து வந்தான். (இருந்து)
கந்தன் வீட்டிலிருந்தும் வந்தான். (இருந்தும்)

26. பயிற்சி வினுக்கள் :—

1. ஐந்தாம் வேற்றுமையின் பொருளேயும் உருபை யும் கூறுக.
2. நீக்கப் பொருளே உதாரணங் கூறி விளக்குக.
3. நீக்கப் பொருளின் வகைகளேயும், அவைகள் நீக்கம் பெறும் விதத்தையும் காட்டுக.
4. இவ்வேற்றுமையின் சொல்லுருபுகள் எப்படி வரும்? உதாரணத்தில் அமைத்துக் காட்டுக.
5. சடையப்பவள்ளல் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் கம்பரை ஆதரித்து வந்தார். சடையப்ப வள்ளலுக்கு ஒரு மகன் இருந்தான். அவனேக் கம்பர் பாடசாலேக்கு அழைத்துச் செல்வார். ஆசிரியர் பாடம் கற்பிக்கும் போது கம்பர் வெளியே நின்று கேட்டுக்கொண்டிருப்பார். ஆசிரியர் கேள்விகள் கேட்கும்போது, மாணவன் தெரியாமல் விழிக்கும்போது, கம்பரே மறுமொழி களேக் கூறிவிடுவார். இதனுல், அவ்வாசிரியருக்குக் கம்பருடைய திறமை புலனுயிற்று. அவரையும் அன்பொடு படிப்பித்து வந்தார். கம்பர் சகல கல்விகளேயும் கற்றுப் பெரும்புலவராகிவிட்டார். சோழமகாராசனுடைய கேள்வியினுலே அவர் கம்பராமாயணத்தைப்பாடினுர்.

இவருடைய திறமையைக் கண்டு, பெரியோர்கள் ‘ கல்வியிற் பெரியவன் கம்பன்,’ என்று புகழ்வார்கள்.

இதிலுள்ள 1-ஆம், 2-ஆம், 3-ஆம், 4-ஆம், 5-ஆம் வேற்றுமைகளைக் காட்டுக.

6. **ஆறும் வேற்றுமை :—**

இவ்வேற்றுமைக்குரிய பொருள் **உரிமைப் பொருள்.** இதனைக் கிழமைப்பொருள், சம்பந்தப் பொருள், தொடர்புப் பொருள் எனவும் கூறுவர்.

இப்பொருள் ‘ இதனது இது ’ என்னும் பொருள்பட வருவதாம்.

**கந்தனது மாடு.**

**கந்தனது கை.**

என்ற போது, மாடு, கை என்பன உரிமைப் பொருள்கள். இவற்றை உரிமையாக உடையபொருள் கந்தன். கந்தன் என்பது இப்போது உரிமையுடைய பொருளாக வேறுபட்டது.

இவ்வேற்றுமையின் உருபுகள், **அது, (ஆது), அ** என்பனவாம். அது (ஆது) ஒருமையிலும், “அ” பன்மையிலும் உருபாக வரும்.

மேலே கூறிய தொடர்பு, தன்னிலும் வேறுகாத தொடர்பு, தன்னிலும் வேறுபட்ட தொடர்பு என இருவகைப்படும்.

**தன்னின் வேறுகாத தொடர்பு = தற்கிழமை (தன்கிழமை)**

**தன்னின் வேறுபட்ட தொடர்பு = பிறிதின் கிழமை.**

8

தற்கிழமைப்பொருள் ஆறு வகைப்படும். பிறிதின் கிழமைப் பொருள் மூன்று வகைப்படும்.

## தற்கிழமை

(அ) சாத்தனது மூக்கு—உறுப்புத்தற்கிழமை.
(ஆ) இராமனது இளமை—பண்புத்தற்கிழமை.
(இ) மாட்டினது நடை—தொழில் தற்கிழமை.
(ஈ) காக்கையினது கூட்டம்—ஒரு சாதியின் ஒரு கூட்டம்.
(உ) சந்தையினது கூட்டம்—பல சாதி ஒரு கூட்டம்.
(ஊ) அரிசியினது மா—திரிபின் ஆக்கத் தற்கிழமை.

## பிறிதின் கிழமை

(எ) இராமனது மோதிரம்—பொருள் பிறிதின் கிழமை.
(ஏ) எங்களது நாடு—இடப்பிறிதின் கிழமை.
(ஐ) தேசியத்தினது வாரம்—காலப் பிறிதின் கிழமை.

**தனது கை (அது உருபு).**
**என கைகள் (அ உருபு).**

**உடைய** என்பது 'அது' என்னும் உருபிற்குப் பதிலாகச் சொல்லுருபாக வரும்.

**உதாரணம் :—**

**எங்களது பாடசாலை = எங்களுடைய பாடசாலை**

27. பயிற்சி வினக்கள் :—

1. உரிமைப்பொருள் எத்தனை வகைப்படும்? உதாரணம் காட்டுக.
2. தசரதனுடைய மகன். இதில் உரிமைப் பொருளாக வேறுபட்ட பெயர்ச்சொல் யாது? அஃது அவ்வாறு வேறுபட்ட விதத்தை விளக்குக.

3. தற்கிழமை எத்தனை வகைப்படும் ?

பிறிதின் கிழமை எத்தனை வகைப்படும் ?

4. கண்ணன் சிறந்த நற்குணமுடைய பையன். அவனது வசிப்பிடம் திருநெல்வேலி. கண்ணனுடைய தகப்பனார் அம்பிகைபாகர் என்பவர். அவர் சிறந்த கல்விமான். அவர் மகனையும் நன்றாகப் படிப்பித்து வைத்தார். கண்ணனது கல்வித்திறமையை யாவரும் புகழ்வர்.

இவற்றிலுள்ள வேற்றுமைகள் யாவை ?

7. **ஏழாம் வேற்றுமை :—**

உரிமைப் பொருளுக்கு, இருக்கும் இடமாகிய பொருளாக வேறுபட்டு வருவது **இடப்பொருளாகும்** இப்பொருள் ஏழாம் வேற்றுமைக்குரியது.

இவ்வேற்றுமையின் உருபு **கண்** என்பதாகும்.

**உதாரணம் :—**

**மணியின்கண் உள்ளது ஓசை } பொருள்**
**மணியின்கண் உள்ளது நாக்கு } இடமாயிற்று.**

**வீட்டின்கண் உள்ளது சுவர் } இடம்**
**வீட்டின்கண் உள்ளது பெட்டி } இடமாயிற்று.**

**கோடையின்கண் உள்ளது வெப்பம் } காலம்**
**கோடையின்கண் பூப்பது மா } இடமாயிற்று.**

**கையின்கண் உள்ளது விரல் } சினை**
**கையின்கண் உள்ளது மோதிரம் } இடமாயிற்று.**

இளமையின்கண் உள்ளது அழகு } பண்பு
இளமையின்கண் உள்ளது வறுமை } இடமாயிற்று.

ஆட்டத்தின்கண் உள்ளது அசைவு } தொழில்.
ஆட்டத்தின்கண் ஒலிப்பது சிலம்பு } இடமாயிற்று.

இவ்வேற்றுமைக்கு, இடத்தைக் குறிக்கும் மேல், கீழ், இல், இடம், அகம், புறம், உள் முதலாயின சொல்லுருபுகளாக வரும்.

உதாரணம் :—

| | |
|---|---|
| தேர்மேல் இருந்தான். | (மேல்) |
| மரத்தின்கீழ் இளைப்பாறினன் | (கீழ்) |
| வீட்டில் இருந்தான் | (இல்) |
| அரசனிடம் போனன் | (இடம்) |
| நாட்டினகத்தே குளம் | (அகம்) |
| ஊரின் புறத்தே சுடுகாடு | (புறம்) |
| ஊருள் கோயில் உண்டு | (உள்) |

இவை போன்ற சொல்லுருபுகள் இன்னும் பல உள்ளன.

28. பயிற்சி வினக்கள் :—

1. இடப்பொருளாவது யாது?
2. ஏழாம் வேற்றுமை உருபு யாது?
3. சொல்லுருபுகள் சில கூறுக.
4. முன் பயிற்சிகளின் இறுதிகளில் கூறப்பட்ட சொல் தொடர்களில் வந்துள்ள ஏழாம் வேற்றுமையைக் கண்டுபிடிக்க.

8. எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை) :—

படர்க்கை இடத்திலே வரும் முதலாம் வேற்றுமையை அழைக்கும் பொருளிலே முன்னிலைப்படுத்துவதாகிய சிறு மாற்றத்தினை உடையது எட்டாம் வேற்றுமை. இதனை முதல் வேற்றுமையுள் அடக்கினும்

அடக்கலாம். பிறிதொன்ருகக்கொள்ளினும்கொள்ளலாம்.

தன்னுடைய முன்னிலையில் இல்லாத ஒரு பொருளைக் கொண்டு ஏதோ செய்விக்க இன்னொருவன் விரும்புகிருன்.

வீரன் என்பவனைக் கொண்டு ஏதோ செய்விக்க விரும்பிய நாகன், அவன் தூரத்தில் இருப்பதைக் கண்டு அவனைக் கூப்பிடுகிருன்.

**வீரா! நீ இங்கே வா.**

இப்படி அழைக்கும்போது, நாகனுக்குப் படர்க்கையிடத்தில் இருந்த வீரன் முன்னிலையாக வேறுபட்டான். இப்படியேன் வேறுபட்டான்? அழைக்கப்பட்டபடியால். இதனை அழைப்பு வேற்றுமை எனவும் கூறுவர். இவ்வேற்றுமையின் பொருளும் அழைப்புப் பொருளேயாம்.

அழைத்தல் = கூப்பிடுதல், விளித்தல்.

பெயர்களின் இறுதிகள், இயல்பாகவும், வேறுபட்டும் வருவதே இவ்வேற்றுமைக்கு உருபாகும்.

உதாரணம் :—

| | |
|---|---|
| சாத்தன் வா.<br>பொன்னு கேள். | (இயல்பாய் வந்தது) |
| அரச வாழ்க.<br>கந்தனே ஓடு.<br>மக்காள் வாருங்கள்.<br>யாழப்பாணத்தாய் வருக, | வேறுபட்டு வந்தன. |

படர்க்கை இடம் முன்னிலை இடமாக வேறுபடுதலினுலும்,

கருத்தா அழைக்கப்படும் பொருளாக வேறுபடுதலினுலும், இஃது அம்முதலாம் வேற்றுமையினின்றும்

**வேறுபட்டதொரு வேற்றுமையாகக் கொள்ளப்பட்டது.**

**விளி வேற்றுமைக்குப் பயனிலை :—**

விளி வேற்றுமை, ஏவல் வினையையும் வியங்கோள் வினையையும் பயனிலையாகக் கொள்ளும். உதாரணங்களை மேலே பார்க்க.

முதலாம் வேற்றுமையும் விளி வேற்றுமையும் கொண்டு முடியும் சொற்கள் பயனிலை எனப்படும். (பயனிலையைப்பற்றி முதலாம் வேற்றுமை கூறுமிடத்துக் கூறினோம். அங்கே பார்த்தறிக.

இவை தவிர்ந்த ஏனைய ஆறு வேற்றுமைகளும் கொண்டு முடியும் சொற்கள் முடிக்கும் சொற்கள் எனப் படும். முடிக்கும் சொற்கள் வேற்றுமைகளை மட்டும் முடிப்பன. பயனிலை எல்லாவற்றையும் முடித்துப் பயன் நிலைத்திருப்பது.

உதாரணம் :—

**கந்தன் பகைவனை வாளால் வெட்டிக் கொன்றான்.**

இதில் முதல் வேற்றுமை கந்தன் என்பது. அது கொன்றான் என்னும் பயனிலையையும், பகைவனை என்னும் இரண்டாம் வேற்றுமை வெட்டி என்னும் வினையையும், வாளால் என்னும் மூன்றாம் வேற்றுமை வெட்டி என்னும் வினையையும் கொண்டு முடிந்தன. இதில் வெட்டி என்பது முடிக்கும் சொல். இவை எல்லாவற்றையும் கொண்டு முடிக்கும் பயன் நிலைத்த சொல் கொன்றான் என்பது.

கந்தன் பகைவனை வாளால் வெட்டி....என்றபோது பொருள் முடிந்து பயன் பெறாமை கண்டுகொள்க.

குறிப்பு :—"கந்தன் பகைவனை வெட்டினான்," என்று சொல்லும் போது இரண்டு வேற்றுமைகளும்

பயனிலை கொண்டு முடிந்தன. ஆனால், முதலாம் வேற்றுமையும் விளிவேற்றுமையும் பயனிலையையே கொண்டு முடிவன. ஏனையவை இரண்டையும் கொண்டு முடிவன. (இது சிறுபான்மை)

29. பயிற்சி வினாக்கள்:—

1. முதலாம் வேற்றுமைத் தலைமைப் பொருளுக்கும், விளி வேற்றுமைப் பொருளுக்குமுள்ள வேறுபாடு யாது?
2. விளி வேற்றுமைக்குரிய பொருள் யாது?
3. இவ்வேற்றுமைக்கு உருபுகள் யாவை?
4. பயனிலை, முடிக்கும்சொல் இரண்டற்கும் உள்ள வேறுபாடு யாது? உதாரணங்காட்டி விளக்குக.

2-ஆம் வேற்றுமை முதல், 7-ஆம் வேற்றுமை இறுதியாகவுள்ள ஆறு வேற்றுமைகட்கும் முடிக்கும் சொற்கள் :—

| வேற்றுமை | முடிக்குஞ்சொல் |
| --- | --- |
| 2-ஆம் வேற்றுமை | வினைகொண்டு முடியும் |
| 3-ஆம் வேற்றுமை | வினைகொண்டு முடியும் |
| 4-ஆம் வேற்றுமை | பெயரையும் வினையையும் கொண்டு முடியும் |
| 5-ஆம் வேற்றுமை | வினைகொண்டு முடியும். எல்லை நீக்கப் பொருள் மட்டும் பெயர் கொள்ளும். |
| 6-ஆம் வேற்றுமை | பெயர் கொண்டு முடியும். |
| 7-ஆம் வேற்றுமை | பெயரையும் வினையையும் கொண்டு முடியும். |

உதாரணம் :—

| | |
| --- | --- |
| 2-ஆம் வேற்றுமை | நாகன் கந்தனை அடித்தான். வினை கொண்டது. |
| 3-ஆம் வேற்றுமை | கத்தியால் வெட்டினான். வினை கொண்டது. |

| | |
|---|---|
| 4-ஆம்வேற்றுமை | அரசனுக்கு மகன்–பெயர்கொண்டது<br>கூலிக்குச்செய்தான்வினைகொண்டது |
| 5-ஆம் வேற்றுமை | ஊரினின்றும் நீங்கினான்.<br>வினை கொண்டது.<br>தெல்லிப்பழையின் மேற்குப்<br>பன்றலை—எல்லை நீக்கப்பொருள்<br>பெயர் கொண்டது. |
| 6-ஆம் வேற்றுமை | மரத்தினது கொம்பர்<br>பெயர் கொண்டது. |
| 7-ஆம் வேற்றுமை | ஊரின்கண் இருந்தான். — வினை<br>கொண்டது<br>மணியின்கண் ஒளி — பெயர்<br>கொண்டது. |

வேற்றுமைகளின் விரியும் தொகையும் :—

வேற்றுமைகளின் உருபு வெளிப்பட்டு வருமாயின் அது வேற்றுமை விரி என்றும், உருபுகள் மறைந்து வருமாயின் தொகை என்றும் கூறப்படும்.

முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் தொகையாக வருதலில்லை.

உதாரணம் :—

| வேற்றுமை விரி | | வேற்றுமைத் தொகை |
|---|---|---|
| ஊரையடைந்தான் | (2-ம் வே.) | ஊர் அடைந்தான் |
| அம்பால் எய்தான் | (3-ம் வே.) | அம்பு எய்தான் |
| அரசனுக்கு மகன் | (4-ம் வே.) | அரசன் மகன் |
| மலையின் வீழ் அருவி | (5-ம் வே.) | மலை வீழ் அருவி |
| கந்தனது வயல் | (6-ம் வே.) | கந்தன் வயல் |
| அரண்மனைக்கண் சென்றான் | (7-ம் வே.) | அரண்மனை சென்றான். |

| வேற்றுமை | உருபு | சொல்லுருபு | பொருள் | பயனிலை முடிக்கும்சொல் | உதார… வேற்றுமை… |
|---|---|---|---|---|---|
| 1-ம் வேற். | பெயர் | ஆனவன் என்பவன் முதலிய இருதிணை ஐம்பாற் சொற்கள் | வினைமுதல், அல்லது கருத்தா | வினை, பெயர், வினா } பயனிலை | மாடு வந்தது.<br>அது மரம்.<br>அவை யாவை ? |
| 2-ம் வேற். | ஐ | இல்லை | ஆக்கல், அழித்தல், அடைதல், நீக்கல், ஒத்தல், உடைமை } செயப்படு பொருள் | வினை | வீட்டைக் கட்டினான்.<br>புல்லை மேய்ந்தது.<br>ஊரையடைந்தான்.<br>நட்பை விட்டான்.<br>முகம் சந்திரனை ஒத்தது.<br>பொன்னை உடையான். |
| 3-ம் வேற். | ஆல், ஆன் } ஒடு, ஓடு } | கொண்டு, உடன் | கருத்தா<br>கருவி (காரணம்)<br>*உடனிகழ்ச்சி | வினை | அரசனால் ஆகிய கோயி…<br>மண்ணாலாகிய குடம்<br>அம்பால் எய்தான்.<br>மகனொடு தந்தை வந்தா…<br>மன்னவனோடு மந்திரி வ… |
| 4-ம் வேற். | கு | ஆக, பொருட்டு, நிமித்தம் | நட்புக் கொள்ளல், பகை கொள்ளல், தகுதி கொள்ளல், அதுவாதல் (காரணம்), பொருட்டுக் கொள்ளல், முறையைக் கொள்ளல், எல்லையைக் கொள்ளல், கோடல் கொள்ளல் } கோடல் பொருள் | பெயர், வினை | வேலனுக்கு நண்பன் சங்…<br>எலிக்குப் பகை பூனை.<br>வேதியர்க்குரியது வேத…<br>கூலியின்பொருட்டுச் செ…<br>இராவணனுக்குத் தம்பி …<br>வீட்டிற்குத் தெற்கு அரன்…<br>இரவலர்க்குக் கொடுத்தா… |
| 5-ம் வேற். | இல், இன் | நின்று, நின்றும், இருந்து, இருந்தும் | எல்லை நீக்கம், ஒப்புமை ,, காரணமேது ,, பொதுப்பட ,, } நீக்கப் பொருள் | வினையையும், எல்லை நீக்கம் மட்டும் பெயரையும் கொள்ளும். | காங்கேயன் துறையின் …<br>மதியில் பொலி முகம்<br>அழகிற்சிறந்தவன் கண்ண…<br>மலையின் வீழ் அருவி |
| 6-ம் வேற். | அது, ஆது, அ | உடைய | உறுப்பு, பண்பு, தொழில், ஒரு சாதியின் ஒரு கூட்டம், பல பொருளின் ஒரு கூட்டம், திரிபின் ஆக்கம் } தற்கிழமை<br>பொருள், இடம், காலம் } பிறிதின் கிழமை | பெயர் | கந்தனது கை<br>இராமனது கருமை<br>மாட்டினது நடை<br>காக்கைகளினது கூட்ட…<br>சந்தையது கூட்டம்<br>அரிசியினது மா<br>வீரனது தோட்டம்<br>சாத்தனது ஊர்<br>மன்னரது பிறந்த நாள் |
| 7-ம் வேற். | கண் | மேல், கீழ், இல், இடம், அகம், புறம் முதலிய பல | இடப்பொருள் | பெயர், வினை | மணியின்கண் ஓசை } …<br>மணியின்கண் நாக்கு }<br>வீட்டின்கண் உள்ளது சு…<br>வீட்டின்கண் இருந்தாள்<br>இளமையின்கண் உள்ள…<br>இலமையின்கண் உள்ள…<br>கையின்கண் உள்ளது வி…<br>கையின்கண் உள்ளது பெ…<br>வேனிற்கண் உள்ளது வெ…<br>வேனிற்கண் பூப்பது மா…<br>ஆட்டத்தின்கண் அசைவ…<br>ஆட்டத்தின்கண் சிலம்பெ… |
| 8-ம் வேற். | பெயரிறுதிகளும்நடு வுந்திரிதலியல்பாய் நிற்றல் | இல்லை | விளிப்பொருள் | ஏவல் வினை, வியங்கோள் வினைகளைப் பயனிலையாகக் கொள்ளும். | சாந்தா ! வா.<br>சாத்த ! வருக.<br>பிள்ளாய் ! வாழ்க.<br>மாவிட்டபுரத்தாய் ! உண்.<br>மக்களே ! வாருங்கள்.<br>தம்பி ! கேள். |

குறிப்பு :—1-ஆம் 8-ஆம் வேற்றுமைகளின் முடிபு பயனிலை எனப்படும். ஏனையவை கொண்டு முடிவன மு… வினைகள் கலந்து வந்திருப்பதை ஆங்காங்குப் பார்த்தறிக. 8-ஆம் வேற்றுமை ஏவல் வினை, வி… "தம்பீ ! போய் வருகிறேன்" என்பதில் அவ்வாறு முடியவில்லையே என்று கேட்பீர்களா ? உங்க… வருகிறேன்" என்னும் பயனிலைக்கு "நான்" என்பது தோன்றா எழுவாயாக இங்கு மறைந்துள்… இப்படிச் சொல்வது திருத்தமாகாது. 'தம்பீ ! நில்,' என்றாவது, 'தம்பீ !' வா என்றாவது கூறுவதே… நிலைத்து நிற்பதே பயனிலை எனப்படும். (பயன் + நிலை = பயனிலை).

* ஒடு, ஓடு என்னும் உருபுகள் தொகையாக வாரா.

ம் விளக்கப் படம்

| உதாரணம்<br>வேற்றுமை விரி | உதாரணம்<br>வேற்றுமைத் தொகை | உதாரணம்<br>சொல்லுருபு |
|---|---|---|
| டு வந்தது.<br>ு மரம்.<br>வ யாவை ? | ——— | மாடானது வந்தது.<br>மரமென்பது யாது ?<br>கந்தனென்பவன் வறியவன். |
| டைக் கட்டினான்.<br>லை மேய்ந்தது.<br>ரையடைந்தான்.<br>பை விட்டான்.<br>ம் சந்திரனை ஒத்தது.<br>ன்னை உடையான். | வீடு கட்டினான்.<br>புல் மேய்ந்தது.<br>ஊர் அடைந்தான்.<br>நட்பு விட்டான்.<br>முகம் சந்திரன் ஒத்தது.<br>பொன் உடையான். | ——— |
| சனால் ஆகிய கோயில்<br>ணாலாகிய குடம்<br>பால் எய்தான்.<br>னொடு தந்தை வந்தான்<br>னவனோடு மந்திரி வந்தான். | மண் குடம்<br>அம்பு எய்தான் | வாள்கொண்டு வெட்டினான் (கருவி)<br>ஆசிரியருடன் மாணவன் வந்தான் (உடனிகழ்ச்சி) |
| லனுக்கு நண்பன் சங்கரன்.<br>க்குப் பகை பூனை.<br>தியர்க்குரியது வேதமோதல்.<br>யின்பொருட்டுச் செய்தான்.<br>ாவணனுக்குத் தம்பி விபீடணன்.<br>டிற்குத் தெற்கு அரண்மனை.<br>வலர்க்குக் கொடுத்தான். | வேலன் நண்பன் சங்கரன்.<br>எலிப்பகை பூனை.<br>இராவணன் தம்பி விபீடணன் | குடத்துக்காக மண்<br>கூலிக்காக வேலை செய்தான்.<br>கூலியின்பொருட்டு வேலை செய்தான்.<br>படிக்கும் நிமித்தம் வந்தேன். |
| ங்கேயன் துறையின் தெற்கு மாவிட்டபுரம்<br>யில் பொலி முகம்<br>கிற்சிறந்தவன் கண்ணன்.<br>யின் வீழ் அருவி | மலைவீழ் அருவி | ஊரினின்று போனான்.<br>ஊரினின்றும் போனான்.<br>வீட்டிலிருந்து போனான்.<br>வீட்டிலிருந்தும் போனான். |
| தனது கை<br>ாமனது கருமை<br>ட்டினது நடை<br>க்கைகளினது கூட்டம்<br>தையது கூட்டம்<br>சியினது மா<br>னது தோட்டம்<br>த்தனது ஊர்<br>னரது பிறந்த நாள் | கந்தன் கை<br>இராமன் கருமை<br>மாட்டின் நடை<br>காக்கைகள் கூட்டம்<br>சந்தைக் கூட்டம்<br>அரிசியின் மா<br>வீரன் தோட்டம்<br>சாத்தன் ஊர்<br>மன்னர் பிறந்த நாள் | வேலனுடைய தோள்<br>வேலனுடைய மனைவி |
| ணியின்கண் ஓசை<br>ணியின்கண் நாக்கு } பொருள்<br>டின்கண் உள்ளது சுவர்<br>டின்கண் இருந்தாள் } இடம்<br>ளமையின்கண் உள்ளது அழகு<br>மையின்கண் உள்ளது வறுமை } பண்பு<br>யின்கண் உள்ளது விரல்<br>யின்கண் உள்ளது மோதிரம் } சினை<br>னிற்கண் உள்ளது வெயில்<br>னிற்கண் பூப்பது மா } காலம்<br>ட்டத்தின்கண் அசைவு<br>ட்டத்தின்கண் சிலம்பொலி } தொழில் | மணிநாக்கு<br>வீட்டுச்சுவர்<br>இளமை அழகு<br>கைம்மோதிரம் | தேர்மேல் இருந்தான்.<br>மரத்தின்கீழ் உறங்கினான்.<br>பட்டினத்தில் இருக்கிறான்.<br>அவனிடம் போனாய்.<br>கோயிலகத்தே விக்கிரகம்<br>வீட்டின் புறத்தே தோட்டம்<br>ஊரினகத்தேயுள்ளது கோயில் |
| ந்தா ! வா.<br>த்த ! வருக.<br>ளாய் ! வாழ்க.<br>விட்டபுரத்தாய் ! உண்.<br>களே ! வாருங்கள்.<br>பி ! கேள். | ——— | ——— |

கொண்டு முடிவன முடிக்குஞ் சொற்களாம். வேற்றுமைகளின் முடிக்குஞ் சொற்களாகிய பெயர் மை ஏவல் வினை, வியங்கோள் வினைகளையே கொண்டு முடியும் என்று கூறப்பட்டது. ஆனால், கேட்பீர்களா ? உங்கள் வினா வியக்கத் தகுந்ததுதான். என்றாலும், ஒன்று சொல்வேன் : " போய் க இங்கு மறைந்துள்ளது. ஆகவே, 'தம்பி !' என்பது பயனிலை இல்லாமல் தவிக்கிறது பார்த்தீர்களா ! என்றாவது கூறுவதே திருத்தம் ஆகும். இவையெல்லாம் இப்படி முடிந்த முடிபின் பயனாக, தான்

**30. பயிற்சி வினக்கள் :—**

1. 5–ஆம், 6–ஆம், 7–ஆம் வேற்றுமைகட்கு முடிக்குஞ் சொல் யாது ? உதாரணங் கூறுக.
2. வேற்றுமை விரி, தொகை என்பவை என்ன ?
3. கந்தன் கை முரிந்தது.

   யானை ஊர்த் தோட்டத்தை அழித்தது.

   அரசன் கோயில் கட்டினன்.

   தசரத ராச குமாரன்

   ஊருக்கு நன்மை செய்தான்.

   வீட்டினின்றும் போனன்.

   பாயின்மேல் இருந்தான்.

   இவற்றிலுள்ள வேற்றுமை விரிகளையும் தொகைகளையும் காட்டுக.

வேற்றுமையின் தன்மைகள் முழுவதையும் இலகுவில் விளங்கிக்கொள்ளுமாறு கீழே படமொன்று தருகின்ரேம். அதைப் பார்த்துத் தெளிக.

## 15. அல்வழி :—

இதுவரையும் நாம் படித்துக்கொண்ட எட்டுவேற்றுமைகளுள்,

1-ஆம், 8-ஆம் வேற்றுமைகள் வெளிப்படையான உருபுகள் இல்லாதன என்றும்.

2-ஆம், 3-ஆம், 4-ஆம், 5-ஆம், 6-ஆம், 7-ஆம் வேற்றுமைகள் வெளிப்படையான உருபுகள் உடையன என்றும், அவை விரியாகவும் தொகையாகவும் வருவன என்றும் தெரிந்துகொண்டீர்கள்.

இவ்விரு பகுப்புக்களுள்ளே, முதலாம் எட்டாம் வேற்றுமைகள் தம்மைத் தாமே வேறுபடுத்திக் கொண்டன.

ஏனைய ஆறும் பிறவற்றினலே வேறுபடுத்தப் பட்டன.

முதலாம் எட்டாம் வேற்றுமைகளை வேறுபடுத்தப் பிற பொருளும் அவற்றுக்குரிய உருபுகளும் இல்லாமையால், அவை வேற்றுமை அல்லாதவழி என்றும், ஏனையவை வேற்றுமை வழி என்றும் கூறப்படும். வேற்றுமை அல்லாதவழி அல்வழி என்று கூறப்படும். (வழி = பொருளையறியும் வழி.)

வேற்றுமையைப் போலவே அல்வழியும் பல வகைப்படும். அவற்றுட்சிலவற்றை மட்டும் இப்போது கூறுவோம்.

**வந்த கந்தன்.**

எனப் பெயர் எச்சமும் பெயரும் சேர்ந்து வருவனவும் அல்வழியே.

**வந்து போனன்.**

என வினை எச்சமும் வினையும் சேர்ந்து வருவனவும் அல்வழியே.

**வந்தான் கந்தன்.**

என வினைமுற்றும் கருத்தாவும் சேர்ந்து வருவனவும் அல்வழியே.

பாம்பு பாம்பு

என அடுக்கி வருவனவும் அல்வழியே.

இராமனும் இலக்குமணனும் வந்தார்கள்.

என "உம்" இடைச்சொல் விரிந்து வருவனவும் அல்வழியே.

இராம இலக்குமணர் வந்தார்கள்.

என "உம்" இடைச்சொல் தொக்கு வருவனவும் அல் வழியே.

நனி பேதை

என உரிச்சொல்லோடு சேர்ந்து வருவனவும் அல்வழியே.

இவற்றின் விளக்கங்களை மேல் வகுப்புக்களில் அறிந்துகொள்க.

குறிப்பு :—'சாத்தா! வா,' என்னும் எட்டாம் வேற்றுமையில் சாத்தா என்பது எழுவாயாகவும் வா என்பது பயனிலையாகவும் வருகிறபடியால் முதல் வேற்றுமை போன்றதேயாம்.

## II. வினைச்சொல்

ஏதாவது ஒன்றைப்பற்றி ஏதாவது சொல்லும் சொல் வினைச்சொல் என்பதை முன்னரே படித்திருக்கிறோம்.

வினை முற்றுக்களில்,

கருத்தா
கருவி
நிலம் (இடம்)
செயல்
காலம்
செயப்படுபொருள்

ஆகிய ஆறு தோன்றும்.

உதாரணம் :—

குயவன் குடத்தை <u>வனைந்தான்</u>.

இவ் வாக்கியத்தில் " வனைந்தான் " என்பது வினைமுற்றுச் சொல். இவ்வினைமுற்றினாலே,

1. வனைதலைச் செய்தவனாகிய குயவனும் (கருத்தா)
2. வனைதற்குக் காரணமாகிய மண் திரிகை முதலியனவும் (கருவி)
3. வனைந்த இடமாகிய குயக் கொட்டிலும் (இடம்)
4. அவன் செய்த தொழிலாகிய வனைதலும் (தொழில்)
5. அவன் வனைந்த காலமாகிய இறந்த காலமும் (காலம்)
6. செயப்படுபொருளாகிய பானையும் (செயப்படு பொருள்) அறியப்படுதல் காண்க

சில வினைமுற்றுக்களிலே செயப்படுபொருள் தோன்றாமல் வருதல் உண்டு.

செயப்படுபொருள் தோன்றாத வினையைச் செயப்படு பொருள் குன்றிய வினையென்றும்,

செயப்படுபொருள் தோன்றும் வினையைச் செயப்படு பொருள் குன்றாத வினை என்றும் சொல்வர்.

உதாரணம் :—

| | |
|---|---|
| மரம் வளர்ந்தது.<br>நிலம் வெடித்தது. | செயப்படுபொருள் குன்றிய வினை. |
| மாணவன் படித்தான்.<br>மாமரம் பூத்தது. | செயப்படுபொருள் குன்றாத வினை. |

வினைச்சொற்கள் எல்லாம் இரண்டுவகைப்படுகின்றன. அவை,

(அ) தெரிநிலை வினை

(ஆ) குறிப்பு வினை

என்பனவாம்.

(அ) தெரிநிலை வினை :—

கருத்தா, கருவி, நிலம், செயல், காலம், செயப்படு பொருள் என்னும் ஆறையும் வெளிப்படையாகக் காட்டும்

வினை தெரிநிலை வினை எனப்படும். (செய்பவன் முதலிய ஆறையும் வெளிப்படையாகத்) தெரி(விக்கும்) நிலை (உள்ள) வினைச்சொல்.

தெரிநிலை வினைச்சொற்களுக்குத் தொழிலைக்காட்டும் இரு, நட, படி, போ முதலியவற்றுள் யாதேனும் ஒன்று பகுதியாய் வரும்.

'இரு, நட, படி, போ, வா' என்னும் இவற்றை வினை அடிகள் எனக் கூறுவர்.

உதாரணம் :—

| | | | |
|---|---|---|---|
| இருந்தான், | இருக்கின்றான், | இருப்பான். | (இரு) |
| நடந்தேன், | நடக்கின்றேன், | நடப்பேன், | (நட) |
| நின்றாய்: | நிற்கின்றாய், | நிற்பாய். | (நில்) |
| செய்து, | செய், | செயின். | (செய்) |
| போன, | போகின்ற, | போகும். | (போ) |

இத்தெரிநிலை வினைகளிலே கருத்தா முதலிய ஆறும் புலப்படுகின்றனவா என்று பாருங்கள்.

(ஆ) குறிப்பு வினை :—

பொருள், இடம். காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறு வகைப் பெயர் அடியாகத் தோன்றும் பெயர்ப் பகுபதங்கள், சிலவேளை பெயர்ச்சொல்லாகாமல் காலம் முதலியவற்றைக் காட்டும் வினைச்சொல்லைத் தமக்குள் மறைத்துக்கொண்டு வரும். ஆகையால், பெயர்ப் பகுபதங்களைக் கண்ட போது, நீங்கள் 'இது பெயரா அல்லது வினையா ?' என்று சீர் தூக்கி அறிந்துகொள்ளல் வேண்டும். மாணவர்களே ! அவற்றில் கருத்தூன்றா விடில் ஏமாந்து போவீர்கள்.

கந்தன் பொன்னன்.

என்பதில் பொன்னன் என்பது, கந்தனுடைய பெயர் அன்று. அது கந்தனைப் பற்றி ஏதோ பேசும் பொருளில்

வந்திருக்கிறது. ஆனபடியால், அஃது ஒரு வினைச்சொல். அவ்வினைச்சொல், செய்பவன் முதலிய ஆறையும் குறிப்பினாலே காட்டும். இதனால் அது குறிப்பு வினை எனப்பட்டது. அது சொல்பவனுடைய குறிப்பின்படி மூன்று காலத்தையும் காட்டும்.

**கந்தன் (முன்பு) பொன்னன்**

**கந்தன் (இப்போது) பொன்னன்**

**கந்தன் (இனிமேல்) பொன்னன்.**

என்று சொல்லும்போது பொன்னன் என்னும் குறிப்பு வினை மூன்று காலத்தையும் காட்டுதல் காண்க.

இவை ஒன்றின் பெயரைக் குறிப்பிடும் போது பெயர்ச்சொல் எனப்படும்.

**31. பயிற்சி வினாக்கள் :—**

1. வினைச்சொல்லாவது யாது?
2. வினைச்சொற்களால் எவையறியப்படும்?
3. "படித்தான்" என்ற வினைச்சொல்லில் செய்பவன் முதலிய ஆறும் அமைந்திருத்தலைக் காட்டுக.
4. செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றாத வினை } இவற்றை விளக்குக.
5. நடந்தான், வெட்டினான், போனேன், செய்தாய், மேய்ந்தது, வருவார், சிரித்தான், இறந்தாள், எடுத்தார், அறிந்தன என்னும் இவைகளில் செயப்படுபொருள் குன்றியவினையையும், குன்றாத வினையையும் காட்டுக.
6. வினைச்சொற்கள் எத்தனை வகைப்படும்?
7. தெரிநிலை வினையாவது யாது?

8. குறிப்பு வினையாவது யாது ?
9. இரு வினைச்சொற்கட்கும் பேதம் யாது?
10. கண்ணனும் இராதையும் காதலர்கள் ; இராதை இடையர் குலத்தாள் ; அவள் சிறந்த அழகி ; கண்ணன் அவள் அழகில் மயங்கினான். அவளையே அவன் மணந்துகொண்டான்.—மேலே காட்டிய வாக்கியங்களிலுள்ள தெரிநிலை வினை குறிப்பு வினைகள் யாவை ?

**(அ) தெரிநிலை வினைகளின் வகை :—**

தெரிநிலை வினைச்சொற்கள்,

(க) **தன்வினை**
(கா) **பிறவினை**
(கி) **செய்வினை**
(கீ) **செயப்பாட்டுவினை**

என நான்கு வகைப்படும்.

குறிப்பு வினை தன்வினையாக மட்டும் வரும்.

**(க) தன்வினை :—**

தானே ஒரு தொழிலைச் செய்வதை உணர்த்தும் வினைச்சொல் தன்வினை எனப்படும்.

**உதாரணம் :—**

மாடு **நடந்தது.**

இங்கே நிகழப்பெற்ற தொழில் நடத்தல். அத்தொழிலைச் செய்தது மாடு. ஆதலினாலே, நடந்தது என்பது தன் வினையாயிற்று.

**(கா) பிறவினை :—**

தான் பிறிதொன்றனைக் கொண்டு செய்விக்கும் தொழிலை உணர்த்தும் வினை, பிறவினை எனப்படும்.

**உதாரணம் :—**

முருகன் தன் மகனை **நடத்தினன்**.
அவன் தன் நண்பனைத் **திருத்தினன்**.

இங்கே, நடத்தினன் என்பதில் நடந்தவன் மகன். அவனை நடக்குமாறு செய்தவன் முருகன் ஆதலால், பிற வினையாயிற்று.

மேலும்,

நடத்துவித்தான்
நடத்துவிப்பித்தான்.

எனவும் பிறவினைகள் வரும்.

இனித் தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவாக வரும் வினைகளும் உண்டு.

உதாரணம் :—

கந்தன் வெளுத்தான்.

தன்வினை :—கந்தன் தன் உடம்பு வெளுத்தான்.
பிறவினை :—கந்தன் சேலையை வெளுத்தான்.

(கி) செய்வினை :—

தன்வினைக்கும் பிறவினைக்கும் உரிய கர்த்தா தானே செய்யும் வினை செய்வினையாம்.

உதாரணம் :—

அவன் வருந்தினன்.
அவன் கந்தனை வருத்தினன்.

குறிப்பு :—வருந்தினன், வருத்தினன் என்னும் தன் வினை பிறவினைகட்குக் கருத்தா, அவன் என்பதாதலைக் காண்க.

(கீ) **செயப்பாட்டு வினை :—**

பிறவினைக் கருத்தாவால் செய்யப்பட்ட வினை செயப் பாட்டு வினை எனப்படும்.

**உதாரணம் :—**

நாகன் வேலனால் **நடத்தப்பட்டான்.**

இதில் நடத்தப்பட்டவன் நாகன்; நடத்தினவன் வேலன் ஆதல் காண்க.

குறிப்பு :—இவ்வினைக்குச் செயப்படு பொருள் வினை முதலாக வரும் என்று கூறினும் அமையும்.

| | | | |
|---|---|---|---|
| கண்ணன் **பணக்காரன்** | (பொருள் | அடியாகப்பிறந்தது) | |
| வேலன் **யாழ்ப்பாணத்தான்** | (இடம் | ,, | ,, ) |
| சாத்தன் **திருவாதிரையான்** | (காலம் | ,, | ,, ) |
| பொன்னி **நீண்ட கூந்தலாள்** | (சினை | ,, | ,, ) |
| தமயந்தி **பெரியள்** | (குணம் | ,, | ,, ) |
| வீரன் **கடுநடையன்** | (தொழில் | ,, | ,, ) |

மேலே காட்டப்பட்ட குறிப்பு வினைமுற்றுக்கள் பொருள் ஆதி ஆறு பெயரடியாகவும் தோன்றிய தன் வினைக் குறிப்பு வினைமுற்றுக்கள்.

**32. பயிற்சி வினாக்கள் :—**

1. தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை என்பவற்றுக்கு உதாரணங்காட்டி வேறுபாடுகளை விளக்குக.

2. மிகுந்தது, வருத்திற்று, போக்கினான், விழுத்தினான், போனான், அடிக்கப்பட்டான், காண்பித்தான் என்னும் இவ்வினைச்சொற்களில் தன்வினை முதலாகிய நான்கு வகைகளையும் கண்டுபிடி.

இதுகாறும் கூறிய வினைச்சொற்கள் எல்லாம்,

**க. உடன்பாடு**
**உ. எதிர்மறை**

என்னும் இரண்டு பொருளிலும் வரும்.

9

**க. உடன்பாடு :—**

செய்பவன் முதலிய ஆறனோடும் உடன்பட்டு (ஒன்று பட்டு) வரும் வினைச்சொல் உடன்பாட்டு வினையாம். வனைந்தான் என்றவிடத்துச் செய்பவன் முதலிய ஆறோடும் ஒன்று பட்டு வந்தமையை முன் கண்டீரன்றோ ?

உதாரணம் :— தெரி. வி. கு. வி.

**கந்தன் படித்தான். அவள் நல்லவள்.**

**மாடு மேய்ந்தது. அறிவாளிகள் பெரியோர்.**

**உ. எதிர்மறை :—**

செய்பவன் முதலிய ஆறோடும் ஒன்றுபடுதலை மறுத்து வரும் வினையாகும். (தொழில் நிகழாமையை உணர்த்தும்) எதிர்மறை வினையாகும்.

**உதாரணம் :—**

**அவன் சென்றிலன். கந்தன் பெரியனலன்.**

**யான் காணேன். அவள் நல்லளலள்.**

சென்றிலன் என்றவிடத்து, அவன் செல்லுதலையும், இறந்த காலத்தையும் எதிர்மறுத்துத் தொழில் நிகழாமையை உணர்த்தி நிற்றல் காண்க.

**இல், அல், ஆ** என்பன எதிர்மறைப் பொருள் தரும் இடைநிலைகளாம்.

**உதாரணம் :—**

**செய்திலன் :** செய் + த் + இல் + அன் — இதில் "இல்" என்னும் இடைநிலை எதிர்மறையை உணர்த்தியது.

**காணலன் :** காண் + அல் + அன் — "அல்" என்னும் இடைநிலை எதிர்மறையை உணர்த்திற்று.

**செல்லான் :** செல் + ஆ + ஆன் — இதில் "ஆ" என்னும் இடைநிலை எதிர்மறையை உணர்த்தியது.

குறிப்பு :—செல் + ஆ + ஆன் என்னும் மூன்றும் தம்முள்ளே கூடும்போது, எதிர்மறையை உணர்த்தும் "ஆ" என்னும் இடைநிலை மறைந்து, செல் + ஆன் என நின்று, செல்லான் எனக் கூடியது. "ஏ" என்னும் எதிர்மறை இடைநிலையும் இவ்வாறே வரும் (செல்லேன் = செல் + ஏ + ஏன் = செல் + ஏன்)

33. **பயிற்சி வினாக்கள் :—**

1. உடன்பாட்டு வினை என்பது யாது ?
2. எதிர்மறை வினை என்பது யாது ?
3. போனான், சென்றான், நிற்கின்றான், வருவான், காண்பேன், நின்றாய், செத்தது என்னும் இவைகட்கு எதிர்மறை வினைகள் கூறுக.

மேற்கூறிய உடன்பாடு எதிர்மறைப் பொருள்களில் வரும் தன்வினை, செய்வினை, செயப்பாட்டுவினைகள் ஆகிய வினை வகைகள் எல்லாம், கருத்து முற்றிய (நிறைவேறிய) வினைச்சொற்கள், கருத்து முற்றாத (நிறைவேறாத) வினைச் சொற்கள் என இரண்டுவகையான உருவங்களையுடையன.

**க. கருத்து முற்றிய வினைச்சொல் = வினைமுற்று** } எனப்
**கா. கருத்து முற்றாத வினைச்சொல் = எச்சம்** } படும்

**(க) வினை முற்று :—**

வினை முற்றுக்கள், எண் இடம் காலங்களையாவது, அவற்றோடு திணை பால்களையாவது காட்டிப் பொருள் முடிந்து நிற்கும் வினைச்சொற்களாம்.

எண் இடத்தைக்காட்டிப் பொருள் முடிந்து நிற்கும் வினைச்சொல் :—

**உதாரணம் :—**

**நான் / யான் { (ஆண்) வந்தேன்.**
**(பெண்) வந்தேன்.**
**(குதிரை) வந்தேன்.**

| | |
|---|---|
| நாம் | (ஆண்கள்) வந்தோம். |
| நாங்கள் | (பெண்கள்) வந்தோம். |
| யாம் | (குதிரைகள்) வந்தோம். |
| யாங்கள் | |

மேலே காட்டிய வினைமுற்றுக்கள், தன்மை இடத்தையும், ஒருமை பன்மையாகிய எண்ணையும், இறந்த காலத்தையும் காட்டியமை காண்க. இது போலவே முன்னிலை வினைமுற்றும் வரும்.

உதாரணம் :—

| | |
|---|---|
| நீ | (ஆண்) வந்தாய். |
| | (பெண்) வந்தாய். |
| | (குதிரை) வந்தாய். |
| நீயிர் | (ஆண்கள்) வந்தீர். |
| நீவிர் | (பெண்கள்) வந்தீர். |
| நீர் | (குதிரைகள்) வந்தீர். |

திணை, பால், எண், இடம் எல்லாம் காட்டும் வினைமுற்று :—

**உதாரணம் :—**

கந்தன் **படித்தான்.**

இராமன் **தின்றான்.**

இவைபோன்ற வினைமுற்றுக்கள், திணை பால் எண் இடம் காலம் ஆகிய எல்லாவற்றையும் காட்டும். இவை படர்க்கை வினைமுற்றுக்களாகும்.

**அடித்தான்**
**தின்றான்** | என்பவை,

உயர்திணையையும்
ஆண் பாலையும்
ஒருமை எண்ணையும்
படர்க்கை இடத்தையும்
இறந்த காலத்தையும் காட்டுதல் காண்க.

இப்போது வினைமுற்றுக்கள் இடங்காரணமாக,

(அ) **தன்மை வினைமுற்று,**

(ஆ) **முன்னிலை வினைமுற்று,**

(இ) **படர்க்கை வினைமுற்று**

என மூன்று வகைப்பட்டன.

**(அ) தன்மை வினைமுற்று :—**

தன்மை ஒருமை பன்மைப் பெயர்களோடு சேர்ந்து தொழிலை முடித்துக்கொள்ளும் வினை தன்மை வினைமுற்றாகும். இத்தன்மை வினைமுற்றுக்கள்,

1. **தன்மை ஒருமை வினைமுற்று,**
2. **தன்மைப் பன்மை வினைமுற்று**

என இரு வகைப்படும்.

**i. தன்மை ஒருமை வினைமுற்று :—**

தன்மை ஒருமைப் பெயர்களோடு சேர்ந்து தொழிலை முடித்துக்கொள்ளும் வினை தன்மை ஒருமை வினைமுற்றாகும்.

இவ்வினைமுற்றுக்கள், தமக்கு இறுதி உறுப்பாகும் விகுதிகளாகிய **அன், என், ஏன், அல்** என்பவற்றுள் ஒன்றைப் பெற்று வரும்.

**உதாரணம் :—**

தெரிநிலை வினைமுற்று

உடன்பாடு

| | இற. | நிகழ். | எதிர். |
|---|---|---|---|
| யான் | படித்தனன் | படிக்கின்றனன் | படிப்பன் = அன் விகுதி |
| நான் | கண்டனென் | காண்கின்றனென் | காண்பென் = என் விகுதி |
| | பிடித்தேன் | பிடிக்கின்றேன் | பிடிப்பேன் = ஏன் ,, |
| | | | வருவல் = அல் ,, |

**"அல்"** விகுதி எதிர்கால வினைமுற்றில் மட்டும் வரும்.

**எதிர்மறை**

யான் } படித்திலன், படிக்கின்றிலன், படியேன் என
நான் } வரும்.

இனி, இவைகள் எல்லாம் தன்வினைப் பகுப்புள் அடங்குவன.

படிப்பித்தனன், படிப்பிக்கின்றனன், படிப்பிப்பன் எனத் தன்வினையும் பிறவினையுமாகிய இவ்விரு பகுப்புக் களையுமுடைய செய்வினையும்,

பிடிபட்டேன், பிடிபடுகின்றேன், பிடிபடுவேன் எனச் செயப்பாட்டுவினையும்; நடந்திலன், நடக்கின்றிலன், நடவேன் எனத் தன்வினையும், ஆகிய உடன்பாட்டு வினை களும்,

படிப்பித்திலன், படிப்பிக்கின்றிலன், படிப்பியேன், எனப் பிறவினையும், இவ்விரு பகுப்புக்களையுமுடைய செய்வினையும்,

பிடிபட்டிலன், பிடிபடுகின்றிலன், படிபடேன் எனச் செயப்பாட்டு வினையும் ஆகிய எதிர்மறைவினை களும் வருதல் காண்க.

**குறிப்பு வினைமுற்று**

யான் கரியன் (அன்) }
நான் சிறியென் (என்) } உடன்பாடு
யான் புதியேன் (ஏன்) }

யான் கரிய**னலன்.** }
யான் சிறிய**னிலென்.** } எதிர்மறை
யான் புதிய**னலேன்.** }

இவற்றை இலகுவில் விளங்கிக்கொள்ளுமாறு கீழே படமொன்று தருகின்றோம். பார்த்தறிக.

**குறிப்பு :**—எல்லா வினைகட்கும் இவ்வாறே உதாரணங் காட்டில் மிகப் பெருகுமாதலின், ஏனையவற்றுக்கு

த

| தன்வினை | | | பிறவினை | | |
|---|---|---|---|---|---|
| இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் காலம் | இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் கா |
| பிடித்தனன்<br>பிடித்திலன் | பிடிக்கின்றனன்<br>பிடிக்கின்றிலன் | பிடிப்பன்<br>பிடியேன் | பிடிப்பித்தனன்<br>பிடிப்பித்திலன் | பிடிப்பிக்கின்றனன்<br>பிடிம்பிக்கின்றிலன் | பிடிப்பி<br>பிடிப்பி |
| கண்டனென்<br>கண்டிலென் | காண்கின்றனென்<br>காண்கின்றிலென் | காண்பென்<br>காணேன் | காண்பித்தனென்<br>காண்பித்திலென் | காண்பிக்கின்றனென்<br>காண்பிக்கின்றிலென் | காண்பி<br>காண்பி |
| அடித்தேன்<br>அடித்திலேன் | அடிக்கின்றேன்<br>அடிக்கின்றிலேன் | அடிப்பேன்<br>அடியேன் | அடிப்பித்தேன்<br>அடிப்பித்திலேன் | அடிப்பிக்கின்றேன்<br>அடிப்பிக்கின்றிலேன் | அடிப்பி<br>அடிப்பி |
| | | வருவல்<br>வாரேன் | | | வருவிப்ப<br>வருவியே |
| உண்டனம்<br>உண்டிலம் | உண்கின்றனம்<br>உண்கின்றிலம் | உண்பம்<br>உண்ணேம் | உண்பித்தனம்<br>உண்பித்திலம் | உண்பிக்கின்றனம்<br>உண்பிக்கின்றிலம் | உண்பி<br>உண்பி |
| கேட்டாம்<br>கேட்டிலாம் | கேட்கின்றாம்<br>கேட்கின்றிலாம் | கேட்பாம்<br>கேளாம் | கேட்பித்தாம்<br>கேட்பித்திலாம் | கேட்பிக்கின்றாம்<br>கேட்பிக்கின்றிலாம் | கேட்பி<br>கேட்பிய |
| அறிந்தனெம்<br>அறிந்திலெம் | அறிகின்றனெம்<br>அறிகின்றிலெம் | அறிவம்!<br>அறியேம் | அறிவித்தனெம்<br>அறிவித்திலெம் | அறிவிக்கின்றனெம்<br>அறிவிக்கின்றிலெம் | அறிவிப்<br>அறிவியே |
| படித்தேம்<br>படித்திலேம் | படிக்கின்றேம்<br>படிக்கின்றிலேம் | படிப்பேம்<br>படியேம் | படிப்பித்தேம்<br>படிப்பியேம் | படிப்பிக்கின்றேம்<br>படிப்பிக்கின்றிலேம் | படிப்பி<br>படிப்பி |
| பாடினோம்<br>பாடிலோம் | பாடுகின்றோம்<br>பாடுகின்றிலோம் | பாடுவோம்<br>பாடோம் | பாடுவித்தோம்<br>பாடுவித்திலோம் | பாடுவிக்கின்றோம்<br>பாடுவிக்கின்றிலோம் | பாடுவிப்<br>பாடுவியே |

# தன்மை வினைமுற்று

## தெரிநிலை வினைமுற்று

| | செயப்பாட்டு வினை | | | குறிப்பு வினைமு |
|---|---|---|---|---|
| எதிர் காலம் | இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் காலம் | |
| டிப்பிப்பன்<br>டிப்பியேன் | பிடிபட்டனன்<br>பிடிபட்டிலன் | பிடிபடுகின்றனன்<br>பிடிபடுகின்றிலன் | பிடிபடுவன்<br>பிடிபடேன் | கரியன்<br>கரியனலன் |
| ாண்பிப்பென்<br>ாண்பியேன் | காணப்பட்டனென்<br>காணப்பட்டிலென் | காணப்படுகின்றனென்<br>காணப்படுகின்றிலென் | காணப்படுவென்<br>காணப்படேன் | சிறியன்<br>சிறியனலென் |
| டிப்பிப்பேன்<br>டிப்பியேன் | அடிக்கப்பட்டேன்<br>அடிக்கப்பட்டிலேன் | அடிக்கப்படுகின்றேன்<br>அடிக்கப்படுகின்றிலேன் | அடிக்கப்படுவேன்<br>அடிக்கப்படேன் | பெரியேன்<br>பெரியேனலேன் |
| ருவிப்பல்<br>ருவியேன் | | | வருவிக்கப்படுவல்<br>வருவிக்கப்படேன் | |
| ண்பிப்பம்<br>ண்பியேம் | உண்ணப்பட்டனம்<br>உண்ணப்பட்டிலம் | உண்ணப்படுகின்றனம்<br>உண்ணப்படுகின்றிலம் | உண்ணப்படுவம்<br>உண்ணப்படேம் | அறிவினம்<br>அறிவினமல்லம் |
| கட்பிப்பாம்<br>கட்பியாம் | கேட்கப்பட்டாம்<br>கேட்கப்பட்டிலாம் | கேட்கப்படுகின்றாம்<br>கேட்கப்படுகின்றிலாம் | கேட்கப்படுவாம்<br>கேட்கப்படாம் | நடையினாம்<br>நடையினமலாம் |
| றிவிப்பெம்<br>றிவியேம் | அறியப்பட்டனெம்<br>அறியப்பட்டிலெம் | அறிவிக்கப்படுகின்றனெம்<br>அறிவிக்கப்படுகின்றிலெம் | அறிவிக்கப்படுவெம்<br>அறிவிக்கப்படேம் | கண்ணினம்<br>கண்ணினமலெம் |
| டிப்பிப்பேம்<br>டிப்பியேம் | படிக்கப்பட்டேம்<br>படிக்கப்படேம் | படிக்கப்படுகின்றேம்<br>படிக்கப்படுகின்றிலேம் | படிக்கப்படுவேம்<br>படிக்கப்படேம் | வீட்டினேம்<br>வீட்டினேமலேம் |
| ாடுவிப்போம்<br>ாடுவியோம் | பாடப்பட்டோம்<br>பாடப்பட்டிலோம் | பாடப்படுகின்றோம்<br>பாடப்படுகின்றிலோம் | பாடப்படுவோம்<br>பாடப்படோம் | நம்பினோம்<br>நம்பினமலோம் |

| செயப்பாட்டு வினை | | குறிப்பு வினைமுற்று | விகுதிகள் |
|---|---|---|---|
| நிகழ் காலம் | எதிர் காலம் | | |
| பிடிபடுகின்றனன்<br>பிடிபடுகின்றிலன் | பிடிபடுவன்<br>பிடிபடேன் | கரியன்<br>கரியனலன் | " அன் " விகுதி |
| காணப்படுகின்றனென்<br>காணப்படுகின்றிலென் | காணப்படுவென்<br>காணப்படேன் | சிறியன்<br>சிறியனலென் | " என் " விகுதி |
| அடிக்கப்படுகின்றேன்<br>அடிக்கப்படுகின்றிலேன் | அடிக்கப்படுவேன்<br>அடிக்கப்படேன் | பெரியேன்<br>பெரியேனலேன் | " ஏன் " விகுதி |
| | வருவிக்கப்படுவல்<br>வருவிக்கப்படேன் | | " அல் " விகுதி |
| உண்ணப்படுகின்றனம்<br>உண்ணப்படுகின்றிலம் | உண்ணப்படுவம்<br>உண்ணப்படேம் | அறிவினம்<br>அறிவினமல்லம் | " அம் " விகுதி |
| கேட்கப்படுகின்றாம்<br>கேட்கப்படுகின்றிலாம் | கேட்கப்படுவாம்<br>கேட்கப்படாம் | நடையினாம்<br>நடையினமலாம் | " ஆம் " விகுதி |
| அறிவிக்கப்படுகின்றனெம்<br>அறிவிக்கப்படுகின்றிலெம் | அறிவிக்கப்படுவெம்<br>அறிவிக்கப்படேம் | கண்ணினம்<br>கண்ணினமலெம் | " எம் " விகுதி |
| படிக்கப்படுகின்றேம்<br>படிக்கப்படுகின்றிலேம் | படிக்கப்படுவேம்<br>படிக்கப்படேம் | வீட்டினேம்<br>வீட்டினேமலேம் | " ஏம் " விகுதி |
| பாடப்படுகின்றோம்<br>பாடப்படுகின்றிலோம் | பாடப்படுவோம்<br>பாடப்படோம் | நம்பினோம்<br>நம்பினமலோம் | " ஓம் " விகுதி |

இவ்வாறு செய்திலேம். இதன் உதவிகொண்டு ஏனையவற்றையும் உய்த்துணர்க.

ii. **தன்மைப்பன்மை வினைமுற்று :—**

தன்மைப் பன்மைப் பெயர்களோடு சேர்ந்து தொழிலை முடித்துக்கொள்ளும் வினைமுற்று, தன்மைப் பன்மை வினைமுற்று எனப்படும்.

இவ்வினைமுற்றுக்கள் தமக்கு விகுதிகளாக **அம், ஆம், எம், ஏம், ஓம்** என்பவைகளுள் ஒன்றைப் பெற்று வரும்.

உதாரணம் :—

தெரிநிலை வினை (உடன்பாடு)

| | இறந்த | நிகழ் | எதிர் | |
|---|---|---|---|---|
| நாம் யாம் நாங்கள் | கண்டனம் | காண்கின்றனம் | காண்பம் | (அம்) |
| | வந்தாம் | வருகின்றாம் | வருவாம் | (ஆம்) |
| | போனெம் | போகின்றெம் | போவெம் | (எம்) |
| | வெட்டினேம் | வெட்டுகின்றேம் | வெட்டுவேம் | (ஏம்) |
| | பாய்ந்தோம் | பாய்கின்றோம் | பாய்வோம் | (ஓம்) |

எதிர்மறை

**கண்டிலம் காண்கின்றிலம் காணலம்**

ஏனைய விகுதி உதாரணங்களையும் இவ்வாறே எதிர்மறையாக்கிக்கொள்க.

குறிப்பு வினை (உடன்பாடு)

உதாரணம் :—

| | | |
|---|---|---|
| யாம் | பெரியம் | (அம்) |
| ,, | அறிவினம் | (ஆம்) |
| ,, | பேதையினெம் | (எம்) |
| ,, | நண்பினேம் | (ஏம்) |
| ,, | நடையினோம் | (ஓம்) |

எதிர்மறை

| | | |
|---|---|---|
| யாம் | பெரியம் | அலம் |
| யாம் | அறிவினும் | அலாம் |
| யாம் | பேதையினெம் | அலெம் |
| யாம் | நண்பினேம் | அலேம் |
| யாம் | நடையினோம் | அலோம் |

34. பயிற்சி வினாக்கள் :—

1. வினைச்சொற்கள் பெரும்பாலும் எத்தனை விதமான உருவங்களை அடைகின்றன ?
2. வினைமுற்றுவது யாது ?
3. அவ்வினைமுற்றுக்கள் இடங்காரணமாக எத்தனை வகைப்படும் ?
4. தன்மை முன்னிலை வினைமுற்றுக்கட்கும், படர்க்கை வினைமுற்றுக்கட்கும் வேறுபாடியாது ?
5. தன்மை வினைமுற்று எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
6, நடந்தேம், நடப்பேன், செய்தேன், செய்கின்றேன் என்னும் இவற்றைப் பிறவினையாகவும் செயப்பாட்டு வினையாகவுங் கூறுக.

(ஆ) முன்னிலை வினைமுற்று :—

முன்னிலை ஒருமை பன்மைப் பெயர்களோடு சேர்ந்து தொழிலை முடித்துக்கொள்ளும் வினைமுற்று, முன்னிலை வினைமுற்றும். அது,

i. முன்னிலை ஒருமை வினைமுற்று,

ii. முன்னிலைப் பன்மை வினைமுற்று

என இரண்டு வகைப்படும்.

### i. முன்னிலை ஒருமை வினைமுற்று

முன்னிலை ஒருமைப் பெயரோடு சேர்ந்து தொழிலை முடித்துக்கொள்ளும் வினைமுற்று, முன்னிலை ஒருமை வினைமுற்றும்.

இவ்வினைமுற்று, ஐ, ஆய், இ என்னும் விகுதிகளுள் ஒன்றினைப் பெற்று வரும்.

உதாரணம் :—

தெரிநிலை வினை (உடன்பாடு)

| | இறந். | நிகழ். | எதிர். |
|---|---|---|---|
| நீ | வந்தனை | வருகின்றனை | வருவை (ஐ) |
| | சென்றாய் | செல்கின்றாய் | செல்வாய் (ஆய்) |
| | சென்றி | செல்கின்றி | சேறி (இ) |

எதிர்மறை

| | | | |
|---|---|---|---|
| நீ | வந்திலை | வருகின்றிலை | வருகிலை (ஐ) |
| | சென்றிலாய் | செல்கின்றிலாய் | செல்லாய் (ஆய்) |
| | சென்றிலி | செல்கின்றிலி | சேறிலி (இ) |

குறிப்பு வினை

| உடன்பாடு | | எதிர்மறை | |
|---|---|---|---|
| நீ | கண்ணினை (ஐ) | நீ | கண்ணினை அலை (ஐ) |
| | குழையாய் (ஆய்) | | குழையை அல்லாய் (ஆய்) |
| | வில்லி (இ) | | வில்லி அல்லி (இ) |

### ii முன்னிலைப் பன்மை வினைமுற்று

முன்னிலைப் பன்மைப் பெயர்களோடு சேர்ந்து தொழிலை முடித்துக்கொள்ளும் வினைமுற்று, முன்னிலைப் பன்மை வினைமுற்று எனப்படும்.

இவ்வினைமுற்று, இர், ஈர், கள் என்னும் விகுதிகளுள் ஒன்றனைப் பெற்று வரும்.

தெரிநிலை வினை (உடன்பாடு)

| | இறந்த. | நிகழ். | எதிர் |
|---|---|---|---|
| நீர் நீயிர் | வந்தனிர் | வருகின்றிர் | வருவிர் (இர்) |
| | போனீர் | போகின்றீர் | போவீர் (ஈர்) |
| | பாடினீர்கள் | பாடுகின்றீர்கள் | பாடுவீர்கள்(ஈர் + கள்) |

எதிர்மறை

| | | | |
|---|---|---|---|
| நீர் நீயிர் | வந்திலிர் | வருகின்றிலிர் | வாரிர் |
| | போயிலீர் | போகின்றிலீர் | போகீர் |
| | பாடிலீர்கள் | பாடுகின்றிலீர்கள் | பாடீர்கள் |

குறிப்பு வினை

| | உடன்பாடு | | எதிர்மறை |
|---|---|---|---|
| நீர் | சிறியிர் | நீர் | சிறியிர் அல்லிர் |
| | பெரியீர் | | பெரியீர் அல்லீர் |
| | அறிவீர்கள் | | அறிவீர்கள் அல்லீர்கள் |

35. **பயிற்சி வினாக்கள் :—**

1. முன்னிலை வினைமுற்றாவது யாது ?
2. அஃது எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
3. முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் யாவை ?
4. முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள்யாவை?
5. வந்தனை, வருகின்றி, போனிர், செய்வீர்கள் என்பவற்றுக்கு எதிர்மறை கூறுக.

**(இ) படர்க்கை வினைமுற்று :—**

படர்க்கைப் பெயர்களோடு சேர்ந்து தொழிலை முடித்துக்கொள்ளும் வினைமுற்றுப் படர்க்கை வினைமுற்றாம்.

இஃது,

**உயர்திணை வினைமுற்று,**
**அஃறிணை வினைமுற்று**

என இரண்டு வகைப்படும்.

உயர்திணை வினைமுற்று,

**ஆண் பால் வினைமுற்று,**
**பெண் பால் வினைமுற்று,**
**பலர் பால் வினைமுற்று**

என மூன்று வகைப்படும்.

அஃறிணை வினைமுற்று,

**ஒன்றன் பால் வினைமுற்று,**
**பலவின் பால் வினைமுற்று**

என இரண்டு வகைப்படும்.

ஆகவே, பால் காரணமாகப் படர்க்கை வினைமுற்று ஐந்து வகைப்படுதல் காண்க.

**i. ஆண் பால் ஒருமை வினைமுற்று :—**

உயர்திணை ஆண் பால் ஒருமைப் பெயர்ச்சொற்களோடு சேர்ந்து, தொழில் முடித்துக்கொள்ளும் வினைமுற்று, ஆண் பால் வினைமுற்று எனப்படும்.

இவ்வினைமுற்று, **அன்**, **ஆன்** என்னும் விகுதிகளுள் ஒன்றனைப் பெற்று வரும்.

உதாரணம் :—

உடன்பாடு

தெரிநிலை வினை குறிப்பு வினை

| | இறந்த. | நிகழ். | எதிர். | |
|---|---|---|---|---|
| அவன் எவன் கந்தன் | சென்றனன் சென்றான் | செல்கின்றனன் செல்கின்றான் | செல்வன் செல்வான் | நல்லன் (அன்) புதியான் (ஆன்) |

எதிர்மறை

தெரிநிலை வினை குறிப்பு வினை

| | இறந்த. | நிகழ். | எதிர். | |
|---|---|---|---|---|
| அவன் எவன் கந்தன் | சென்றிலன் சென்றிலான் | செல்கின்றிலன் செல்கின்றிலான் | செல்லான் செல்லான் | நல்லனலன் புதியனலான் |

ii. பெண் பால் (ஒருமை) வினைமுற்று :—

உயர்திணைப் பெண் பால் ஒருமைப் பெயர்ச்சொற்களோடு சேர்ந்து, தொழில் முடித்துக்கொள்ளும் வினைமுற்றுப் பெண்பால் வினைமுற்று எனப்படும்.

இவ்வினைமுற்று **அள், ஆள்** என்னும் விகுதிகளுள் ஒன்றனைப் பெற்று வரும்.

உதாரணம் :—

உடன்பாடு

தெரிநிலை வினை குறிப்பு வினை

| | இறந். | நிகழ். | எதிர். | |
|---|---|---|---|---|
| அவள் எவள் கண்ணம்மாள் | பாடினள் பாடினாள் | பாடுகின்றனள் பாடுகின்றாள் | பாடுவள் பாடுவாள் | குழையள் கூந்தலாள் |

எதிர்மறை

தெரிநிலை வினை

| | இறந். | நிகழ். | எதிர். |
|---|---|---|---|
| அவள் எவள் | பாடிலள் | பாடுகின்றிலள் | பாடாள் |
| கண்ணம்மாள் | பாடிலாள் | பாடுகின்றிலாள் | பாடாள் |

குறிப்பு வினை

குழையளலள்

கூந்தலளலள்

iii. பலர் பால் (பன்மை) வினைமுற்று :—

உயர்திணைப் பலர் பால் பன்மைப் பெயர்ச்சொற்களோடு சேர்ந்து தொழிலை முடித்துக்கொள்ளும் வினைமுற்றுக்கள், பலர் பால் வினைமுற்றுக்களாம்.

இவ்வினைமுற்று, அர், ஆர், கள் என்னும் விகுதிகளுள் ஒன்றனைப் பெற்று வரும்.

உதாரணம் :—

உடன்பாடு

தெரிநிலை வினை

| | இறந். | நிகழ். | எதிர். |
|---|---|---|---|
| அவர் எவர் ஆடவர் | அடித்தனர் | அடிக்கின்றனர் | அடிப்பர் |
| மங்கையர் | ஓடினார் | ஓடுகின்றார் | ஓடுவார் |
| மக்கள் | கண்டார்கள் | காண்கின்றார்கள் | காண்பார்கள் |

குறிப்பு வினை

காதலர் (அர்)

ஊரார் (ஆர்) அறிவினர்கள்.

எதிர்மறை

| | தெரிநிலை. | | | குறிப்பு. |
|---|---|---|---|---|
| | இற. | நிகழ். | எதிர். | |
| அவர், எவர் | அடித்திலர் | அடிக்கின்றிலர் | அடியார் | காதலரலர் |
| | ஓடிலார் | ஓடுகின்றிலார் | ஓடார் | ஊரரலார் |
| | காணலார்கள் | காண்கின்றிலர் | காணார் | அறிவில்லார்கள் |

iv. ஒன்றன்பால் வினைமுற்று :—

அஃறிணை ஒன்றன் பால் ஒருமைப் பெயர்களோடு சேர்ந்து தொழிலை முடித்துகொள்ளும் வினைமுற்று ஒன்றன் பால் வினைமுற்றாகும்.

இவ்வினைமுற்று, **து**, **று** என்னும் விகுதிகளுள் ஒன்றனைப் பெற்று வரும். "டு" என்னும் விகுதி குறிப்பு வினைமுற்றில் மட்டும் வரும்.

**உதாரணம் :—**

உடன்பாடு

| | தெரிநிலை வினை | | | குறிப்பு வினை |
|---|---|---|---|---|
| | இற. | நிகழ். | எதிர். | |
| அது, எது, சேவல், பேடு | கண்டது, கூயிற்று. | காண்கின்றது. | காண்பது | கரிது (து), பொருட்டு (டு), அற்று (று) |

எதிர்மறை

| | தெரிநிலை. | | | குறிப்பு. |
|---|---|---|---|---|
| | இறந். | நிகழ். | எதிர். | |
| அது, எது | கண்டிலது | காண்கின்றிலது | காணாது | கரிதலது |

V. **பலவின் பால் வினைமுற்று :—**

அஃறிணைப் பலவின் பால் பன்மைப்பெயர்களோடு சேர்ந்து, தொழிலை முடித்துக்கொள்ளும் வினைமுற்றுப் பலவின் பால் வினைமுற்று எனப்படும்.

இவ்வினைமுற்று **அ, ஆ** என்னும் விகுதிகளுள் ஒன்றனைப் பெற்று வரும்.

இவற்றுள் "**அ**" என்னும் விகுதி, தெரிநிலை, குறிப்பு ஆகிய இரண்டு வினைகளிலும் உடன்பாட்டிலும், எதிர் மறையிலும் வரும்.

**உதாரணம் :—**

**உடன்பாடு**

| | தெரிநிலை வினை | | | குறிப்பு வினை |
|---|---|---|---|---|
| | இற. | நிகழ். | எதிர். | |
| அவை, யாவை, சேவல்கள், பேடுகள், மாடுகள் | **உண்டன,** | **உண்கின்றன,** | **உண்பன** | **நல்லன** |

**எதிர்மறை**

| | தெரிநிலை வினை | | | குறிப்பு வினை |
|---|---|---|---|---|
| | இறந். | நிகழ். | எதிர் | |
| அவை யாவை | **உண்டில** | **உண்கின்றில** | | **நல்லவல்ல** |

**குறிப்பு** :—அகரவிகுதி எதிர்மறையில் வாராது. ஆகார விகுதி தெரிநிலை வினையிலே, எதிர்மறையில் மூன்று காலங்களுள் ஒன்றனைப் பெற்றுவரும், உடன்பாட்டிலும் குறிப்பு வினையிலும் வாராது.

| | | |
|---|---|---|
| இவை, யாவை, மாடுகள் | நேற்று இப்போது நாளை | **உண்ணா. வாரா.** |

இரு திணை ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவான குறிப்பு வினைமுற்றுக்கள்.

வேறு,

இல்லை,

உண்டு என்பனவாம்.

உதாரணம் :—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வேறு | இல்லை | உண்டு |
| தன்மை ஒருமை | நான் | = | வேறு | இல்லை | உண்டு |
| ,, பன்மை | நாம் | = | வேறு | இல்லை | உண்டு |
| முன்னிலை ஒருமை | நீ | = | வேறு | இல்லை | உண்டு |
| ,, பன்மை | நீர் | = | வேறு | இல்லை | உண்டு |
| படர்க்கை ஆண்பால் | **அவன்** | = | வேறு | இல்லை | உண்டு |
| ,, பெண் பால் | **பொன்னி** | = | வேறு | இல்லை | உண்டு |
| ,, பலர் பால் | **யாவர்** | = | வேறு | இல்லை | உண்டு |
| ,, ஒன்றன் பால் | **அது** | = | வேறு | இல்லை | உண்டு |
| ,, பலவின் பால் | **மலைகள்** | = | வேறு | இல்லை | உண்டு |

**36. பயிற்சி வினுக்கள் :—**

1. படர்க்கை வினைமுற்றுக்களைத் திணை காரணமாகவும், பால் காரணமாகவும் பகுத்துக் காட்டுக.
2. நின்ருன், வந்தன, போகின்ருர், பொலிகின்றது, ஆடுவ, மலர்ந்தார், பார்த்தாள்—இவற்றிலுள்ள ஐவகை முற்றுக்களையும் விகுதிகளையும் பிரித்துக் கூறுக.
3. இரு திணை ஐம்பால் மூவிடங்கட்குப் பொதுவான குறிப்பு முற்றுக்கள் யாவை ?

(ஐ) **செய்யும் என்னும் வினைமுற்று :—**

வினை முற்றுக்களிலே, செய்யும் என்னும் ஒரு வகை வினைமுற்றும் உளது.

இதை முந்திக் கூறிய வினைமுற்றுக்களில் அடக்காமல், செய்யும் என்னும் முற்று என்று ஏன் வேருக்கிக் கூறினேம் என்ருல், இந்த வினைமுற்றைப் போலவே கருத்து முடியாத வினைச்சொல்லாகிய எச்சத்திலும் ஒன்று செய்யும் என வரும். "செய்யும்" என்பது எச்சமா, அல்லது, முற்ரு ? இவற்றுள் யாது ? என்று அறிவித்தற்காகவே செய்யும் என்னும் முற்று என்ரேம்.

இந்தச் செய்யும் என்னும் முற்று,

**தன்மைப் பெயர்களோடும் வாராது ;**
**முன்னிலைப் பெயர்களோடும் வாராது ;**
**படர்க்கைப் பலர்பால் பெயர்களோடும் வாராது;**

படர்க்கையில் பலர்பால் ஒழிந்த

1. **ஆண்பால்**
2. **பெண்பால்**
3. **ஒன்றன்பால்**
4. **பலவின்பால்**

என்னும் நான்கு பால் பெயர்களோடும் வரும்.

**உதாரணம் :—**

| | | |
|---|---|---|
| பொன்னன் | ஓடும் | (ஓடுவன்) |
| அவன் | பாடும் | (பாடுவான்) |
| கரியது | உழும் | |
| குதிரைகள் | பாயும் | (பாய்வன) |
| கரியது | நிற்கும் | |

செய்யும் என்னும் முற்று எதிர்காலங்காட்டி வரும்.

(உ) **ஏவல் வினைமுற்று :—**

முன்னிலையில் உள்ள பொருள்களைத் தொழில் செய்யக் கட்டளையிடும் பொருளில் வரும் வினைமுற்றே ஏவல் வினைமுற்றாகும்.

இவ்வினைமுற்று, ஒரு பொருளை ஏவுதல் செய்யும் போது **ஆய்**, **இ** என்னும் விகுதிகளுள் ஒன்றனைப் பெற்றும், பல பொருளை ஏவுதல் செய்யும் போது, **மின்**, **இர்**, **ஈர்**, **கள்**, **உம்** என்னும் விகுதிகளுள் ஒன்றனைப் பெற்றும் வரும்.

**உதாரணம் :—**

**ஒருமைக்கு**

| | | | |
|---|---|---|---|
| **நீ நடவாய்** | = | **நட (ஆய்)** | ஆய் |
| **நீ சொல்லுதி** | = | **சொல்லு (இ)** | இ |

குறிப்பு :—ஆய், இ என்னும் விகுதிகள் மறைந்து, நட, சொல்லு என வருதலும் உண்டு.

**பன்மைக்கு**

| | | | |
|---|---|---|---|
| **நீவிர்** | **உண்மின்** | = | **மின்** |
| **நீவிர்** | **வருகுதிர்** | = | **இர்** |
| **நீவிர்** | **செய்யீர்** | = | **ஈர்** |
| **நீவிர்** | **பாருங்கள்** | = | **கள்** |
| **நீவிர்** | **உண்ணும்** | = | **உம்** |

**எதிர்மறை ஏவல் வினைமுற்று :—**

எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று " ஆ " என்னும் எதிர்மறை இடைநிலையையும், ஏ, இ என்னும் விகுதிகளுள் ஒன்றனையும் பெற்று வரும்.

**உயர்திணை : —**

| | |
|---|---|
| **செய்யாதே**<br>**நிற்காதே** | ஆகார எதிர்மறை இடைநிலையும் " ஏ " விகுதியும் பெற்றன. |
| **உண்ணாதி**<br>**பேசாதி** | ஆகார எதிர்மறை இடைநிலையும் இகர விகுதியும் பெற்றன. |

எதிர்மறை ஏவல் பன்மை வினைமுற்றுக்கள் "அல்" "ஆ" என்னும் எதிர்மறை இடைநிலைகளுள் ஒன்றனையும், மின், கள், இர், ஈர் விகுதிகளுள் ஒன்றனையும் பெற்று வரும்.

உதாரணம் :—

**உண்ணன்மின் :** அல் எதிர்மறை இடைநிலையும் மின் விகுதியும் பெற்றது.

**எண்ணுநீர் :** ஆகார எதிர்மறை இடைநிலையும் ஈர் விகுதியும் பெற்றது.

**ஒழியாதீர்கள் :** ஆகார எதிர்மறை இடைநிலையும் கள் விகுதியும் பெற்றது.

**செய்யாதிர் :** ஆகாரஎதிர்மறை இடைநிலையும், இர் விகுதியும் பெற்றது.

**(ஊ) வியங்கோள் வினைமுற்று :—**

வியம் = ஏவல்; கோள் = கொள்வது. ஆகவே, ஏவலைக் கொள்வது வியங்கோள் வினைமுற்றாகும். விகுதி **க, இய, இயர்** என்பன. இவ்வினை முற்று,

**மரியாதை**
**மதிப்பின்மை**
**வாழ்த்து**
**வசை**
**வேண்டுதல்**
**கட்டளையிடுதல்**

முதலிய பொருள்களில் வரும்.

இது ஐம்பால் மூவிடங்களில் எதிர்காலம் காட்டிவரும்.

உதாரணம் :—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| யான், நாம் | வருக | ஒழுக | கெடுக | தருக | உண்ணுக | வ[illegible]க. |
| நீ, நீவிர் | வருக | ஒழிக | அழிக | தருக | உண்ணுக | வாழ்க. |
| அவன் | ,, | ,, | ,, | ,, | ,, | ,, |
| அவள் | ,, | ,, | ,, | ,, | ,, | ,, |
| அவர் | ,, | ,, | ,, | ,, | ,, | ,, |
| அது | ,, | ,, | ,, | ,, | ,, | ,, |
| அவை | ,, | ,, | ,, | ,, | ,, | ,, |

அவன்—வாழிய, வாழியர் என இய, இயர் என்னும் விகுதிகள் பெற்றுவரினும் வாழ்க என்பதே பொருளாம்.

**எதிர்மறை வியங்கோள் வினைமுற்று :—**

இவ்வினைமுற்று "**அல்**" என்னும் இடைநிலையோடு கூடி வரும்.

உதாரணம் :

**உண்ணற்க (உண் + அல் + க)**

இவ்வினைமுற்று, "அல்" விகுதி பெற்று உடன்பாட்டினையும் எதிர்மறையையும் காட்டுதலும் உண்டு.

உதாரணம் :—

**அறிவிலாதவனைப் பதர் எனல் (என்க)—உடன்பாடு**

**அறிவுடையோனைப் பதர் எனல் (என்னற்க)—எதிர் மறை.**

37. பயிற்சி வினாக்கள்:—

1. செய்யுமென் முற்று ஏன் வேறாகக் கூறப்பட்டது?
2. அஃது ஐம்பால்களுள் எவற்றுடன் வாராது ?

3. அஃது எவற்ருேடு வரும்? உதாரணங் கூறுக.
4. வினைமுற்று எப்பொருளில் எவ்விடத்தில் வரும்?
5. வியங்கோள் வினைமுற்று எப்பொருளில் எவ்விடத்தில் வரும்?
6. நடவாய், செய்தி, கூறுதி, வருவாய், வாழ்க, நிற்குதி, செய்வாய், வாழுதி, பெறுக என்னும் இவற்றுக்கு எதிர்மறை வினைமுற்றுக்கள் கூறுக.

## (கா) எச்சம்

கருத்து முற்ருத வினைச்சொற்கள் எச்சம் எனப்படும் என்று முன்னர்க் கூறினேம். இவ்வெச்ச வினைகள் தங்கருத்தை முடித்துக்கொள்ளப் பெயர்களையேனும் வினைகளையேனும் சார்ந்துகொள்ளும்.

பெயர்களைச் சார்ந்து தங்கருத்தை முடித்துக்கொள்வன **பெயர் எச்சம்** என்றும், வினைகளைச்சார்ந்து தம் கருத்தை முடித்துக்கொள்வன **வினை எச்சம்** என்றும் கூறப்படும். எனவே எச்சம்,

1. **பெயரெச்சம்**
2. **வினையெச்சம்**

என இரு வகைப்படும் என அறிந்துகொள்க.

1. **பெயர் எச்சம்:—**

"**வந்த**" என்பது ஒரு வினைச்சொல். இது வந்தான் என்பது போலக் கருத்து முடிந்த முற்று வினைச்சொல் அன்று. இந்த வினைச்சொல் தன் கருத்தை இன்னும் முடித்துக்கொள்ளவில்லை. இது தன் கருத்தை முடிப்பதற்கு எந்தச் சொல்லை நாடுகிறது என்று பார்ப்போம்.

**வந்த போனன்**
**வந்த செய்கிருன்**

என்று முடித்துவிடலாமா? ஏன் சிரிக்கிறீர்கள்? இப்படி முடியாது என்று நினைப்பீரேல்,

**வந்த மாடு**
**வந்த கந்தன்**

என்ருல் அந்த எச்சம் தன் கருத்தை முடித்துக்கொள்வதைக் காண்பீர்களாக. எச்சமானது பெயரைக்கொண்டு தன் கருத்தை முடித்துக்கொண்டால், அவ்வாறு முடித்துக்கொள்வது பெயரெச்சம் என அறிந்துகொள்க.

இப்பெயர் எச்சங்கள் எல்லாவற்றையும் மூன்று வகையான வாய்பாடுகளில் அடக்கிக்கூறலாம். எல்லா வினைகட்கும் பொதுவான வினை செய் என்பது. (இதனை இறுதியில் விளக்குவோம்; அங்குக் காண்க.) ஆகையினுல், "செய்" என்னும் வினை அடியையே (பகுதியையே) பொதுவாக வைத்துக்கொண்டு வாய்பாடுகளை ஆக்குவோம்.

உடன்பாட்டுப் பெயரெச்ச வாய்பாடுகள்.

செய்த
செய்கின்ற
செய்யும் என்பனவாம்.

**செய்த** =இறந்தகாலப் பெயரெச்ச வாய்பாடு (**செய்+த்+அ**) "**த்**" இடைநிலை இறந்தகாலம் காட்டியது.

**செய்கின்ற** = நிகழ்காலப் பெயரெச்ச வாய்பாடு (**செய்+கின்று+அ**) "**கின்று**" இடைநிலை நிகழ்காலம் காட்டியது.

**செய்யும்** = எதிர்காலப் பெயரெச்ச வாய்பாடு (**செய்+உம்**) "**உம்**" விகுதி எதிர்காலம் காட்டியது.

உடன்பாட்டுத் தெரிநிலை வினைப் பெயர் எச்சங்களுள், இறந்த காலங் காட்டும் பெயரெச்சமும் நிகழ்காலங்காட்டும் பெயரெச்சமும் அகர விகுதியினையும், எதிர்காலங் காட்டும் பெயரெச்சம் 'உம்' விகுதியினையும் பெற்று வரும். உம் என்னும் விகுதியே எதிர்காலங் காட்டுதலின் குறிப்புவினைப் பெயரெச்ச விகுதியாக வருவதின்று.

உதாரணம் :—

| | |
|---|---|
| நடந்த குதிரை<br>போன பொருள்<br>உண்ட சோறு<br>இருந்த இடம் | செய்தவென்னும் வாய்பாட்டு இறந்த காலப் பெயரெச்சங்கள் அகர விகுதி பெற்றன. |

| | |
|---|---|
| **நடக்கின்ற யானை**<br>**போகின்ற பையன்**<br>**உண்கின்ற உணவு**<br>**இருக்கின்ற ஊர்** | செய்கின்ற என்னும் வாய்பாட்டு நிகழ்காலப் பெயரெச்சங்கள் அகரவிகுதி பெற்றன. |
| **நடக்கும் மாடு**<br>**போகும் மனிதன்**<br>**உண்ணும் கந்தன்**<br>**இருக்கும் இடம்** | செய்யும் என்னும் வாய்பாட்டு எதிர்காலப் பெயர் எச்சங்கள் "உம்" விகுதி பெற்றன. |

எதிர்மறைத் தெரிநிலை வினைப் பெயர் எச்சங்கள் '**ஆ**' என்னும் எதிர்மறை இடைநிலை பெற்று வரும்.

**செய்கிலாத மாடு** (எதிர்மறை)

எதிர்மறைப் பெயர் எச்சங்களின் ஈறு கெட்டு வருதலும் உண்டு.

**ஓடாத குதிரை = ஓடாக் குதிரை**

என ஈறுகெட்டது.

குறிப்பு வினைப் பெயர் எச்சங்கள் இவ்வாய்பாடுகளில் அடங்கா; வாய்பாடுகள் எல்லாம் தெரிநிலை வினைக்கே உரியன. குறிப்பு வினைப் பெயரெச்சம் '**அ**' என்னும் விகுதி ஒன்றே உடையது.

**உதாரணம் :—**

| உடன்பாடு | எதிர்மறை |
|---|---|
| **கரிய குதிரை** | **இல்லாத பொருள்** |
| **சிவந்த தாமரை** | **அல்லாத வழி** |

இல்லாத, அல்லாத என்பனவும் ஈறுகெட்டு இல்லாப் பொருள் அல்லா வழி என வருதலும் உண்டு.

குறிப்பு :—

'**கரிய**' என்பது போன்ற குறிப்பு வினைப் பெயர் எச்சங்களையும் காலத்தைக் குறிப்பினாலே அறிந்து,

**கரியதாயிருந்த,**
**கரியதாயிருக்கின்ற,**
**கரியதாயிருக்கும்,**

என விரித்துக்கொள்க.

பெயர் எச்சங்கள், வினையாலணையும் பெயர்களைக் கொண்டு முடியா. தொழிற்பெயர்களையும்,

**கொத்திய கொத்தல்,**
**ஆடின ஆட்டம்,**
**கண்ட காட்சி,**

என்பவை போல இயைபு பெற்றே கொண்டு முடியும்.

**II. வினை எச்சம் :—**

வந்து, வர, வரின் என்பவை போன்றனவும் பொருள் நிறைவேறாத வினைச்சொற்களுள் ஒரு வகையாகும். இங்கே 'வந்து' என்பது முதலாய எச்சங்கள் தங்கருத்தை முடித்துக்கொள்ள எந்தச் சொல்லை நாடுகின்றன என்று பார்ப்போம். வந்து குதிரை என முடிகிறதா என்று பாருங்கள். அப்படி முடித்தால் முன்போலவே சிரிக்கிறீர்கள். வந்து நின்றான் ; வந்து போன ; வந்து கண்டு என முடித்துக்கொண்டால் ஒப்புக்கொள்வீர்களா ? நல்லது. அஃது ஒப்புக்கொள்ளத் தக்கதே. ஆகவே, வந்து, வா, வரின் என்பவை போன்ற எச்சங்கள் வினைகளையே கொண்டு முடியும் என அறிந்துகொண்டீர்கள். இவைகளும் இவைபோன்ற எச்சங்களுமே வினை எச்சங்களாகும் எனவும் அறிந்துகொள்க.

வினை எச்சங்கள், **செய்து**, **செய**, **செயின்** என்னும் மூன்று வாய்பாடுகளில் அடக்கிக்கொள்ளப்படும்.

**உ**, **ய்**, **இ** என்னும் விகுதிகள் இறந்தகாலம் காட்டுவன. இவ்விகுதிகளையுடைய வினை எச்சங்கள் எல்லாம் செய்து என்னும் வாய்பாட்டிலடங்கும்.

" **அ** " என்னும் விகுதி நிகழ்காலம் காட்டும். இவ்விகுதியையுடைய வினையெச்சம், செய என்னும் வாய்பாட்டிலடங்கும்.

**இன், இல், ஆல், கால், ஏல், ஏனும், கு, வழி, இடத்து** என்னும் விகுதிகள் எதிர்காலம் காட்டும். இவ்விகுதிகளைப் பெற்ற எச்சங்கள் எல்லாம் செயின் என்னும் வாய்பாட்டிலடங்கும்.

**உதாரணம் :—**

உடன்பாடு

| இறந்தகாலம் செய்து | நிகழ்காலம் செய | எதிர்காலம் செயின் |
| --- | --- | --- |
| நடந்து வந்தான் (உ) | பாட முடியாது (அ) | அடிக்கின் வருவான் (இன்) |
| பாடி இளைத்தான் (இ) | நடக்க வருதி (அ) | படிப்பில் நன்று (இல்) |
| போய் நின்றேன் (ய்) | | வந்தால் வருவேன் (ஆல்) |
| | | படித்தக்கால் பயனுண்டு (கால்) |
| | | உண்ணற்கு வரும் (கு) |
| | | போவையேல் போகுதி (ஏல்) |
| | | உண்டேனும் செல்லான் (ஏனும்) |
| | | கண்ட வழி நடுங்கும் (வழி) |
| | | இருந்த இடத்து வருவல் (இடத்து) |

எதிர்மறைத் தெரிநிலைவினை வினை எச்சங்கள் **ஆ** என்னும் எதிர்மறை இடைநிலையினையும், **மல், மை, மே, து** என்னும் விகுதிகளுள் ஒன்றனையும் பெற்று வரும்.

**உதாரணம் :—**

**உண்ணு**மல் வந்தான், **செல்லா**மை வேண்டும்,
போகாமே இருந்தான், **தின்னு**து வரும்.

**குறிப்பு வினை எச்சம் :—**

| உடன்பாடு | எதிர்மறை | |
| --- | --- | --- |
| **மெல்ல** நடந்தான். | அல்லாமல் | |
| **பையப்** போனுன். | அல்லாமை | |
| | அல்லாமே | |
| | அல்லாது | |
| | இல்லாமல் | வந்தான் |
| | இல்லாமை | |
| | இல்லாமே | |
| | இல்லாது | |

அன்றி } நொந்தான்.
இன்றி }

இவ்விரண்டும் "ஆ"கார எதிர்மறையிடைநிலைபெறு.

வினை எச்சங்கள் எல்லா வினைச்சொற்களையும், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்களையும் கொண்டு முடியும்.

வினைமுற்றுக்களுள்ளே,

செய்யுமென்னும் முற்றும்,
வியங்கோள் வினைமுற்றும்,
ஏவல் வினைமுற்றும்,

இன்னும் சிலவும் வினையாலணையும் பெயர்களாக வாரா.

38. **பயிற்சி வினுக்கள் :—**

1. பெயர் எச்சமாவது யாது ?
2. பெயரெச்சங்கள் எந்த வாய்பாடுகளில் அடங்கும் ?
3. வினை எச்சங்களை எவ்வாறு அறியலாம் ?
4. அவற்றை எந்த வாய்பாடுகளில் அடக்கலாம் ?
5. அரசன் காட்டிற்கு வேட்டையாடப் போனுன் ; கண்ட மிருகங்களையெல்லாம் அம்பால் எய்து கொன்ருன் ; வெயில் எறித்தமையால் இளைத்து விட்டான் ; இளைப்பாற ஒரு மரத்தடிக்குப் போனுன் ; அங்கே ஏவலாளர்களும் வந்து சேர்ந்த னர் : அவர்களைப் பார்த்த அரசன் மகிழ்ந்தான். இதிலுள்ள எச்சங்களை வகைப்படுத்துக.
6. பின் வரும் தொடர்களில் கீற்றிடப்பட்ட இடங்க ளில் ஏற்ற எழுத்துக்களை எழுதி எச்சங்களாக்கி நிரப்புக :—
   (அ) கந்தன் மரத்திலிருந்து விழ———இறந்தான்.
   (ஆ) நான் சொல்———கதை நன்ருயிருக்கிறதா ?
   (இ) வேலனும் இப்போது இங்கே இரு—நல்லது.
   (உ) காலையில் யாழ்ப்பாணம் போ——தகப்பனுர் இப்போதுதான் வந்தார்.
   (எ) யான் எனது பிதா மாதாக்களின் சொற்படி நட———வேண்டும்.
7. ஐந்தாவது பயிற்சியினுல் நிரப்பப்பட்ட எச்சங்களை வகைப்படுத்திக் கூறுக.

(இ) **வினையாலணையும் பெயர் :—**

1. இராமன் வேலனை **வெட்டினன்.**
2. **வெட்டினன்** எங்கே போனன் ?
3. **வெட்டினனைக்** கண்டாயா ?
4. **வெட்டினனால்** என்ன நேர்ந்தது ?
5. **வெட்டினனுக்கு** யார் சோறு கொடுத்தார் ?

மேலே ஐந்து சொற்றொடர்கள் இருக்கின்றன. முதலாவது சொல் தொடர் இராமன் வேலனை வெட்டினன் என்பதாம். இதில், வெட்டினன் என்பதை வினை முற்று என்று சொல்லிவிடுவீர்கள். ஏனைய 2-ஆம், 3-ஆம், 4-ஆம், 5-ஆம் சொற்றொடர்களில் 'வெட்டினன்' என்னும் வினைமுற்றைப் போலவே உருவத்தில் வேறுபாடில்லாத ' வெட்டினன் " என்னும் சொற்கள் வந்திருக்கின்றன.

வெட்டுதலாகிய தொழிலைச் செய்தவன் இராமன் அவன் வெட்டியபடியினலே, இராமன் என்னும் இயல்பான பெயரை விட்டு அவனை வெட்டினன் என்று வழங்கினர்கள். இப்போது வெட்டினன் என்பது இராமனுக்கு அவன் செய்த தொழிலால் (வினையால்) வந்த பெயராயிற்று. 2-ஆம், 3-ஆம், 4-ஆம், 5-ஆம் சொற்றொடர்களிலுள்ள வெட்டினன் என்பவையெல்லாம் இராமனுக்குப் பெயராயின. இது வினைமுற்றாகவே நின்று பெயர்த் தன்மை அடைந்திருப்பதால், வினையாலணையும் பெயர் எனப்படும்.

வினையாலணையும் பெயர்கள் வேற்றுமையை ஏற்று வரும். வினைமுற்று வேற்றுமையை ஏலாது.

வினை (முற்று) ஆல் அணையும் பெயர் = வினையாலணையும் பெயர்.

**தெரிநிலை வினையாலணையும் பெயர்கள் :—**

**உதாரணம் :—**

**உடன்பாடு**

**செய்தானைக் கண்டேன்.**

செய்கின்ருனைக் கண்டேன்.
செய்வானைக் கண்டேன்.

எதிர்மறை

வந்திலதை அறிந்தேன்.
வருகின்றிலதை அறிந்தேன்.
வாராததை அறிந்தேன்.

குறிப்பு வினையாலணையும் பெயர்கள் :—

(பண்டு) பொன்னனைக் கொணர்ந்தேன்.

(ஈ) தொழில் பெயர் ;—

தொழில்களின் பெயர்களை உணர்த்துவனவெல்லாம் தொழிற்பெயர் என்று முன்னர் அறிந்திருக்கிறீர்கள். இதுவும் பெயர்ச்சொல்லேயாயினும், முற்றிலும் பெயர்த் தன்மையுடையதன்று.

வினைச்சொற்கள் எல்லாவற்றையும் பலவேறு பிரிவுகளாகப் பிரித்துப் படித்துக்கொண்டோம். இவற்றுள் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் இடவகையான் வந்த தெரிநிலைவினை, குறிப்பு வினை (உடன்பாடு, எதிர் மறை) முற்றுக்கள் எல்லாம் வினைமுற்று என்னும் ஒரே யொரு வகையிலும், எச்சங்கள் எல்லாம் பெயர் எச்சம் வினை எச்சம் என இரண்டு வகையிலும் அடக்கப்படும். இவற்றுள் அடங்காது பெயர்த்தன்மைப்பட்டு வருதலினுலே வினையாலணையும் பெயர் என்று ஒரு வகை வினையும், தொழிற்பெயர் என்று ஒரு வகை வினையும் ஆகி வருதலை மேலே அறிந்தோம்.

எனவே வினைச்சொற்கள்,

வினை முற்று
வினை எச்சம்
பெயர் எச்சம்
வினையாலணையும் பெயர்
தொழிற்பெயர்

என ஐவகைப்படுதல் காண்க.

| தன்வினை | | | பிறவினை | | |
|---|---|---|---|---|---|
| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்கா |
| செய்தான் | செய்கின்றான் | செய்வான்<br>செய்யும் | செய்வித்தான் | செய்விக்கின்றான் | செய்விப்<br>செய்விக் |
| செய்தாள் | செய்கின்றாள் | செய்வாள்<br>செய்யும் | செய்வித்தாள் | செய்விக்கின்றாள் | செய்விப்<br>செய்விக் |
| செய்தார் | செய்கின்றார் | செய்வார் | செய்வித்தார் | செய்விக்கின்றார் | செய்விப |
| செய்தது | செய்கின்றது | செய்வது<br>செய்யும் | செய்வித்தது | செய்விக்கின்றது | செய்விப்<br>செய்விக் |
| செய்தன | செய்கின்றன | செய்வன<br>செய்யும் | செய்வித்தன | செய்விக்கின்றன | செய்விப்<br>செய்விக் |
| செய்தேன் | செய்கின்றேன் | செய்வேன் | செய்வித்தேன் | செய்விக்கிறேன் | செய்விப் |
| செய்தோம் | செய்கின்றோம் | செய்வோம் | செய்வித்தோம் | செய்விக்கிறோம் | செய்விப் |
| செய்தாய் | செய்கின்றாய் | செய்வாய் | செய்வித்தாய் | செய்விக்கின்றாய் | செய்விப |
| செய்தீர் | செய்கின்றீர் | செய்வீர் | செய்வித்தீர் | செய்விக்கின்றீர் | செய்விப |
| | | செய்யாய் | | | செய்வியா |
| | | செய்யீர் | | | செய்வியீ |
| | | செய்க | | | செய்விக் |
| செய்தான் | செய்கின்றான் | செய்வான் | செய்வித்தான் | செய்விக்கின்றான் | செய்விப |
| செய்து | செய் | செயின் | செய்வித்து | செய்விக்க | செய்விக் |
| செய்த | செய்கின்ற | செய்யும் | செய்வித்த | செய்விக்கின்ற | செய்விக் |
| | | செய்வது | | | செய்விப |
| | செய்தல் | | | செய்வித்தல் | |

குறிப்பு :—மேலே காட்டப்பட்டவையெல்லாம் உடன்பாட்டிற்குரிய வாய்பாடுகளாம்.

(2) தன்வினையும் பிறவினையும் செய்வினையாக அடங்குமாதலால், செய்வினை என்

(3) படர்க்கை ஆண்பால் வினையாலணையும் பெயர் வாய்பாடுமட்டுமே காட்ட
பெயர்கட்கும், தன்மை, முன்னிலை, வினையாலணையும் பெயர்கட்கும் மேலே

(4) "செய்விக்கப்பட்டான்" எனவும் செயப்பாட்டுவினை வரும். பிறவினை வா

## ...சாற்களின் வாய்பாடு

| | செயப்பாட்டு வினை | | | வினைவகை |
|---|---|---|---|---|
| ...காலம் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | |
| ...ிப்பான்<br>...ிக்கும் | செய்யப்பட்டான் | செய்யப்படுகிறான் | செய்யப்படுவான்<br>செய்யப்படும் | ஆண்பால் வினைமுற்று |
| ...ிப்பாள்<br>...ிக்கும் | செய்யப்பட்டாள் | செய்யப்படுகிறாள் | செய்யப்படுவாள்<br>செய்யப்படும் | பெண்பால் வினைமுற்று |
| ...ிப்பார் | செய்யப்பட்டார் | செய்யப்படுகின்றார் | செய்யப்படுவார் | பலர்பால் வினைமுற்று |
| ...ிப்பது<br>...ிக்கும் | செய்யப்பட்டது | செய்யப்படுகின்றது | செய்யப்படுவது<br>செய்யப்படும் | ஒன்றன்பால் வினைமுற்று |
| ...ிப்பன<br>...ிக்கும் | செய்யப்பட்டன | செய்யப்படுகின்றன | செய்யப்படுவன<br>செய்யப்படும் | பலவின்பால் வினைமுற்று |
| ...ிப்பேன் | செய்யப்பட்டேன் | செய்யப்படுகிறேன் | செய்யப்படுவேன் | தன்மை ஒருமை வினைமுற்று |
| ...ிப்போம் | செய்யப்பட்டோம் | செய்யப்படுகின்றோம் | செய்யப்படுவோம் | தன்மைப் பன்மை வினைமுற்று |
| ...ிப்பாய் | செய்யப்பட்டாய் | செய்யப்படுகின்றாய் | செய்யப்படுவாய் | முன்னிலை ஒருமை வினைமுற்று |
| ...ிப்பீர் | செய்யப்பட்டீர் | செய்யப்படுகின்றீர் | செய்யப்படுவீர் | முன்னிலைப் பன்மை வினைமுற்று |
| ...ியாய் | | | செய்யப்படாய் | ஏவல் ஒருமை |
| ...ியீர் | | | செய்யப்படுவீர் | ஏவல் பன்மை |
| ...ிக்க | | | செய்யப்படுக | வியங்கோள் |
| ...ிப்பான் | செய்யப்பட்டான் | செய்யப்படுகிறான் | செய்யப்படுவான் | வினையாலணையும் பெயர் |
| ...ிக்கின் | செய்யப்பட்டு | செய்யப்பட | செய்யப்படின் | வினை எச்சம் |
| ...ிக்கும் | பய்யப்பட்ட | செய்யப்படுகின்ற | செய்யப்படும் | பெயா எச்சம் |
| ...ிப்பது | | | செய்யப்படுவது | காலம் காட்டும் தொழிற் பெயர் |
| | | செய்யப்படுதல் | | காலம் காட்டாத தொழிற் பெயர் |

...ம். அவைகளையே எதிர்மறையாக்கி எதிர்மறை வாய்பாடுகளை அமைத்துக்கொள்க.
...ன்றோர் பகுதி கொள்ளப்படவில்லை. தன்வினை பிறவினை வாய்பாடுகளையே செய்வினைக்குங் கொள்க.
...ட்டப்பட்டது. ஏனைய பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால், படர்க்கை வினையாலணையும்
...மலே காட்டிய வினைமுற்றுக்களையே வாய்பாடாக அமைத்துக்கொள்க.
...வாய்பாடுகட்கெல்லாம், படு விகுதி சேர்த்து அவற்றை அவ்வாறு அமைத்துக்கொள்க.

16. **வினைச்சொற்களுக்குப் பகுதி காணும் முறை :—**

அவன் விழுந்தான் ; நீயும் உடனே விழு.
அவன் செத்தான் ; நீயும் உடனே சா.
அவன் தருகின்றான் ; நீயும் உடனே தா.
அவன் கற்றான் ; நீயும் உடனே கல்.
அவன் பெற்றான் ; நீயும் உடனே பெறு.

என்றபடி "இது செய்தான் ; இது செய்" என ஏவ அந்தந்த வினைச்சொற்களின் பகுதி தாமே புலப்படும்.

| **வினைச்சொல்** | பகுதி |
| --- | --- |
| விழுந்தான் | விழு |
| செத்தான் | சா |
| தருகின்றான் | தா |
| வந்தான் | வா |
| கற்றான் | கல் |
| பெற்றான் | பெறு |

17. **தெரிநிலை வினைச்சொற்களுக்கு வாய்பாடு :—**

'முருகா ! நீ என்ன செய்கிறாய் ?' என்று அவனைக் கேட்டால் உண்கிறேன், விளையாடுகிறேன், படிக்கிறேன் எனப் பல விடைகளுள் ஒன்றனைக் கூறுவான்.

இங்கே உண்ணல், விளையாடுதல், படித்தல் முதலிய பல வினைகட்கும் "செய்தல்" என்பதுவே பொது வினையாக இருக்கிறது.

ஆகவே, '**செய்**' என்னும் வினையடியையே எல்லாத் தெரிநிலை வினைச்சொற்கட்கும் உரிய பொது வாய்பாடாக அமைத்துக்கொள்வோம்.

**எல்லாத் தெரிநிலை வினைச்சொற்களின்தும் வாய்பாடுகளைப் பின் வரும் படத்திற் காண்க.**

18. **உரைநடைப் பங்கீடு :—**

பொதுவாகக் கிடக்கும் சொற்களைப் பொருட் பொருத்தமுற இணைத்து உரைவழியால் ஆக்கும் நடை

உரைநடை எனப்படும். நடை—வாக்கியம், வசனம் எனவும், செய்யுள் எனவும் இரு வகைப்படும்.

உதாரணம் :—

1. கந்தன் மாட்டை அடித்தான் என்பது
உடைநடை வடிவம்.

2. மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி யருகணைய—நன்னுதலும்
தன்னுடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னுடல் சொல்லென்றாள் ஈங்கு,

இது செய்யுள் நடை வடிவம்.

இவ்விருவகையான நடைகளும் பல வேறு வகையான உறுப்புக்களால் ஆக்கப்பட்டுள்ளன. அவையெல்லாவற்றையும் இப்போது அறிய வேண்டுவதில்லை. உரைநடை வடிவங்களில் உள்ள சில உறுப்புக்களை மட்டும் பிரித்து அறிந்துகொள்வோம்.

"இராமன் வெட்டினான்."

என்பது இரண்டு சொற்களினாலே ஆக்கப்பட்ட ஒரு தொடர். இங்கு "இராமன்" என்பது கருத்தா ஆகவும், "வெட்டினான்" என்பது பயனிலையாகவும் வந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். மேலே காட்டிய உரைநடைக்கு இக்கருத்தாவும் பயனிலையும் இரண்டு உறுப்புக்களாக அமைந்துள்ளன. கருத்தா = எழுவாய்

'இராமன் மரத்தை வெட்டினான்.'

என்பது ஓர் உரைநடையாம். இதில் மேலே காட்டிய இரண்டு உறுப்புக்களும் அமைந்திருத்தலை நீங்கள் நன்கு அறிவீர்கள். இவ்விரண்டுறுப்புக்களையும்விட "மரம்" எனப்பட்ட செயப்படு பொருளும் உறுப்பாக வந்திருக்கிறது. ஆகவே, இவ்வுரைநடை, எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்று உறுப்புக்களால் ஆக்கப்பட்டிருப்பதை அறிந்துகொள்ளுங்கள். இம்

மூன்று உறுப்புக்களும் உரைநடை வடிவங்களில் வரும் பிரதானமான உறுப்புக்களாம்.

மேலும், இம்மூன்று உறுப்புக்களின் தன்மைகள் யாவற்றையும் விளக்கி வரும் சொற்களும் உரைநடைகளிலே சேர்க்கப்பட்டு வருதலும் உண்டு. இவ்வாறு வரும் சொற்கள் "அடைமொழிகள்" அல்லது "விசேடணங்கள்" எனப்படும்.

**உதாரணம் :—**

> "**பசித்த கந்தன் சமைத்த சோற்றைப் பிசைந்து உண்டான்.**"

என்னும் இவ்வுரை நடையில், பயனிலை உண்டான் என்பது ; எழுவாய் கந்தன் என்பது; செயப்படுபொருள் சோறு என்பது. இம்மூன்று உறுப்புச் சொற்களையும் விட, பசித்த, சமைத்த, பிசைந்து என வேறு மூன்று சொற்களும் வந்திருக்கின்றன அல்லவா ?

இவற்றுள், பசித்த என்பது எழுவாயாகிய கந்தனையும், சமைத்த என்பது செயப்படுபொருளாகிய சோற்றையும், பிசைந்து என்பது உண்டான் என்னும் பயனிலையையும் அடுத்து வந்த அடைமொழிகள்.

இப்போது உரைநடைகளின் உறுப்புக்களுள்,

**எழுவாய்**
**பயனிலை**
**செயப்படுபொருள்**
**அவ்வவற்றின் அடைமொழி**

என்னும் நான்கு உறுப்புக்களையும் அறிந்துகொண்டோம்.

இவற்றுள் எழுவாய், பயனிலையை 'யார் ? எது ? யாவை ?' என்னும் வினுக்களுள் இயைபுடைய ஒரு வினுவுடனே சேர்த்து வினவ விடையாக வருவது ஆகும்.

**உதாரணம் :—**

மாடு நடந்தது.

என்னும் இவ்வுரைநடையில் பயனிலை நடந்தது என்பதாகும். இப்பயனிலையோடு சேர்த்து, 'எது நடந்தது ?' என்று வினவ, மாடு (நடந்தது) என்னும் விடைதானே பெறப்படுகிறது? ஆகையால் மாடுஎன்பது எழுவாயாகும்.

இப்பயனிலையை எவனை, எவளை, எவரை, எதனை, எவற்றை, யாரை எனவரும் வினாக்களுள் ஏற்புடைய ஒன்றனைக்கொண்டு விடையாக வருவது செயப்படுபொருளாகும்.

உதாரணம் :—

**வேலன் வேலியை அடைத்தான்.**

என்னும் இவ்வுரைநடையில் யார் என்ற வினாவுக்கு விடையாக வேலன் என்பது வந்திருப்பதனால், வேலன் எழுவாயாயிற்று. செயப்படுபொருள் பெறப்பட 'எதனையடைத்தான் ?' என்று வினாவுவோம். அப்படி வினாவுமிடத்து வேலியை (யடைத்தான்) என்ற விடை தானே பெறப்படுகின்றது? ஆகவே, வேலி என்பது செயப்படுபொருளாயிற்று.

இவ்வெழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவைகளின் இலக்கணமெல்லாம் முன்பு வேற்றுமை இலக்கணத்துட் கூறப்பட்டன.

இவற்றுள் எழுவாயைச் சிறப்பித்து வருவன எழுவாயின் அடைமொழிகளாகவும், செயப்படுபொருளைச் சிறப்பித்து வருவன செயப்படுபொருளின் அடைமொழியாகவும், பயனிலையைச் சிறப்பித்து வருவன பயனிலையின் அடைமொழியாகவும், அடைமொழிகள் கொள்ளப்படும். அடைமொழிகளைப் பொருள் விரிவு எனவும், பொருட்பெருக்கெனவும் கூறுவர்.

உதாரணம் :—

**"பெரிய மனிதன் நடந்தான்."**

என்னுமிவ்வுரைநடையில், பயனிலை நடந்தான் என்பது. எழுவாய் மனிதன் என்பது. பெரிய என்ற சொல், நடந்த மனிதனாகிய எழுவாயைச் சிறப்பித்து நிற்றல் காண்க. ஆகையால், இங்குப் பெரிய என்னும் அடைமொழி எழுவாய்க்குரிய அடைமொழியாயிற்று.

**'பொன்னன் வயிரப் பனையைத் தறித்தான்.'**

இவ்வுரைநடையில்,

பொன்னன் எழுவாய்
தறித்தான் பயனிலை.

பனை செயப்படுபொருள்.

வயிரம் என்பது பனையைச் சிறப்பித்து வந்தது. ஆனபடியால் அது செயப்படு பொருளுக்குரிய அடைமொழியாயிற்று.

"முருகனுக்கு மகனாகிய கண்ணன் தேடுதற்கரிய பொருள்களை வீணே செலவு செய்தான்."

இவ்வுரைநடையில்,

கண்ணன் எழுவாய்.
செலவு செய்தான் பயனிலை.
பொருள் செயப்படுபொருள்.

முருகனுக்கு மகனாகிய என்னும் சொற்கள் எல்லாம் கண்ணனைச் சிறப்பித்தும், தேடுதற்கரிய என்னும் சொற்கள், செயப்படுபொருளைச் சிறப்பித்தும் வந்த அடைமொழிகள். வீணே என்பது செலவு செய்தான் என்னும் பயனிலையை விளக்கி வந்தது. ஆகையால், வீணே என்பது பயனிலைக்குரிய அடைமொழியாகும்.

எழுவாயையும் அதன் அடைமொழிகளையும் சேர்த்து எழுவாய்ப்பகுதி எனவும்,

செயப்படுபொருளையும் அதன் அடைமொழிகளையுஞ் சேர்த்துச் செயப்படுபொருள் பகுதி எனவும்,

பயனிலையையும் அதன் அடைமொழியையும் சேர்த்துப் பயனிலைப் பகுதி எனவும் கூறுவர்.

உதாரணம் :—

"சிங்கப்பூரில் இருந்த வேலன், விலை மதிப்பிடுதற்கரிய பொருள்களைச் சம்பாதித்துக்கொண்டு விரைந்து வந்தான்."

இந்த உரைநடையில் எழுவாய் வேலன் என்பது. அவனை விளக்கி வந்த சொற்கள் "சிங்கப்பூரில் இருந்த" என்பவை. இவ்வெழுவாயும் அடைமொழிகளும் சேர்ந்த பகுதியாகிய "சிங்கப்பூரில் இருந்த வேலன்" என்ற அவ்வளவும் எழுவாய்ப்பகுதியாம்.

செயப்படுபொருள், பொருள் என்பதாகும். அதை விளக்கி வந்த சொற்கள், விலை மதிப்பிடற்கு அரிய என்

பவை. ஆகவே "விலைமதிப்பிடற்கரிய பொருள்" என்ற அவ்வளவும் செயப்படுபொருட்பகுதியாம்.

பயனிலை வந்தான் என்பது. அதை விளக்கிய சொற்கள, சம்பாதித்துக்கொண்டு விரைந்து என்பன. ஆகவே, "சம்பாதித்துக்கொண்டு விரைந்து வந்தான்" என்னும் பகுதி பயனிலைப் பகுதியாம்.

உரைநடைகளிலுள்ள சொற்கள், எந்தெந்த உறுப்புக்களாக அமைந்திருக்கின்றன என்பதைப் பிரித்தறிதலே உரைநடைப் பங்கீடு செய்தல் என்பதாகும். இதனைப் "பங்கீகரணம் செய்தல்" என்று கூறுவாருமுளர்.

## 39. பயிற்சி வினுக்கள் :—

1. வசனங்களிலுள்ள பிரதானமான உறுப்புக்கள் யாவை ?
2. பொன்னனுக்குக் கண்ணன் என்று ஒரு மகன் இருந்தான்! அவனை அவனுடைய தகப்பனர் படிக்க வைத்தார்; அவன் பாடசாலையிலே படித்து வந்தான்; அவன் எல்லா வகுப்புகளிலும் முதல் மாணவனுகத் தேறி வந்தான்; அதனுல் ஆசிரியர்கட்கு அவனிடத்தில் மிகுந்த பிரியம் உண்டு; கண்ணனும் ஆசிரியர்களிடத்தில் மிகுந்த பணிவும் பத்தியும் உடையவன்: அவன் கல்வி ஆசிரியர்களுடைய ஆசியினுலே மேன்மேலும் வளர்ந்தோங்கியது; ஈற்றில் அவன் மிக மேலான நிலையை அடைந்தான்; அவனைப் பெற்ற தகப்பனுன பொன்னனை எல்லாரும் புகழ்வார்கள்.

   இதிலுள்ள வாக்கியங்களின் உறுப்புக்களைப் பிரித்துக் காட்டுக; உறுப்புப் பகுதிகள் எவை யெனக் காட்டுக.

## iii. இடைச்சொல்

பெயர்த்தன்மைப்படாமலும், வினைத்தன்மைப்படாமலும், பெயர்ச்சொற்களுக்கும் வினைச்சொற்களுக்கும் உறுப்பாக நின்ருவது, அவற்றின் முன்னும் பின்னும் ஆகிய இடங்களைச் சார்ந்து நின்ருவது தம் பொருளை அந்தப் பெயர்களும் வினைகளும் அடையுமாறு செய்யும் சொற்கள் எவையோ, அவை இடைச்சொற்கள் எனப்படும்.

இடை = இடம், நடுப்பகுதி முதலியன.

முன்பு வேற்றுமைகளைப் பற்றிப் படித்திருக்கின்றோமன்றோ? அவ்வேற்றுமையை உணர்த்துகின்ற ஐ, ஆல், ஆன், ஒடு, ஓடு, கு, இல், இன், அது, ஆது, அ, கண் ஆதியனவாகிய உருபுகள் எல்லாம் இடைச்சொற்களேயாம். பெயர்ப்பொருளை அவைகள் வேறுபடுத்தி உணர்த்தி நிற்றலை அவ்விடங்களில் விளக்கமாகக் கூறினோம்.

அன், ஆன், அள், ஆள் முதலிய விகுதிகள் எல்லாம் இடைச்சொற்களே.

த், ட், ற், ன், ஆநின்று, கின்று, கிறு, ப், வ் என்னும் காலங் காட்டும் இடைநிலைகளும் இடைச்சொற்களே. காலங் காட்டாது வரும் இடைநிலைகளும் இடைச்சொற்களே.

உதாரணம் :—

**அறிஞன் = அறிவு + ஞ் + அன்—"ஞ்" பெயரிடைநிலை.**

சுட்டுப் பொருள் தரும் அ, இ, உ என்பவைகளும், வினாப் பொருள் தரும் எ, யா, ஆ, ஓ, ஏ என்பவைகளும் இடைச்சொற்களே.

அதிசயப்படும்போது கூறும் "அம்மா" என்பதும் இடைச்சொல்லே.

துன்பப்படும்போது கூறும் ஐயோ! அந்தோ! என்பவைகளும் இடைச்சொற்களே.

விரைவுப் பொருளைக் குறிக்கும் "ஞெரேலென", "பட்டென", "திடுதிடென" என்பவை முதலானவைகளும் இடைச்சொற்களே.

அருவருப்புப் பொருள் தரும் சிச்சீ! "தூ" என்பவைகளும் இடைச்சொற்களே.

நானும் அவனும் வந்தோம் என்பதில் வருபவை போலவும் பிறவாறும் வருகின்ற "உம்" என்ற சொல்லும் இடைச்சொல்லே.

நீயும் நானும் கோயிலுக்குப் போனோம்; ஆனால் கந்தன் வரவில்லை. என்பது போன்ற இடங்களில் வரும் "ஆனால்" என்பதும் இடைச்சொல்லே.

"சந்திரன் போலும் முகம்" என்றுங்கு வரும் "போலும்" என்ற சொல்லும் இடைச்சொல்லே. இது போலவே வரும் போல, ஒப்ப, நிகர்க்க என்பனவும் இடைச்சொற்களே.

இவ்வாறு வரும் இடைச்சொற்கள் இன்னும் பலவுள. அவற்றின் விரிவான இலக்கணங்களை மேல் வகுப்புக்களிற் படிப்போம்.

## iv. உரிச்சொல்

நன்மை, கருமை, நிறைவு முதலாகிய பல வகைப் பட்ட பண்புகளைக் குறிப்பனவற்றிற்குப் பெயராகாமல் நன்மை (நல் + மை) என்பதில் நல் எனவும், 'கருமை' (கரு + மை) என்பதில் 'கரு' எனவும், 'நிறைவு' என் பதில் 'நிறை' எனவும் தனித்து நிற்கும்போது அவ்வாறு தனித்து நிற்பவை உரிச்சொற்கள் எனப்படும்.

'கரு' என்பதை நோக்கினுல், அந்தச்சொல் ஏதோ ஒரு பொருளைக் கொண்டுள்ளது என்பதுமட்டும் நமக்குப் புலனுகும். ஆனுல், அதன் பொருள் இன்னதுதான் என்று வெளிப்படுத்தவியலாது. நாம் அதனை வெளிப் படுத்த முயலின், அது, (கரு + மை) கருமை எனப் பண்புப் பெயராகவும், கரிது எனக் குறிப்புவினையாகவும் வேறு பிறவாருகவும் வடிவு கொள்ளும்.

சால் (நிறை) என்பது ஓர் உரிச்சொல். அது, சான் ருன் (சால் + ற் ஆன்—நிறைந்தான்) என முற்ருகவும், சான்ற, சாலுகின்ற, சாலும் எனப் பெயரெச்சமாகவும், சான்று, சால, சாலின் என வினை எச்சமாகவும், சாலுதல் எனத் தொழிற்பெயராகவும் பல வடிவுகளைக் கொள்ளும்.

பேரிலக்கண ஆராய்ச்சியுடையவரே உரிச்சொல்லைப் பற்றிய இயல்புகளை அறிந்துகொள்ளும் ஆற்றல் உடை யவர் ஆவார். இங்கு இயைபுக்காக இது சேர்த்துக் கொள்ளப்பட்டது.

சொல்லிலக்கணம் நிறைவேறியது.